Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 ஜன. 10-16, 2016 செய்தி - 15


# சைவக் கோவில்களும், பௌத்த மடாலயங்களும் இனங்கள் மத்தியில் இணக்கப்பாட்டை உருவாக்க வேண்டும்



சைவக் கோயில்கள் மற்றும் பௌத்த மடாலயங்களும் நாட்டில் இனங்களுக்கு மத்தியில் இணக்கப்பாட்டையும், நல்ல உறவையும், சமாதானத்தையும் உருவாக்கும் கைங்கரியங்களில் ஈடுபட வேண்டும். இவ்வாறு கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத்துறைத் தலைவர் வண.பேராசிரியர் விமலரட்ண தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'தினச்செய்தி'க்கு அவர் வழங்கிய விசேட செவ்வியில் தமிழ் சிங்கள இனங்களுக்கிடையில் குறிப்பாக சைவ-பௌத்த மதத்தினருக்கிடையில் புரிந்துணர்வையும், இணக்கப்பாட்டை உருவாக்க வேண்டிய அவசியம் பற்றியும் அவர் வற்புறுத்திக் கூறினார். அவர் தனது செவ்வியில் மேலும் குறிப்பிடுகையில், தீவிரவாதத்தினால் நாங்கள் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களை இழந்துவிட்டோம் என்றார். இவைகள் எல்லாம் இனமோதல்களால் ஏற்பட்டவை. வருங்காலத்தில் இவ்வாறான இன மோதல்கள் நிகழாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

☞ பார்க்க பக்கம் 2



## உள்ளே...

07. திருமலையில் தமிழ் பல்கலைக்கழகம் மறைக்கப்பட்ட உண்மைகள்

17. தமிழ் சினிமா பாடல்களில் கவிஞர் வாலி முதல் சிம்பு வரை

தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# சிங்ஹ லே சிங்கத்தின் இரத்தம் புதிய இனத்துவப் பிரசாரம்

முஸ்லிம், தமிழர்களுக்கான சிறுபான்மை இனங்களுக்கான புதிய இனத்துவப் பிரசாரம் 'சிங்ஹ லே' – சிங்கத்தின் இரத்தம் என்ற புதிய கோசத்துடன் தென்னிலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள முஸ்லிம், தமிழ் மக்களுக்கு எதிராக இனத்துவசத்தைத் தூண்டிவிடும் சிங்கத்தின் இரத்தம் என்ற பிரசாரம் நாடு பூராகவும் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

சிங்ஹ லே சிங்கத்தின் இரத்தம் என ஸ்ரிக்கர் அச்சடிக்கப்பட்டு நாடு பூராகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

'சிங்ஹ லே என்ற இனத்துவசப் பிரசாரத்தை வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் றூவான் பேடினான்டிஸ் தான் உருவாக்கினார் என்று, அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

வட பகுதியில் இந்தப் பிரசாரத்தின் தாக்கம் இன்னமும் தெரியவரவில்லை .

ஆனால் தென்பகுதியில் இந்தப் பிரசாரம் தீவிரமடைந்து வருகின்றது.

தென்பகுதியிலுள்ள முஸ்லிம் வீடுகளின் சுவர்களில் எல்லாம் திடீர் திடீர் என சிங்ஹ லே என்று அச்சிடப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

இந்தச் செயல்களினால் தென்பகுதியிலுள்ள முஸ்லிம்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

சிங்ஹ என்ற எழுத்து மஞ்சள் நிறத்திலும், லே என்ற எழுத்து சிவப்பு நிறத்திலும் பொறிக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சிங்ஹ லே என்ற எழுத்துக்கள் ஸ்ரிக்கர் மூலமாகவும், எழுத்துக்கள் மூலமாகவும் முஸ்லிம் வீடுகளில் பொறித்து வருவதற்கான காரணம் என்ன?

முஸ்லிம் மக்களைத் தாக்கி, ஒரு புதிய கலவரத்தை உருவாக்க எடுக்கும் திட்டமா, இது என இன்னமும் தெளிவாகவில்லை.

ஆனால், இதுவரையில் தமிழ் மக்களின் வீடுகளில் இந்த சிங்ஹ லே என்ற எழுத்துப் பொறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் மூன்றாவது மகனான ரோகித்த ராஜபக்ஸ, இந்த சிங்ஹ லே என்ற விடயம் சம்பந்தமாகத் தனது முகநூலில் குறப்பிட்டிருந்தார். "சிங்ஹ லே, பொதுபலசேனா, இயக்கத்தைப்போல உருமாறிவருவது மிகவும் கவலைக்குரிய விடயம்", என்று குறிப்பிட்டு, " இது ஒரு ஸ்ரீ லங்கன் இயக்கமாக மாற வேண்டும்" என்று ஆலோசனை வழங்கினார்.

நுகேகொடையில் சில முஸ்லிம்களின் வீடுகளில் முன்பக்கங்களில் சிங்ஹ லே என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டிருப்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அவருடைய முகநூல் குறிப்பு, திடீரென்று முளைத்த சிங்ஹ லே என்ற அமைப்பைக் கண்டிப்பதாக அமையவில்லை.

மேலும், அவர் முகநூலில் குறிப்பிடும் பொழுது, "எமது நாடு ஸ்ரீலங்கா என்று அழைக்கப்பட்டதன் காரணமாக இது சிங்கள மக்களுக்குரிய நாடு என்று கொள்ளக்கூடாது", என்று குறிப்பிட்டிருந்தார்.

சிங்ஹ லே என்ற இயக்கம் சமூக வலைத்தளங்களில் தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முகநூலில் இந்த அமைப்பின் பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது.

இந்தப் பிரசாரம் பொதுபலசேனாவையும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஆதரிப்பது போல் தேற்றமளிக்கின்றது. ஆனால், பொதுபலசேனாவோ, மகிந்தராஜபக்ஷவோ இந்த சிங்ஹ லே பிரசாரத்துடன் பகிரங்கமாகத் தங்களை இணைத்துக்கொள்ளவில்லை.

"புலிவருது, புலிவருது" என்று பகிடிக்குக் கூறுவதைப் போலவே தற்சமயம் இந்த சிங்ஹ லே பிரசாரம் உள்ளது.

ஆனால் உண்மையில் புலி வந்தால் எவ்வளவு அசம்பாவிதமாக இருக்குமோ, அதேபோலத்தான் இந்தச் சிங்ஹ லே இயக்கமும் உருவாகினால் விளைவுகள் விபரீதமாக இருக்கும்.

இங்கு குறிப்பிட்டுள்ள சிங்கம், மனித இரத்த வாடையை முகர்ந்து செல்லாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இன்றேல் இந்தச் சிங்ஹ லே சிறுபான்மை மக்களின் முஸ்லிம், தமிழர்களின் உயிர்கொல்லியாக மாற்றிவிடும் என்பதை நாம் இங்கே எச்சரிக்கின்றோம்.

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

# சைவக் கோவில்களும்...

தொடர்ந்து வண. பேராசிரியர் விமலரட்ண தேரர் 'தினச்செய்திக்கு வழங்கிய பேட்டியில் வருமாறு கூறினார். ''இனிவரும் காலத்தில் நாங்கள் சகோதரர்களாக – அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளாக, இந்த நாட்டின் இலங்கை மாதாவின் ஒரு தாய் பிள்ளைகளாக ஒற்றுமையாக வழவேண்டும்.

இந்த நாட்டிலுள்ள இனங்கள் மத்தியில் புரிந்துணர்வு இன்மையும், விளக்கமின்மையும் நிலவுகின்றது. எனவே நாம் புரிந்துணர்வுகளையும், பரஸ்பர உறவையும், நல்லெண்ணத்தையும் உருவாக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு புரிந்துணர்வுகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக உள்ள இடர்பாடு மொழியாகும். தடைகளை நீக்கி இன ஒற்றுமையுடன் முன்னேற மொழி ஒரு பெரிய பிரச்சினையாகவுள்ளது. இந்தப் பிரச்சினை இன்று நேற்று அல்ல. 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே, இந்த நாட்டில் மொழி ஒரு பிரச்சினையாக விளங்கி வருகின்றது.

கிராமிய மட்டத்தில் வாழும் மக்கள் மத்தியில் இந்த மொழி ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. கிராமத்தில் வாழும் மக்கள் சிங்களத்தை மட்டும், அல்லது தமிழை மட்டுமே பேசுகின்றனர். இந்தநிலை மாறவேண்டும். மும்மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டும். சிங்களமும், தமிழும் மட்டுமன்றி மூன்றாவது மொழியான ஆங்கிலத்தையும் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும்.

இந்த நாட்டினுள் நாம் சகோதரத்துவத்தைப் பேண முன்வரும் அதேவேளை இந்த உலகத்தையும் தெரிந்து கொள்ள முன்வர வேண்டும். நீங்கள் மூன்றாவது மொழியான ஆங்கிலத்தை தெரியாது இருந்தால் உலக வர்த்தக சந்தைகளையும் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளையும், சமகால நிலைமைகளையும் நாம் அறிய முடியாதவர்களாகி விடுவோம்.

நாங்கள் மும்மொழிக் கொள்கைகளை வரவேற்கவேண்டும். நாம் அனைவரும் மும்மொழியிலும் பாண்டித்தியம் பெறவேண்டும். இந்தத் திட்டத்தை மக்கள் முன் நாம் எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான சந்தர்ப்பங்களை மக்களுக்கு வழங்கவேண்டும்.

இன்று நாங்கள் சிங்களத்தையும், தமிழையும் பாடசாலைகளில் படிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். இவர்கள் இந்த இரண்டு மொழிகளிலும் மாணவர்கள் படித்து புலமையடைய நாம் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். இல்லையெனில் நாங்கள் அழிவினை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இன்றைய கட்டத்தில் நாங்கள் பரிமாற்றத்திட்டத்தை ஆரம்பிக்க முன்வரவேண்டும். உதாரணத்திற்கு வடக்கிலிருக்கும் சில மக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தெற்கில் வந்து வாழக்கூடிய ஒரு சொற்பகாலத்தையாவது உருவாக்கவேண்டும். சொற்பகாலம் என்றால் ஒரு வாரம், இரண்டு வார காலஎல்லையை நான் இங்கு குறிப்பிடுகின்றேன். அதே போல தெற்கிலுள்ள சிங்கள மக்களும் அந்தக்காலப் பகுதியில் வடபகுதிக்குச் சென்று ஒருசில வாரங்கள் அங்கு இணைந்து வாழ சந்தரப்பங்களை வழங்க வேண்டும்.


அதேநேரத்தில் பாடசாலை மாணவர்களையும் உதாரணமாக வடபகுதி மாணவர்களை தென்பகுதி பாடசாலைகளிலும், தென்பகுதி மாணவர்களை வடபகுதி பாடசாலைகளிலும் குறிப்பிட்ட காலத்தினுள் சென்று பயில சந்தர்ப்பங்கள் வழங்கவேண்டும்.

முன்பு தென்பகுதியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் சிலர், உதாரணத்திற்கு கே.பி. ரட்நாயக்கா, மைத்திரிபால சேனநாயக்க ஆகியோர் வடபகுதியில் சென்று கல்வி கற்றிருக்கின்றார்கள். அக்காலத்தில் கல்வியின் கேந்திர நிலையமாக யாழ்ப்பாணம் அமைந்திருந்தது.

மொழிகளைப் படிப்பதற்கு மாணவர் பரிமாற்றத்திட்டம் நல்லதொரு திட்டமாகும். உதாரணத்திற்கு வடபகுதியிலிருந்து நூறு, இருநூறு மாணவர்களை தென்பகுதிக்கு கல்விகற்க அனுப்பி வைக்க வேண்டும். அந்த மாணவர்களில் அக்கறை காட்ட தென்பகுதியில் வளர்ப்புப் பெற்றோர்களை, அதாவது அந்த மாணவர்களை நல்வழிப்படுத்துபவர்களை இனம் கண்டு இந்தப் பிள்ளைகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

அதேபோல தான் தென்பகுதியிலுள்ள நூறு, இருநூறு பிள்ளைகள் வடபகுதிக்கு வந்து வளர்ப்புப் பெற்றோரிடம் இருந்து கல்வி கற்கவேண்டும். அவர்களுக்கு வடபகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்க சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். இவ்வாறு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கல்வி பயிலவரும் பிள்ளைகள் தரம் 5, 6 வகுப்புக்கள் முடிவடைந்த பின்னர் அல்லது கா.பொ.த சாதாரண தரம் இன்றேல், அல்லது க.பொ.த உயர்தரம் முடிவடைந்த பின்னர் தமது சொந்த பிரதேசங்களுக்கு செல்லமுடியும்.

அவ்வாறு செல்ல விரும்பாத பிள்ளைகள் அவர்கள் கல்விகற்ற அதே பிரதேசத்திலும் வாழலாம். அங்கேயே வேலைவாய்ப்புகளையும் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் அதாவது தென்பகுதியிலிருந்து வந்தவர்கள் வடபகுதியிலுள்ளவர்களை திருமணம் செய்து கொண்டு வாழ விரும்பினாலோ, அல்லது வடபகுதியில் இருந்து வந்தவர்கள் தென்பகுதியில் உள்ளவர்களை திருமணம் செய்து கொண்டு வாழ விரும்பினால் அதற்கு நாம் ஒரு தடையாக இருக்கமாட்டோம்.



மொழி என்பது ஒருவர் தங்களை மற்றவர்களுக்கு புரிய வைக்க முயற்சிக்கும் ஒரு சாதனமே, அன்றி வேறொன்றும் இல்லை. அது போலவே மதமும் ஆகும். மதம் என்பது அவரவர் நம்பிக்கையைப் பொறுத்தவிடயம். இது ஒரு தனிமனிதனது சொந்த விடயங்களுமாகும்.

மதமும், மொழியும் நல்ல ஒரு உறவையும், நல்ல இணக்கப்பாட்டையும், புரிந்துணர்வையும் உருவாக்குவதற்கு எப்பொழுதுமே தடையாக இருக்கக்கூடாது.

நாங்கள் முதலிலே குறிப்பிட்டது போல இனங்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டை உருவாக்க – உதாரணத்திற்கு சைவ ஆலயங்களிலிருந்து பத்து, பதினைந்து

(தொடர்ச்சி 03 இல்......)

# மனந்திறக்கிறார் அனந்தி

# நல்லாட்சி அரசு சாதித்தது என்ன?

ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடம் நிறைவுபெற்றதை முன்னிட்டு நல்லாட்சி வாரம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஒரு வருடகாலத்தினுள் நல்லாட்சி அரசாங்கம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு என்ன செய்தது என்பதே



கேள்வி.

நல்லாட்சி அரசு என்பதை காட்டுவதாக இருந்தால் இந்த ஒரு வருட காலத்தினுள் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்க வேண்டும். உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். ஆனால் இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது. எனினும் சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. உயர்பாதுகாப்பு வலய காணிகள் கட்டம், கட்டமாக விடுவிக்கப்படுகின்றமை, எமது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் என்பன ஏற்பட்டுள்ளமை முன்னேற்றமான செயற்பாடு எனினும் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய எந்தவொரு திட்டமும் செயற்படுத்தப்படவில்லை.

எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, அதேபோன்று போரின் இறுதிநாட்களில் சரணடைந்து காணாமற் போனவர்கள் தொடர்பாகவும் எவ்வித செயற்பாடும் எடுக்கப்படவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், மீள்கட்டுமாணம் தொடர்பாக எவ்வித கரிசனையும் செலுத்தப்படவில்லை. இவர்கள் மீதான கரிசனையை அரசு காட்டினாலேயே அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

அத்துடன் தீர்வு விடயத்தில் தமிழ் அரசியல்கட்சிகள் இழுத்தடிப்புக்களை செய்யக்கூடாது. தாம் சார்ந்த கட்சியால்தான் தீர்வு கிடைக்கும் எனக் கூறக்கூடாது. எனவே புதிய ஆண்டில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் வாழ்விலும் ஒளி பிறக்க வேண்டும்.

இந்த வருடம் தமிழர்களுக்கு சிறந்த வருடமாக அமையவுள்ளது தீர்வு கிடைக்கும் என சம்பந்தன் ஐயா கூறியுள்ளார். அப்படி ஒரு தீர்வு கிடைத்தால் அதனை வரவேற்கிறேன். ஆனால் அந்த தீர்வு கிடைக்குமா என்பதுதான் கேள்விக்குறி.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் எல்லாம் தீர்வாக அமையாது. எனவே சம்பந்தன் ஐயா தீர்வு கிடைக்கும் எனக் கூறுவதை விடுத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் எனக் கூறவேண்டும். எனவே மாகாணசபை போன்று இல்லாமல் நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுத்தர வேண்டும்.

அன்றாடப் பிரச்சினைகளையே தீர்த்து வைக்க முடியாத நிலையில்தான் நல்லாட்சி அரசு உள்ளது. எனவே தமிழ் மக்களுக்கான தீர்வே கிடைக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

# தேசிய பொங்கல் விழா

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய நல்லிணக்க மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சு மற்றும் வடமாகாண சபை, கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தேசிய பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவில் தென்பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளும், வடமாகாணத்தின் இளைஞர் யுவதிகளும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பொங்கல் விழாவில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. தாச்சிப்போட்டி, முட்டி உடைத்தல், தேங்காய் திருவுதல், பொங்கல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்கு முதற்பரிசாக பத்தாயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக ஏழாயிரம் ரூபாவும் மூன்றாவது பரிசாக ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இந்த தேசிய பொங்கல் விழா ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு மாவட்டத்தில் நடாத்தப்பட்டு வருகிறது. கடந்த வருடம் திருகோணமலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(02 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# சைவக் கோவில்களும்...

பேரை அனுப்பினால் நாங்கள் தென் பகுதியிலுள்ள பௌத்த ஆலயங் கள், பௌத்த மடங்கூடாக தென் பகுதியிலுள்ள பௌத்த, சிங்கள குடும்பங்களுடன் அவர்களை தங்க வைக்க நடவடிக்கைகளை மேற் கொள்வோம்.

அவ்வாறு தென்பகுதிக்கு வருபவர்கள் சிங்களக் குடும்பங்களுடன் வாழ்ந்து, அந்த வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும் அறிந்து கொள்ளமுடியும். அதுபோல பாடசாலைகளுக்குச் சென்று, அங்கு எவ்வாறான முறையில் கல்வி நடைபெறுகிறது, எவ்வாறான சூழ்நிலையில் பிள்ளைகள் வளர்க்கப்படுகின்றார்கள் என்று அறிந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி அவர்கள் தங்கியுள்ள வீட்டாருடன் அவர்களுடைய ஆலயங்கள், சந்தைகள், பிரமுகர்களின் ·வீடுகள், நண்பர்களின் வீடுகள் போன்ற இடங்களுக்குச் சென்று நேரடியாகவே அங்கு அவர்களின் கலாசாரத்தை தெரிந்து கொள்ளவும், அறிந்துகொள்ளவும் முடியும். அத்துடன் அங்கிருக்கும் சனசமூக நிலையங்களுக்குச் சென்று கலந்துரையாடலாம். தமது சமூகப் பிரச்சினைகளையும் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு அடிமட்டத்தில் இருந்து தீர்வு காணமுடியும்.

அதுபோலவே வடக்கிலுள்ள சைவ ஆலயங்களும், தென்பகுதியிலிருந்து வரும் சிங்கள மக்கள் தங்கியிருந்து வடபகுதி மக்களின் வாழ்க்கைமுறை, கலாசாரங்கள், மதங்களைப்பற்றி அறிந்துகொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதன்மூலம் தென்பகுதியிலிருந்து வரும் சிங்களவர்களும் வடபகுதியிலும் வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, பிரச்சினைகள், மதக் கொள்கைகள், அவர்களது கலாசாரங்கள் என்பவற்றை அறிந்துகொள்ள இந்த மக்கள் பரிமாற்றத்திட்டம் அமையும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு தென்பகுதிகளுக்கு வரும் இளைஞர்கள் வடபகுதியில் தங்கியிருக்கும் போது, எவ்வாறு தோட்டங்களில் வேலை செய்கின்றார்கள் என்பதைப் பார்க்கவும், அவர்களுடன் இணைந்து சில நாட்கள் தோட்டங்களில் வேலை செய்வதன் மூலம் செய்முறை மூலம் அனுபவங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

அதேபோல தென்பகுதிகளுக்கு வரும் வடபகுதி விருந்தாளிகள் தெற்கிலுள்ள கைத்தொழில்சாலைகளுக்குச் சென்று அங்குள்ள வேலைத்திட்டங்களை அவதானிக்கவும், பயிற்சிகளைப் பெறவும் நல்ல சந்தர்ப்பமாக அமையும்.

தென்பகுதியில் இருந்து செல்பவர்கள் வடபகுதியில் அவர்கள் தங்கியிருந்து வாழும் குடும்பத்தினருக்கும், அப்பிரதேச இளைஞர்களுக்கும் கிரிக்கெட், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுப் பயிற்சிகளை வழங்க முடியும்.

இன்று வடபகுதிக்கு ஒரு சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம் ஒன்று தேவை. இது வரையில் வடபகுதியில் ஒரு சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு இல்லை. அவ்வாறான ஒரு விளையாட்டரங்கை, குறிப்பாக வவுனியா அல்லது யாழ்ப்பாணத்தில் தென்பகுதி மக்களின் உதவியுடன் அமைக்கவேண்டும்.

அதுபோலவே வடபகுதியில் ஒரு சர்வதேச விமான நிலையமும் அமைக்கப்படவேண்டும்.

முன்னைய காலத்தில் நானறிந்த மட்டில், பலாலி விமானநிலையத்தில் இருந்து இந்தியாவிலுள்ள திருச்சி, சென்னை போன்ற இடங்களுக்கு விமானசேவை இருந்தது. ஆனால் தற்சமயம் வடபகுதியில் சர்வதேச விமானநிலையம் இல்லை. அங்கு ஒரு நவீன சர்வதேச விமானநிலையம் உருவாக்கப்பட வேண்டும். மத்தள, அம்பாந்தோட்டைப் பகுதியில் உள்ள விமானநிலையம் போல் இல்லாமல் சர்வதேச விமானங்கள் வந்து இறங்கும் விமானநிலையம் அமையவேண்டும்.

வடபகுதியில் ஒரு சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் எவ்வித சந்தேகத்துடனும் அந்தப் பிரச்சினையை அணுகக்கூடாது. சந்தேகம் இருந்தால் அரசுக்கு நம்பிக்கையான மக்களை அங்கு வேலைக்கு அமர்த்தலாம். அச்சந்தேகம் நீங்கிய பின் அப்பகுதி மக்களுக்கும் படிப்படியாக பதவிகளை வழங்கலாம்.

இந்த இனங்களுக்கு இடையிலான பரஸ்பர பரிமாற்றத் திட்டம் மூலம் தென் பகுதியில் இருந்து வரும் பௌத்த சிங்கள மக்கள் சைவசமயத்தின் மகிமையை அறிந்து சைவர்களாக மாறக்கூடியதாக இருக்கும். அதேபோல தென்பகுதிக்கு வரும் வடபகுதி மக்கள் பௌத்த மதத்தில் ஆர்வம் கொண்டு சிலர் பௌத்தர்களாகவும் மாறக்கூடும்.

ஒரு காலத்தில் வண.போதி தர்மர் போன்ற தமிழ் பௌத்தத் துறவிகள் இருந்தார்கள். பௌத்தத்தை உலகம் முழுவதும் பரப்ப இவர்களே முக்கிய காரணகர்தாக்களாக இருந்தார்கள். அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் தமிழ்மொழி மூலமே பௌத்த போதனைகள் நடைபெற்றன.

எனவே மதம் என்பது தனிநபர்களின் தனிப்பட்ட சொந்த விவகாரமாகும்.

நான் ஏற்கனவே கடந்த ஆனி மாதம் 'தினச்செய்தி' பிரதமஆசிரியர் கேரீ. இராசசிங்கத்துடன் சேர்ந்து எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவருமான இரா.சம்பந்தனுடன் விளக்கமாகப் பேசியுள்ளேன். கோவில்களும், மடாலயங்களும் இணைந்து நாட்டில் நல்ல இணக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தவேண்டும் என்றும், அந்த நிகழ்வு நிறைவேறும் நல்ல சந்தரப்பத்தில் நீங்களும் சமூகமளிக்க வேண்டும் என திரு. இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்தேன்,'' என்று வண. பேராசிரியர் விமலரட்ண தேரர் 'தினச்செய்தி'க்கு மேலும் கூறினார்.

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**தொடர்புகளுக்கு :**

**தில்லைகட்டி லேன், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**

**தொலைபேசி : 021 7539300**

**தொலைநகல் : 021 7539300**

**இணையம் : thinacheithi@gmail.com**



# அரசகேசரியின் பதில்கள்

கேள்வி: *இந்தியாவின் எச்சரிக்கையையும் மீறி பாகிஸ்தானிடம் போர்விமானங்களை இலங்கை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளதே? இது எங்கு போய் முடியும்?*

பதில்: பறப்பதில் முடியும்.



**சி. மனோராஞ்சன், வத்தளை**

கேள்வி: *முன்னாள் அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா இருவருக்கும் நல்லாட்சி அரசில் அமைச்சுப்பதவி வழங்கப்படலாமென கூறப்படுகிறதே?*

பதில்: பொறுத்திருந்து பார்ப்போம்.

**எ.கனகவேல், யாழ்ப்பாணம்.**

கேள்வி: *முதல்வர் விக்கினேஸ்வரனின் செயற்பாடுகள் குறித்து உன்னிப்பாக கவனிப்பதாக சம்பந்தன் கூறியிருப்பது குறித்து...?*

பதில்: விக்கினேஸ்வரனை குற்றவாளிக் கூண்டில் ஏற்றவில்லை என்று கவலையாக இருக்கிறது.

**அமலன், நாவற்குழி.**

கேள்வி: *சிறையிலுள்ள 215 முன்னாள் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாதென ஜனாதிபதி திட்டவட்டமாக தெரிவித்துள்ளாரே?*

பதில்: கவலைக்குரிய விடயம்.

**பகீரதன், வவுனியா.**

கேள்வி: *மீளவும் இந்திய மீனவரின் அத்துமீறல் அதிகரிக்கத் தொடங்கிவிட்டதே?*

பதில்: எப்போது குறைவடைந்திருந்தது. எம்நாட்டு மீனவர் மத்தியில் ஒற்றுமை இன்மையே இந்தநிலை. எமது எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வந்தால் விரட்டியடிக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இந்தியர்களோடு பங்குபோடக் கூடாது. இந்த விடயத்தில் எமது மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

**எம். புஸ்பாயினி, மன்னார்.**

கேள்வி: *முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் சீன விஜயம் குறித்து என்ன நினைக்கிறீர் அரசகேசரியாரே?*

பதில்: தொட்டகுறை விட்டகுறை

**அருணன், மாங்குளம்.**

கேள்வி: *உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் கிராமப்புற பாடசாலைகள் எழுச்சி கண்டுள்ளனவே?*



பதில்: ஆனால் தமிழப் பகுதி பாடசாலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. ஒரு தமிழ் மாணவர்கள் கூட இம்முறை தேசிய அளவில் முதலிடம் பெறவில்லை என்பது கவலைக்குரிய விடயம். தமிழர் கல்வியில் முன்னணியில் நிற்பதாக கூறுகிறார்கள். எல்லாம் வெறும் வார்த்தைதான்.

கேள்வி: *பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் இலங்கை விஜயம் அந்நாட்டுடனான உடன்படிக்கைகளால் நாட்டிற்கு நன்மை கிடைக்குமா? இது மற்றொரு அயல் நாடான இந்தியாவிற்கு புகைச்சலை ஏற்படுத்தாதா?*

பதில்: இலங்கை ஒரு பூரண இறைமை கொண்ட நாடு. எமக்கு உலகில் எந்த நாட்டுடனும் உறவுகள் வைக்கமுடியும். உதவிகள் பெறமுடியும். இந்தியா போன்ற நாட்டுக்கு நாங்கள் அடிமைகள் அல்ல. இந்தியா எமது உறவு நாடு. அதே போலத்தான் பாகிஸ்தானும். சீனா எமது நட்பு நாடு. இந்த உண்மையை புரிந்து கொண்டால் பிரச்சினை தீர்ந்து விடும்.

**சர்மிளா, வெள்ளவத்தை.**

கேள்வி: *இனவாத சக்திகள் மீளவும் தலைதூக்குவதாக எச்சரித்துள்ளாரே அமைச்சர் அர்ஜுன?*

பதில்: 1931 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த இனவாத எழுச்சி இன்றுவரை அடங்கவில்லை.

**மாதேஷ், மட்டக்களப்பு.**




# சொன்னார்கள் சொன்னார்கள்...

இலங்கை ஒற்றையாட்சி நாடாகவே இருக்கும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாது

"மைத்திரிபால – ரணில் அரசாங்கம் எந்தக் சூழ்நிலையிலும், ஒற்றையாட்சி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தாது.



அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது."

**பிரதி அமைச்சர் அஜித் பெரேரா,**

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் 215 பேரை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய முடியாது. இலங்கையில் அரசியல் கைதிகள் என எவரும் கிடையாது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதம் காரணமாக மேற்குலக நாடுகளும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட முன்னர் பல்வேறு காரணிகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்



போரில் என்ன இடம்பெற்றது என ஆராய்ந்து அதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினையை உறுதியளித்தவாறு ஆறு மாதங்களுக்குள் தீர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோணப்புலம் அகதி முகாமிற்கு சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே மக்கள் அங்கு கடந்த 25 வருடங்களாக வாழ்ந்து வந்தமையைக் கண்டறிந்ததுடன், மக்களின் அவல நிலையை அறிந்து கொள்ளாதது குறித்து என்னைநானே நொந்து கொண்டேன்

**ஜனாதிபதி மைத்திரி**

நல்லிணக்க செயற்பாடுகளை முடுக்கி விடுவதற்கு, அமைதி ஏற்பாட்டாளர் என்ற பெயரில் எந்த வெளிநாட்டவரின் உதவியும் தேவையில்லை.



"தேசிய நல்லிணக்க செயற்பாடுகள் அனைத்தும் அரசாங்கத்தின் கீழேயே இடம் பெறுகின்றன. அதன் அனைத்துஅரசியல் செயற்பாடுகளுக்கும் அரசாங்கமே பொறுப்பு.

நல்லிணக் செயற்பாடுகளில் ரொனி பிளேயர் ஆலோசகராகப் பங்கேற்கவுள்ளதாக கூறப்படுவதில் உண்மையில்லை.

நாட்டில் தற்போது போர் நடக்கவில்லை எனவே, வெளிநாட்டு அமைதி ஏற்பாட்டாளர்களின் தலையீடு எமக்குத் தேவையில்லை.

**வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி கொலன்னே**

வடமாகாண முதலமைச்சரின் செயற்பாடுகளை மிகவும் கவனமாக அவதானித்து வருகிறேன். அவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகள் மற்றும் கொள்கைகளுடன் தன்னை இணைத்து வருகிறார்

கடுமையான மற்றும் பிடிவாதமான நிலைப்பாடுகளை எடுப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கிடைத்துள்ள இந்த அரியசந்தர்ப்பத்தை சிதைக்கக் கூடாது.

அடாவடித்தனமான, இறுக்கமான, நிலைப்பாடுகள் உதவப்போவதில்லை, கடுமையான நிலைப்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் நாட்டிற்கு கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தினை ்பாழடிப்பது குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்டு தமிழரசுக்கட்சி வேட்பாளராக போட்டியிட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட விக்னேஸ்வரன் கட்சியின் கொள்கைகளிற்கு கட்டுப்படவேண்டியவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகள் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்படுகின்றன. அந்தக் கொள்கைகளே கட்சியினால் அனைத்து தேர்தல்களிலும் முன்வைக்கப்பட்டுள்ளன, அந்தக் கொள்கைகளின் அடிப்படையிலேயே விக்கினேஸ்வரன் தேர்தலில் போட்டியிட்டார், முதலமைச்சரானார்.

தமிழ் மக்கள் பேரவையில் உள்ள தனி நபர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகள் கடந்த காலத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன, எனினும் துரதிஷ்டவசமாக விக்னேஸ்வரன் மக்களால் நிராகரிக்கப்பட்ட அந்தக் கொள்கைகளுடன் தன்னை அடையாளம் கண்டுள்ளார், இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம், இதனை கண்காணித்து வருகின்றோம்.




**எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்**

'விடுதலைப் புலிகளின் தலைமை உட்பட அந்த அமைப்பே முற்று முழுதாக தோற்கடிக்கப்பட்ட போதிலும், அதன் எச்சங்களினால் இந்த நாட்டிற்கு இன்னும் அச்சுறுத்தல் இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் முக்கிய வகிபாகம் வகித்தவர்கள் சிலர் பூசா தடுப்பு முகாம் உட்பட பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது இலக்குகள் நிறைவேறும் வரையில் ஓயப் போவதில்லை என்ற உறுதியுடன் இருக்கின்றனர்.

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 200 தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் மனநிலை மற்றும் மன உறுதி குறித்து நடத்தப்பட்ட பரிசோதனையின் போது, இந்த விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

'விடுதலைப் புலிகளின் தலைவர், பிரபாகரன் இல்லாமல் போனாலும், தமிழீழ




விடுதலைப் புலிகள் தோல்வியைத் தழுவினாலும், எமக்கு வழங்கப்பட் டுள்ள பொறுப்புக்கள் நிறைவேற்றப்படும்' என அவர்கள் கூறியுள்ளனர்.

நாம் இந்த நாட்டு மக்களையோ, பாதுகாப்பு தரப்பினரையோ அச்சத்தில் கொண்டு செல்லும் நோக்கில் இதனைக் கூறவில்லை. எதிர்க்காலத்தில் நாட்டிற்கு ஏற்படவுள்ள அபாயம் குறித்தே பேசுகின்றேன்

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ**





இராமலிங்கம் சந்திரசேகர்
மத்திய குழு உறுப்பினர்
மக்கள் விடுதலை முன்னணி.

1970ஆம் ஆண்டு ஆன போது ஜே.விபிக்கு குறிப்பிட்ட பெயரொன்று இருக்கவில்லை. அதேபோன்று மாநாட்டின் மூலமாகத் தேர்ந்தெடுக் கப்பட்டயாப்பின் அடிப்படையில் தலைமைத்துவத்துடன் தொடர் புடைய கட்சியாகவும் இருக்க வில்லை. அது எதிர்காலத்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோ டியின் பணியினை ஆற்றி வந்தது. ஆதலால் அப்போது அமைப்பின் சார்பாக முடிவுகளை எடுக்கும் நிலையான குழுவொன்றும் வங்கள் எனும் நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "உண்மையிலேயே எங்களுக்கு அரசியல் குழுவும் இருக்கவில்லை. மத்திய குழுவும் இருக்கவில்லை. காரணம் மக்கள் விடுதலை முன்னணி அவ்வாறான நிலைக்கு வளர்ந்திருக்கவில்லை. ஆனால் கடைசிக்காலத்தில் மாநாடு கூடும்வரையில் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கும் ஒருங் கிணைப்புடன் கொண்டு செல்வ தற்காக மாவட்டச் செயலாளர்களும் துணைச் செயலாளர்களும் அடங் கிய அமைப்புக் கமிட்டியினாலும் வேறு விசேட துறைகளில் வேலை செய்தவர்களையும் உள்ளடக்கி தற்காலிகமாகக் கூட்டப்பட்டது. ஒருவழியாக அது மத்திய குழுவுக்குப் பதிலாகச் செயற்படும் கமிட்டியாக இருந்து வந்தது.

1967 டிசம்பர் கலதேவ என் னுமிடத்தில் கலந்துரையாடலின் பின்னர் பல சந்தர்ப்பங்களில் இவ் வாறு இந்த அடிப்படையிலான குழு ஒன்றுகூடி அரசியல் ஆய்வு களை மேற்கொண்டு அதன்படி திருந்தன. அமெரிக்க ஐக்கிய நாட் டின் கடற்படைக்கு சொந்தமான ஹோப் எனப்படும் கப்பல் கொழும் புத் துறைமுகத்திற்கு வருகை தந்துள்ள வேளையில் டட்லியின் அரசாங்கம் தமது கட்சிக்காரர்களின் விவசாயப் படையாக படையொன்றை அமைத்தல், சில பெருந்தெருக்கள் மற்றும் கோட்டைகள் போன்ற ஹோட்டல்களை அமைத்தல் போன்ற விடயங்கள சான்றுகளாக கிடைத் திருந்தன. ஐ.தே.க அரசாங்கம் இராணுவ ஆட்சியை அமைக்கு மானால் அதன்போது அமைப்பின் பாதுகாப்பு மற்றும் பின்பற்ற வேண் டியவைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. பாதுகாப் பிற்காக பாதுகாப்பு கிராமங்களை அமைப்பதற்கும் அமைப்பாளர்கள் வேறு பெயர்களில் இருப்பதற்கும் தேவையேற்படுமானால் ஆயுதங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள் வதற்கான முடிவுகள் இதில் எடுக் கப்பட்டன. ஆனால் நிலைமைகள் மாற்றமடைந்து அரசாங்கம் தேர் தலை நடாத்த முன்வந்ததால் நடைமுறைக்கு வரும் போது அதற்கு ஏற்ப நடைபெறப்போவ தென்ன என்பதை முடிவு செய்து அதற்குத் தயாராவது கூர்மையுள்ள ஒரு அரசியல் கட்சியின் திறமை யாகும். ஜே.வி.பி. அவ்வாறு திற மைகளை நன்றாக வெளிகாட்டிய கட்சியாகும்.

1965 காலப்பகுதியில் விவசாய பிரதேசங்களில் ஆரம்பமாகி 67–68 களில் பல்கலைக்கழக மாண வர்கள் மத்தியிலும் இளைஞர்கள் மத்தியிலும் ஜே.வி.பி வேகமாக வளர்ந்தபோது அது தொழிலாளர் மத்தியில் அரசியல் வேலைகளைச் செய்வதற்கான முயற்சியை கைவிட வில்லை. அம்முயற்சிகள் ஒருசில, துறைகளில் வெற்றியும் அளித்தன. அதில் பிரதான திணைக்களங்களின் ஒன்றான, காணி. அபிவிருத்தி திணைக்களத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் ஜே.விபியுடன் இணை ந்ததன் காரணமாக தனது அரசி யல் நடவடிக்கைகளை துரிதப் படுத்தியது. 1966–69 களில் காணி அபிவிருத்தி திணைக்களத்தில் செய்தது. ஒரு பக்கத்தில் முதலா ளித்துவ முறையின் நெருக்கடியும் முதலாளித்துவ அரசாங்கங்களின் செயற்பாடுகளும், மறுபுறத்தில் பழைய இடதுசாரிகளின் சந்தர்ப்ப வாத நடைமுறையும் சமூகத்தின் பின்தங்கிய நிலைமைகள் தோற்று வித்துள்ள தடைகளின் மத்தியில் தமது செயற்பாடுகளை ஜே.வி.பி. முன்னெடுத்துச் சென்றது. அமைப் பினுள் குழுக்களின் தோற்றமும் அதன் காட்டிக்கொடுப்புகள், துரோ கத்தனத்திற்கு அப்பாற்சென்று அரச அடக்குமுறை ஆரம்பமா னது இந்த புறநிலைக் காரணிக ளின் பின்னணியிலாகும்.

1970 தசாப்த ஆரம்பமானது, அமைப்பிலிருந்து வெளியேற்றப் பட்ட குழுக்களின் காட்டிக்கொடுப்பு, எதிரிக்கு தகவல்களை வழங்கி சதிச் சூழ்ச்சிகளின் மூலமாக முத லாளித்துவ அரச இயந்திரம் இளம் பருவ புரட்சிகர இயக்கத்திற்கு எதிராக அடக்குமுறையை கட்ட விழ்த்துவிடுவதற்கு ஏதுவாக அமைந்தது. இதில் தரம்சேகரா

# மக்கள் விடுதலை முன்னணி உதயமாகிறது

இருக்கவில்லை. இடைக்கிடையே அப்போது கட்சியின் முன்னணியி லிருந்தவர்களை கூட்டி விடயங்



கள் கலந்துரையாடப்பட்டன. ஒரு தடவை செயலாளர்களை கூட்டியது போன்று ஒருதடவை மாவட்டச் செயலாளர்களையும் வேறு துறை க்கு பொறுப்பானவர்களையும் கூட்டிக் கலந்துரையாடப்பட்டது. 1970 களில் இவ்வாறு அழைக்கப் பட்ட கலந்துரையாடலுக்கு 21 பேர் கலந்து கொண்டனர். அதனை 21 பேரின் அமைப்பென அழைத்த னர். இது மத்திய குழுவின் பணி யினை ஆற்றியது. ஆரம்பத்தில் இவ்வாறான அமைப்பு உருவாக் கத்துடன் 21 பேர் அடங்கிய குழு 1967இல் கலதேவ என்னுமிடத்தில கலந்துரையாடலிலாகும். ஆனால் அது அரசியல் அமைப்பல்ல. இடைக்கிடையே ஏற்பட்ட நிலை மைகளில் கீழ் இவ்வாறான அமைப்பு ஒன்று கூடலே இடம் பெற்றது. இது தொடர்பாக தோழர் ரோகண விஜேவீர தனது அனுப முடிவுகள் எடுக்கப்பட்டன. அதனி டையே முக்கியமான கலந்துரை யாடல்களாக 1969 இன் நடுப்பகுதி யில் இடம் பெற்ற நீர்கொழும்பு மடம்பெல்ல கலந்துரையாடல் (இது காணி அபிவிருத்தி திணைக்களத் தில் வேலை செய்த தோழர் தனபால வின் வீட்டில் நடைபெற்றது.) 1969 நடுப்பகுதியில் ஊருபொக்க என்னுமிடத்தில் கலந்துரையாடல், 1970களில் தெவினுவர என்னுமிடத் தில் கலந்துரையாடல் மற்றும் கம்புறுபிட்டிய என்னுமிடத்து கலந்துரையாடல்களை குறிப்பிட முடியும்.

1969 நடுப்பகுதியில் ஊறுபொக்க பகுதியில் இடம்பெற்ற கலந்துரை யாடல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அப்போது ஆட்சியிலி ருந்த ஐ.தே.க அரசாங்கம் 70இல் பொதுத் தேர்தலை நடத்தாது இராணுவ ஆட்சிக்கு தயாராகி வருவது பற்றி இரகசிய மாக கலந்துரையாடியது எமக்கு அப் போது பல சான்றுகள் கிடைத் மேலே எடுக்கப்பட்ட முடிவுகள் செயற்படுத்தப்படவில்லை. இராணுவ ஆட்சிக்கு செல்லாது 70இல் பொதுத் தேர்தலை நடாத்துவ தற்கு டட்லியின் அரசு முடிவு செய்தபோதிலும் முன்பிருந்த ரகசிய முடிவின் அபாயத்தை ஜே.விபியால் அனுமானிக்க முடிந்தது.

ஜே.வி.பியின் வரலாறு – 4

### இாணுவ ஆட்சிக்கான சதி!

நடைபெறவிருந்த இராணுவ அரசியல் அச்சுறுத்தலையும் முன் கூட்டியே அனுமானிக்கக்கூடிய ஆற்றலை ஜே.வி.பி ஆரம்பத்திலி ருந்தே பெற்றிருந்தது. தற்போது நமது நாடு முகம்கொடுத்திரு க்கின்ற இந்திய அழுத்தமான இந்திய விஸ்தரிப்புவாத நடவடிக் கைகளை ஜே.வி.பி 1967களிலேயே கண்டது. விடயங்கள் நடைமுறை விதத்திற்கேற்ப ஆளும் வர்க்கத்தின் தேவைகளின் நிமித்தம் ஏற்படவுள்ள அனைத்து விடயங்களும் அவ் வாறே நடைமுறைக்கு வருவ தில்லை. ஆனால் விடயங்கள் 80இற்கும் மேற்பட்ட வேலைத்தளங் களில் தோழர் ரோகண விஜேவீர வகுப்புகளை நடத்தியிருந்தார். அதே போன்று அதன் தொழிற்சங்கப் பத் திரிகையான (சங்வர்தன ஹன்ட) "அபிவிருத்திக் குரல்" பத்திரிகை க்கு தோழர் ரோகண விஜேவீர கட்டுரைகளை எழுதினார். அதற்கு தோழர் விஜேவீர புனைபெயரில் எழுதிய முதலாவது கட்டுரையான "தாயகம் எங்கு செல்கிறது?" என் பதாகும். இதன்போது அத்திணைக் களத்தின் தொழிற்சங்கத் தலைவர் களில் ஒருவரான தோழர் தனபால பெரும் பங்காற்றி யுள்ளார்.

### தோழர் விஜேவீராவின் ஆளுமை

ஆரம்பம் முதலே ஜே.வி.பி. யிடமிருந்த விஷேட குணாம்சம் என்னவெனில், புரட்சிகரமாக வேலை செய்வதாகும். சாதாரண மனித னுக்கு வெற்றிகொள்ள முடியாத பாரிய சவால்கள் மற்றும் கஷ் டங்களை ஜே.வி.பி வெற்றி கொண் டது. புரட்சிகரமாக வேலை செய்யும் உத் தியை தம்வசம் கொண் டிருந்ததனாலாகும். நோக்கத்தை அடைவதற் கான அர்ப்பணிப்பு, துன்பங் களை தாங்கிக் கொள்தல், 24 மணிநேரமும் அயராது உழைத் தல் இவைகளின் பிரதானமான போக்குகளாகும். சாய்வுநாற்காலியில் அமர்ந்துகொண்டு புரட்சியைப் பற்றி கனவு காண்பதற்குப் பதிலாக மண்ணில் வாழும் மனிதர்களிடையே புரட்சிக்காக புரட்சிகரமாக வேலை செய்வதற்கு ஜே.வியியைப் பயிற்று வித்தவர் தோழர் ரோகண விஜே வீரவாகும். அன்று அந்த நடை முறையை சமப்படுத்துவதற்கு இலங்கையில் எந்தவொரு கட்சியா லும் முடியாது போயுள்ளது.

மறுபுறம் இக்காலகட்டத்தில் ஜே.வி.பி. பாரிய இன்னல்கள் கஷ் டங்களின் மத்தியிலேயே வேலை குழுவினர் பல பாதக துரோகத்த னங்களைப் புரிந்தனர். இளம் புரட் சிகர இயக்கத்தைப் பற்றி பொய் யான தகவல்களை வழங்கி முத லாளித்து இயந்திரத்தின் அடக்கு முறைக்கு வழிசமைத்தனர். அதே போன்று தர்மசேகரா உருவாக்கிய மாவோவாத இளைஞர் முன்னணி எனும் அமைப்பின் மூலமாக ஜே.விபிக்கு எதிராகவும் குறிப்பாக தோழர் ரோகண விஜே வீரா சீ.ஐ.ஏ காரன் என்றும் அவ தூறுகளைப் பரப்பினர். அதேவேளையில் அவர் மிகப்பெரிய தேசபக்தனாகவும் தோன் றினார். ஒரு தடைவை மாவோ வாத இளைஞர் சங்கமாக இருக் கும் அவர் மறுபுறத்தில் "தாயக பாதுகாப்பு சங்கம்" என்று புரட்சி வாதியாகவும் தோன்றினார். எந்தப் பெயரில் அவர் தோன்றினாலும் தரம்சேகர குழுவாத எதிர்ப்புரட்சி வாதியின் பிற்போக்குப் பாத்திரத் தையே வகித்தது. இந்த நிலமைகளை தற்போது ஒரு சில சம்பவங்களு டன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அன்று முதலாம் இலக்க புரட்சி வாதியாகவும் தேசபக்தனாகவும் மாறுவேடம் பூண்டு எதிர்ப்புரட்சிக்கு பங்காற்றிய தர்மசேகரா இன்று அனாகரிக தர்மபாலாவாக மாறி அவரது உண்மை முகத்தை வெளிப்படுத்தியபோதிலும் ஆரம்பத் தில் அதைப் புரிந்துகொள்வதற்கு சில நேர்மையான தோழர்களுக்கு கூட முடியாது போயுள்ள நிலை யில் தற்போது அதை அனுபவ மாக கொள்ளல் வேண்டும்.

### ஐந்து வயது நிரம்பிய ஜே.வி.பி

ஜே.வி.பி. 1970ஆம் தசாப்தத் தில் காலடி வைக்கும்போது அத ற்கு வயது ஐந்தாகும். ஆனால் ஐந்து வயது நிரம்பிய இளம் அமைப்பாக இருந்தபோதிலும் அது புரட்சிகர இயக்கமாகச் செயற் பட்டு சுயாதீனமானதோர் அமைப்பு

(தொடர்ச்சி 23 இல் .....)


# திருமலையில் தமிழ் பல்கலைக்கழக இயக்கம் மறைக்கப்பட்ட உண்மைகள்

சில நிலச்சொந்தக்காரர் த.ப.க. இயக்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மூலமாவது தமது நிலங்களை மீளப்பெறுவது என்ற முடிவுக்கு வந்திருந்ததாகவும் தெரியவருகிறது.

தமிழ் பல்கலைக்கழகம் நிர்மாணிக்க முடியாதென்பது உறுதியானதன் பின்பதாகவும் மேற்படி அமைப்பின் முக்கிய உறுப்பினர்களான சில பெரிய மனிதர்கள் நிலங்களை உரியவர்களுக்கு கையளித்து அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற விரும்பவில்லை. மறுபுறமாக த.ப.க.இயக்கத்திற்கு ஆகக்குறைந்த விலையில் நிலங்களைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னணி வகித்த திருகோணமலை குட்டி பிரபுக்களும் இவ்விவகாரத்தில் எதுவித அக்கறையும் கொள்ளாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பவர்கள் போல் நடித்துக்கொண்டிருந்தனர். அவர்களைப் பொறுத்தவரை திருகோணமலை தமிழர்கள் மீதாகவோ அல்லது இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பாகவோ இதயசுத்தியான அக்கறை கொண்டவர்களல்லர், இவ்வாறானவர்கள் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை ஏலம் விட்டு தமிழிச்சிகளின் தாலியை அறுத்தாவது அரசியல் பதவிகளை கைப்பற்றி சுகபோக வாழ்க்கையை குறியாகக் கொண்டு செயற்படுபவர்களாகும். இவ்வாறானவர்கள் தான் திருகோணமலை தமிழர்களின் அரசியல் மற்றும் பொது விவகாரங்களின் ஏகப்பிரதிநிதிகளாக வலம்வந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலைமையின் பிரதிபலன்தான் திருகோணமலை தமிழர்களின் வரலாற்று உரிமைகளும், அடையாளங்களும், வணக்கஸ்தலங்களும், வாழ்விடங்களும், வாழ்வாதாரங்களும் படிப்படியாக பறிபோய், எதிர்காலத்தில் திருகோணமலையில் தமிழர்களின் இருப்பே கேள்விக்குள்ளாகியுள்ள தற்போது கண்முன்னே தெளிவாகத் தெரிகின்ற நிலைமை இதுதான். த.ப.க. இயக்க நில விவகாரம் நீதிமன்றத்தில் விவாதிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய பாதகமான சூழலை தவிர்த்துக் கொள்ள ஏற்புடையதாக மேற்படி அமைப்பின் முக்கியஸ்தர்கள் கையாண்ட தந்திரோபாய மாற்றுத்திட்டமே கமத்தொழில் கால்நடை வளர்ப்பு செயன்முறை பயிற்சி நிலைய செயற்திட்டமாகும்.

மேற்படி பயிற்சி நிலையத்திற்கான பணிப்பாளராகவும் போதனாசிரியராகவும் த.ப.க. இயக்கத்தினால் நியமனம் செய்யப்பட்டவர் கால்நடை வைத்தியர் ஒருவராவார். இவருக்கு விவசாயத்துறை தொடர்பில் எதுவித தகமையும் இல்லை. இந்நியமனத்தில் இருந்து தெரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுதான், கமத்தொழில் கால்நடை பயிற்சி நிலையம் என்பது தமிழ் பல்கலைக்கழகம் என்ற உயரிய நோக்கத்தை முன்வைத்து பெறப்பட்ட நிலங்களை சுருட்டிக் கொள்ள கையாளப்பட்ட சூழ்ச்சிகரமான தந்திரோபாயம் என்பதாகும்.

மேற்படி திட்டத்திற்கமைவாக பயிற்சி நிலையத்திற்கான வகுப்பறை, மாணவர் தங்குவிடுதி, அவற்றுக்கான தளபாடங்கள், அடங்கலாக பயிற்சி நிலையத்திற்குத் தேவையான உழவு இயந்திரம் முதற்கொண்டு பயிற்சி நிலைய மின் தேவையைப் பூர்த்தி செய்ய மின்பிறப்பாக்கி இயந்திரம் (ஜெனரேட்டர்) வரையில் தேவையான அனைத்து



உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டது. கூடவே பயிற்சி நிலைய முகாமையாளருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் கட்டிமுடிக்கப்பட்டது. பயிற்சி நிலையத்துக்குத் தேவையான ஆய்வுகூடமொன்றை த.ப.க. இயக்க திருகோணமலை பிரதேச உறுப்பினரும் ஏற்றுமதி, இறக்குமதி துறைசார் வர்த்தகருமான அமரத்துவம் எய்திய ஆறுமுகநாதன் நன்கொடையாக கட்டிக் கொடுத்தார். மேற்கொண்டு பயிற்சி நிலையத்தை விஸ்தரிப்பதற்காக 500 ஏக்கர் நிலத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்க அன்றைய அரசு முன்வந்தது. இக்காலகட்டத்தில் த.ப.க.இயக்கம் சார்பாக திருகோணமலையில் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருந்தவர் காலஞ்சென்ற செல்த்துரையாகும். இவரை ஒலிவர் செல்லத்துரை என்றே திருகோணமலையில் செல்லமாக அழைப்பர். இவர் 1983 இனக் கலவரத்தின்போது திருகோணமலை பன்குளம் கிராமத்தில் வைத்து பேரினவாதிகளின் இன வன்முறைக்கு பலியானவர். இந்த மனிதர் பயிற்சி நிலையம் திருகோணமலையில் அமைந்திருப்பதனாலும் திருகோணமலை நிலப்பரப்புகளை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களில் இருந்து தமிழர் பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்புடையதாகவும், மேற்படி 500 ஏக்கர் நிலப்பரப்பை பன்குளம் கிராமத்தை அண்டிய அரசுக்குரித்தான காட்டுப் பகுதியில் பெறவேண்டும் என த.ப.க.இயக்கத்தின் தலைமைத்துவத்துடன் வாதிட்டார். ஆயினும் மேற்படி த.ப.க.இயக்கத்தின் தலைமை அதை நிராகரித்து, நெடுங்கேணி பிரசேத்தின் "வெடிவைத்தகல்." பகுதியில் அரச காணி 500 ஏக்கர் நிலத்தை 99வருட குத்தகைக்குப் பெற்று, அதற்கு "நாவலர் தோட்டம்" எனப் பெயர் சூட்டினர். 500ஏக்கர் நிலத்தை பெற மறுத்தமைக்கு உப்புவெளி பயிற்சி நிலைய பணிப்பாளராகவும், போதனாசிரியராகவும் நியமிக்கப்பட்டிருந்த கால்நடை வைத்தியர் 500ஏக்கர் நிலப்பரப்பை கையாள வேண்டிய பொறுப்பு தன்மீது சுமத்தப்பட்டுவிடும் என்பதால், பன்குளம்பகுதியில் அரச நிலம் பெறும் ஆலேசனையை முறியடித்தார் எனத் தெரிய வருகிறது. இவ்விவகாரத்தில் செல்லத்துரையும் பணிப்பாளர் ஜெகநாதனும் பெரியளவில் முரண்பட்டுக் கொண்டதாகவும், பின்னர் செல்லத்துரை மீது வீண்பழிகள் சுமத்தி, அவரை த.ப.க.இயக்கப் பணிகளில் இருந்து வெளியேற்ற பயிற்சி நிலைய பணிப்பாளரான ஜெகநாதனும் அவருக்கு பக்கபலமாக திருகோணமலை பிரதேச உறுப்பினரும், நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினருமான கிருஷ்ணதாசன் செயற்பட்டதாவும் கூறப்படுகிறது. ஆக தனி மனிதனின் விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து திருகோணமலையின் நீண்டகால நலனை எட்டி உதைத்தனர் எனச்சொல்லலாம். (சிங்களக் குடியேற்றம் பற்றி வெட்டிக்கூச்சல் போடுபவர்கள் தலையை பிய்த்துக் கொள்ளட்டும்) இவ்வாறான நிலைமைகளின் மத்தியில் அவசர அவசரமாக செயற்பட்ட கமத்தொழில் – கால்நடை பயிற்சி நிலையம் 1967இல் ஆரம்பமாகி குறுகிய காலத்துடன் தனது ஆயுட்காலத்தை முடித்துக் கொண்டது. ஆக நிலச் சொந்தக்காரர்களின் கவனத்தை திசைதிருப்பி அவர்களின் காதுக்கு பூச்சுற்றியதைத் தவிர தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்க ஒன்றுபட்டு முன்வந்த தமிழ் மக்களுக்கு கமத்தொழில் கால்நடை பயிற்சி நிலையம் எந்த நன்மையையும் அளித்திருக்கவில்லை என்பது தான் உண்மை.

பயிற்சி நிலையம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதே தவிர போதனாசிரியரின் பதவியும் சிற்றூழியர்களின் நியமன மும் தொடர்ந்தது. பயிற்சி நிலையத் தேவைக்காக வளர்க்கப்பட்ட சிறு எண்ணிக்கையிலான கோழிகள், தாராக்கள், ஆடுகள் போன்றவற்றுக்கான செலவீனங்கள் த.ப.க. இயக்கத்தின் நிதியிலிருந்தே செலவு செய்யப்படுவது பற்றி த.ப.க.இயக்க நிர்வாகம் கடுகளவேனும் கவலை கொள்ளவில்லை. தமிழ் மக்கள் தமது பிள்ளைகளின் உயர்கல்வித் தேவையை எதிர்பார்த்து பெருத்த நம்பிக்கையுடன் வாரி வழங்கிய நிதி வீணே செலவு செய்யப்பட்டது. மறுபுறமாக கொழும்பு தலைமைப் பணியக வாடகை ஊழியர் சம்பளம், டாம்பிகமான நிர்வாகச் செலவுகள் என மிக வேகமாக த.ப.க.இயக்கத்தின் கஜானாவை விழுங்கிக் கொண்டிருந்தது.

இவ்விதமான பரிதாபகரமான நிலைக்குத் த.ப.க.இயக்கம் தள்ளப்பட்டிருந்த காலகட்டத்தில் அதன் ஆரம்பகால பிரமுகர்கள் பலரும் த.ப.க.இயக்க தலைமைத்துவத்தின் பொறுப்பற்ற போக்கில் அதிருப்தி கொண்டு ஒதுங்கிக் கொண்டனர். அதியுயர் அரசபதவிகளில் இருந்து ஓய்வுபெற்ற ஆளும் வட்டார முக்கியஸ்தர்களின் அபிமானத்துக்குரியவர்களுமான முதியவர்கள் சிலரும், இவ்வாறானவர்களின் சமூகப்பற்றற்ற வரட்டுக் கவுரவ போக்குக்கு முற்றிலும் எதிர்மாறானவர்களும் தீவிர இனப்பற்று கொண்டவர்களும் குறிப்பாக வடமாவட்டங்களில் இருந்து உயர் கல்விக்காக கொழும்பில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் சிலரும், இவர்களுக்கு சமாந்திரமான தமிழ் அரச ஊழியர்கள் சிலரும் என மிகச் சிறு அளவிலானவர்களுமே த.ப.க. இயக்கத்தின் உறுப்பினர்களாக காணப்பட்டாலும் ஓய்வூதியம் பெறும் முதியவர்களின் பொழுது போக்குக்கான சங்கமாகவே த.ப.க. இயக்கம் காணப்படது.

இறுதியாக கொழும்பு வெள்ளவத்தை அலெக்சான்டர் வீதி தலைமைப் பணியகத்தின் வாடகையைச் செலுத்த முடியாத வங்குரோத்து நிலையில் தலைமைப் பணியகம் மேற்படி அமைப்பின் நீண்டகால உறுப்பினரின் தயவில் அந்த பெருந்தகைக்குச் சொந்தமான "சாந்தம்" என அழைக்கப்பட்ட கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. நாவலர் மண்டப நூலகத்துக்குரியதான நூல்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவை சில உறுப்பினர்கள், ஊழியர்களின் வீடுகளுக்கு பாதுகாப் பதற்காக எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவற்றிற்கு என்ன நடந்தது என்பது இதுவரை எதுவித விபரங்களும் வெளியிடப்படவில்லை. ஏல்.ஏ.ரி. வில் லியம்ஸ் பயிற்சி நிலையப்பணிப்பாளராக பொறுப்பேற்றதன் பின்பு நாவலர் நூலகத்திற்குரித்தான நூல்கள் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்த கண்ணாடி அலுமாரிகளையும் கொழும்பு சாந்தம் கட்டடத்திலிருந்து உப்புவெளி பயிற்சி நிலைய அலுவலகத்திற்கு எடுத்துவந்து பாதுகாப்பாக வைத்திருந்தார்.

ச.அ டேவிட் பயிற்சி நிலையத்தை கைவிட்டு சென்றபின் தன்னிச்சையாக செயற்பட்ட த.ப.க.இயக்கத்தின் திருகோணமலை பிரதேசசபை உறுப்பினரும், நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினருமான கிறிஷ்ணதாஸன் தன்னோடு ஒத்த கொள்கை கொண்ட சிலரையும் இணைத்துக்கொண்டு தனது ஆதிக்கத்தின் கீழ் த.ப.க. இயக்கத்திற்குரித்தான திருக்கோணமலை பயிற்சி நிலையத்தின் அசையும் அசையா சொத்துக்கள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபின் கிறிஷ்ணதாஸன் தலைமையிலான கும்பல்லின் கையாடலுக்கு இரையானது

பி.எஸ். குமரன்

(தொடர்ச்சி 22 இல்...)

# பிரபாகரன் புலி இயக்கத்தை விட்டு விலகல்

சர்ச்சைக்குரிய விதத்தில் உமாமகேஸ்வரன் தமிழீழ விடுதலைப் புலிகளை விட்டு விலகிச் சென்றது பிரபாகரனுக்கு பூதாகரமான சிக்கல்களை உருவாக்கிற்று.

1980 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், பிரபாகரன் யாழ்ப்பாணம் திரும்பினார். இரண்டு இளைஞர்களின் கொலைகள் சம்பந்தமான பிரச்சினைகள் அவருக்கு சிக்கல்களை உருவாக்கிற்று. அதையடுத்து, எழுந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு பிரபாகரன் இரண்டு கூட்டங்களைக் கூட்டினார். ஒன்று யாழ்ப்பாணத்திலும், மற்றைய கூட்டம் வவுனியாவிற்கு அருகிலும் உள்ள ஓர் இடத்திலும் கூட்டப்பட்டது.


குட்டிமணி, ஜெகன், தங்கதுரை கைது

இந்த இரண்டு கூட்டங்களிலுமே, கட்டவிழ்த்து விடப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியவில்லை. இயக்கத்திற்கு ஒன்று புதிய மத்தியகுழு உருவாக்கப்பட்டது. இருந்தபொழுதிலும் குற்றச்சாட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. குற்றச்சாட்டுக்களும், குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் தலைதூக்கின. குற்றம்சாட்டியவர்களை பிரபாகரன் 'துரோகிகள்' என்று அழைத்தார். அந்தநிலையில் பிரபாகரனுக்கு எதிராக பிரச்சினைகள் கிளம்பின. அப்பொழுது சிலர் பிரபாகரனுக்குத் தோளோடு தோள் கொடுத்து நின்றனர். ஆனாலும் பலர் பிரபாகரனைக் கடுமையாக விமர்சித்தனர்.

பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு மேலதிக அதிகாரத்தை தனக்குத் தரவேண்டும் என்ற பிரபாகரனின் கோரிக்கையை மத்தியகுழு நிராகரித்தது. அவ்வாறு நிராகரிக்கப்பட்டதால், தான் அடைந்த ஏமாற்றத்தை பிரபாகரன் மூடி மறைக்கவில்லை. "இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு நான் நிறைய செய்தேன். ஆனால் யாரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை," என பிரபாகரன் பகிரங்கமாக விமர்சித்தார்.

பிரபாகரனைத் தொடர்ந்து பலர் விமர்சித்த வண்ணமே இருந்தனர். அதையடுத்து கண்களில் கண்ணீர் துளிர்த்தபடி தான் இந்த இயக்கத்தை விட்டு விலகுவதாக அறிவித்தார். இந்த இயக்கத்தை விட்டு விலகுவதான அவரின் அறிவிப்பு பலரின் மத்தியிலும் அதிர்ச்சியையும், அமைதியையும் ஏற்படுத்தியது.

அவரது நம்பிக்கையான சிலர் அவரது முடிவை மாற்றுமாறு கேட்டனர். ஆனால் அவர் மசிவதாக இல்லை. தன்னை அனைவரும் அவமதித்துவிட்டதாகக் கூறினார். இயக்கத்தை விட்டு விலகும் பிரபாகரனுக்கு உறுப்பினர் ஒருவர் கைத்துப்பாக்கியை வழங்கினார். ஆனால் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதையடுத்து, பிரபாகரன் தனது மாமனாரின் வீட்டிற்குச் சென்று புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார். என்ன செய்வது என்று தெரியாமல் தனிமையில் செய்வதறியாது ஏக்கத்தில் மூழ்கியிருந்தார்.

அந்தக்காலத்தில் தான் அவருடைய பழைய நம்பிக்கைக்குரிய இருவருடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்தினர். அவர்கள் தங்கத்துரையும், குட்டிமணியுமாகும். அவர்கள்தான் தமிழீழ விடுதலை அமைப்பின் (TELO) தலைமைப் பீடத்தைச் சேர்ந்தவர்கள்.

தங்கத்துரையையும், குட்டிமணியையும் சந்தித்து, "நீண்டகாலத்திற்கு முன் நான் உங்கள் தம்பியாகவே உங்களை விட்டுச் சென்றேன். நான் மீண்டும் உங்கள் தம்பியாகவே வந்துள்ளேன். நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் நான் சாவை தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்," என்று பிரபாகரன் கூறினார்.

பிரபாகரன் பேசிய வார்த்தையிலிருந்து, அவர் உள்ளத்தில் வியாபித்திருந்த விரக்தி மனப்பான்மையை தங்கத்துரையால் புரிந்துகொள்ள முடிந்தது. பிரபாகரனின் உபயோகத்தையும், திறமைகளையும் தங்கத்துரை நன்கு அறிந்திருந்தார். பிரபாகரனை ரெலோ இயக்கத்தில் இணைத்தால், பல நன்மைகள் இருக்கும் எனக் கருதினார். இருந்தபோதிலும் பிரபாகரனை 'ரெலோ' இயகத்தில் இணைப்பதற்கு அந்த இயக்கத்தினுள் எதிர்புக்களும் இருந்தது.

தலைவர் என்ற முறையில் தங்கத்துரை தனது முடிவை வெளியிட்டார். தமிழ் நாட்டில் ரெலோ இயக்கத்தின் இராணுவப் பயிற்சிக்குத் தலைவராக பிரபாகரன் இருப்பார் எனத் தங்கத்துரை உத்தரவிட்டார். பிரபாகரனும் அதனை ஏற்றுக்கொண்டார்.

ரெலோ இயக்கத்தின் பயிற்சி முகாம் தமிழ் நாட்டிலுள்ள திருச்சியில் அமைந்திருந்தது. சில வனஇலாக் காவலர்களின் உதவியுடன் பெரிய விஸ்தீரமான காட்டின் ஒரு பகுதி அழிக்கப்பட்டு பயிற்சி முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. உள்ளூர் பொலிசாருக்கு இந்த முகாம் பற்றி தெரிந்திருந்தும், அவர்கள் வாளாது இருந்தனர். இதேபோல, மதுரையிலும் ஒரு பயிற்சி முகாம் இருந்தது. அந்தப் பயிற்சி முகாமில் ஓய்வு பெற்ற இந்திய இராணுவ வீரர்கள் பயிற்சி வழங்கி வந்தனர்.

சிலகாலம் பிரபாகரனும் அவருடைய கூட்டாளிகளும் ஏர்க்காட்டில், மூன்று படுக்கைஅறை வீடு ஒன்றில் தங்கியிருந்தனர். எல்லோரும் பன்பாயில் படுத்துறங்கினர்கள். பிரபாகரன் மாத்திரம் தனியாக தனது படுக்கை ஒழுங்குசெய்து வந்தார். தண்ணீர்கூட தனியான ஓர் போத்தலில் எடுத்து வந்து குடித்தார். 'ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்?' என உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, கண்ட கண்ட தண்ணிரை எல்லாம் குடித்து வயிற்றைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை என்றார்.

பிரபாகரனுக்கு சுவையான உணவுகளில் நாட்டம் இருந்தது. தமிழ்நாட்டில் இருந்தபோது சுவையான உணவுகளில் அக்கறை காட்டி வந்தார். நண்டு, இறால், கணவாய் போன்ற உணவுகளில் மிகுந்த விருப்பம் காட்டினார்.

அக்காலத்தில் பழைய உறுப்பினர்களுடன் தொடர்பைப் பேணி வந்தார். அந்த பழைய உறுப்பினர்கள் பிரபாகரனுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள். மீண்டும் தனது அணியைக் கட்டியெழுப்ப முயற்சித்தார்.

1980ஆம் ஆண்டு இறுதிக்கட்டத்தில், கிளிநொச்சியில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாலசுந்தரம் என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அந்த நேரத்தில் தனது அமைப்பைக் கட்டியெழுப்பும், அதேசமயம் வடக்கில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களையும் அவதானித்துக் கொண்டு பிரபாகரன் இருந்தார். அக்காலத்தில்தான் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா மாவட்ட சபை ஒன்றை அமைத்து தமிழர்களுக்கான சுயஆட்சியை வழங்க முன்வந்தார்.

ஒருநாள் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிரபாகரன், அன்று மானிப்பாய்த் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வி.தர்மலிங்கம் வீட்டிற்குச் சென்று, அவரைச் சந்தித்தார். தர்மலிங்கத்திடம் இரண்டு மணித்தியாலங்களாக அரசாங்கம் வழங்க முன்வந்துள்ள மாவட்ட சபைத் தீர்மானங்கள் பற்றிய விளக்கங்களை கேட்டறிந்து கொண்டார். தர்மலிங்கமும் அவருடைய கேள்விகளுக்கு பதில்களை வழங்கினார். தனது சந்தேகங்களைத் தீர்க்கும் வண்ணம் பிரபாகரன் தர்மலிங்கத்திடம் பல கேள்விகளைக் கேட்டு மாவட்ட சபைத் தீர்மானம் பற்றி அறிந்து கொண்டார்.

அந்தக்காலத்தில், அதாவது 1980 ஆம் ஆண்டு முழுவதும் விடுதலைப் புலிகளை விட்டு விலகி பிரபாகரன் 'ரெலோ' இயக்கத்துடன் இணைந்திருந்தார்.


அக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான பாலசுந்தரத்தின் கொலையை அடுத்து, வல்வெட்டித்துறையில் உள்ள ஒரு மதுபானக் கடையின் முன் நின்ற பொலிசார் ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள். அந்தப் பொலிசார் தான் யாழ்ப்பாணப் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 12 ஆவது பொலிசார் ஆவார்.

1979, 1980 ஆம் ஆண்டில் தான் பயங்கரவாதத்தை அடியோடு அழிக்க அரசு கடுமையான நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டது. ஆனால் 1980 ஆம் ஆண்டு கடைசியில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதம் தலை தூக்கியதைப் பார்த்து அரசு அதிர்ந்து போனது.

1981 மார்ச் 25 ஆம் திகதி 'ரெலோ' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றிகரமாக அரசுக்குச் சொந்தமான மக்கள் வங்கியொன்றில் கொள்ளையிட்டனர்.

அரச வங்கியான மக்கள் வங்கியில் சேர்ந்த பணங்களை எல்லாம் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரும் போது, வல்லைவெளியில் வைத்து பணம் கொண்டுவந்த வாகனத்தினை ஆயுதம் தாங்கிய ரெலோவினர் தடுத்து நிறுத்தினர்கள். சகலரையும் அந்த வாகனத்திலிருந்து இறங்குமாறு சிங்களத்தில் உத்தரவிட்டார்கள். வங்கி ஊழியர்களும், பொலிசாரும் நடப்பது என்னவென்று அனுமானிக்க முன்னரே, வாகனத்தில் இருந்த இரண்டு பொலிசாரையும் சுட்டு வீழ்த்தினார்கள். வாகனத்தில் ஐந்து பெட்டிகளில் வைத்திருந்த ரூபா 78 இலட்சத்துடன் தலைமறைவாகினர்.

அக்காலத்தில் இதுவே இலங்கைச் சரித்திரத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பெரிய தொகையாகும். அரசாங்கம் உடனடியாக கொள்ளையாளர்களைப் பிடிப்பதற்கு போதிய தகவல்களைத் தருபவர்களுக்கு ரூபா 10 லட்சம் சன்மானமாக வழங்கப்படும் என அறிவித்தது.


— அரசகேசரி —

கொள்ளையர்களைப் பிடிப்பதற்கான சகலவிதமான நடவடிக்கைகளும் அரசினால் மேற்கொள்ளப்பட்டன.

கடல் மார்க்கமாக கொள்ளையர்கள் தப்பிச் செல்லலாம் என்று எதிர்பார்த்து, வழக்கமாக பயங்கரவாதிகள் செல்லும் கடல் மார்க்கங்களை எல்லாம் அரச கண்காணிக்க நடவடிக்கை எடுத்தது. அந்த முயற்சி அரசுக்கு பயனளித்தது.

1981 ஏப்ரல் 5ஆம் திகதி ரெலோ இயக்கத்தின் தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி மற்றும் செல்லத்துரை, சிவசுப்பிரமணியம், தேவன் ஆகியோர் பருத்தித்துறையில் உள்ள மணல்காட்டில் ஒரு மோட்டார் வாகனத்தில் வந்து இறங்கினார்கள்.

இவர்களை மணல்காட்டிற்கு கூட்டி வந்துவிடும் பொறுப்பு பிரபாகரனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இறுதிக்கட்டத்தில் அந்தத் திட்டம் மாற்றப்பட்டு ஸ்ரீ சபாரட்ணம், மோட்டார் வாகனத்தில் அவர்களைக் கொண்டுபோய் மணல்காட்டில் இறக்கி விட்டார்.

தங்கத்துரை, குட்டிமணி, தேவன் மணல்காட்டில் இருந்து வள்ளத்தில் தமிழ் நாட்டிற்குச் செல்ல முன்னரே ஸ்ரீ சபாரட்ணம் அங்கிருந்து கிளம்பிவிட்டார். ஆனால் இவர்கள் மூவரும் தமிழ் நாடு செல்ல மணல்காட்டிற்கு வந்திருந்த தகவலை பொலிசாருக்கு யாரோ கொடுத்திருந்தனர். இந்தத் தகவலை பிரபாகரன் தான் பொலிசாருக்கு கொடுத்திருக்க வேண்டுமென இன்றுவரை சந்தேகம் நிலவி வருகின்றது.

இந்த மூவரையும் பொலிசார் கைதுசெய்ய மணல்காட்டிற்கு வந்திருந்தனர். அப்பொழுது குட்டிமணி தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் பொலிசாரினால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. மூவரையும் பொலிசார் கைதுசெய்தனர். தங்கத்துரை, குட்டிமணி, தேவன் ஆகியோர் கைதுசெய்யப்பட்ட தகவலை அறிந்த பிரபாகரன் ரெலோ இயக்கத்தின் ஆயுதங்களை வேறு இடம் மாற்றி வைத்துவிட்டார். எனவே, பொலிசாரினால் ரெலோ இயக்கத்தின் ஆயுதங்களைக் கைப்பற்ற முடியவில்லை.

இந்தக் கொள்ளையின் பின்னர் பிரபாகரனால் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை. எனவே சந்தர்ப்பம் கிடைத்ததும் வள்ளம் ஒன்றின் மூலம் பிரபாகரன் தமிழ்நாட்டிற்குச் சென்று விட்டார்.

பயங்கரவாதிகளின் வாழ்க்கை என்றுமே அச்சம் நிறைந்ததாகவே இருந்தது. பயங்கரவாதிகளால் பொதுமக்களும், பொலிசாரும் கொல்லப்படுவதும், பொலிசாராலும், இராணுவத்தினராலும் பயங்கரவாதிகள் கொல்லப்படுவதும் இலங்கையில் காலாகாலத்தில் சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சியாக மாறி வந்துகொண்டிருந்தது.

தொடரும்

# லங்கா ராணி

(கடந்தவார தொடர்ச்சி.....)

சுருட்டை வாயில் வைத்து இழுத்தார்.

இளைஞர்களின் முகத்தையும் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டு சிறிது நேரத்தின்பின் தொடர்ந்து கூறினார்.

"பிரிய வேணும், பிரிய வேணும், இது பாருங்கோ வெள்ளைக்காரன் கண்மூடித்தனமாகச் செருகி விட்டிட்டுப் போயிருக்கிறான். முதலில் பிரியவேணும். இலங்கையர், இலங்கையர் என்று சும்மா சொல்லுகிறதில ஒன்றுமில்லைப் பாருங்கோ. வெள்ளைக்காரன் விட்டுவிட்டுப் போனதுகளை வைச்சுக்கொண்டு வெட்டிக் கொத்திக்கொண்டு கிடக்கிறம். நாங்கள் யார் என்பதை முதலில் நிர்ணயிக்கவேண்டும் பாருங்கோ. அப்படிப் பார்க்கப் போனால் தமிழ் சிங்களமெண்டு தான் வருகுது. முதலில் நாங்கள் பிரிஞ்சு எங்கட எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும் பாருங்கோ. இல்லாவிட்டால் இப்ப நடக்கிறமாதிரி நாங்கள் வெட்டிக் கொத்திக் கொண்டு கிடக்க யார் வேண்டுமானாலும் இலங்கை வந்து எதுவும் செய்துவிட்டுப் போய்விடுவான்கள். பிரிகிறது எங்களுக்கு நல்லது. அவங்களுக்கும் நல்லது. இப்படித் தமிழ் இனம், சிங்கள இனம் இல்லை, இலங்கையர் என்கிறதை விட்டால் இது இப்படியே போய்க்கொண்டிருக்கும். ஆயிரம் வருஷத்துக்கும் போகும். நீங்கள் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தீங்களென்றால் தெரியும். இரண்டாயிரத்து ஐநூறு வருஷம் தமிழரும் சிங்களவரும் இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழர்கள் தமிழர்களாகவும், சிங்களவர்கள் சிங்களவர்களாகவும்தான் இருந்திருக்கிறாங்கள்." நாகலிங்கம் இப்படிக் கதைக்கத் தொடங்கவே கொழும்பு வியாபாரிக்குத் தனது கொழும்புக்கடைகள் வீடுகள் இவை பற்றிய சிந்தனை வந்துவிட்டது போல் அவருடைய முகம் மாறியது கேட்டார்,

"அப்ப நீங்கள் சொல்லுகிறியள் இதைப் பேச்சுவார்த்தைகளால் தீர்க்க ஏலாதென்று."

"என்ன பேச்சுவார்த்தை பாருங்கோ. இந்தச் செல்வநாயகமான செல்வநாயகமும்தானே பேசிக்கொண்டு திரிஞ்சது. அது செய்யக்கூடிய காலமெல்லாம் போயிட்டுது பாருங்கோ. இந்தத் திருகோணமலையைப் போட்டுப்படுத்துகிறபாடு, மலை நாட்டில் எங்கள் ஆட்களை படுத்துகிறபாடு, இங்கு ஏதும் இருக்கெண்டால் அந்த உழைப்புத்தானே. ஒண்டாக இருக்க ஏலுமென்றால் பாருங்கோ இப்படியெல்லாம் செய்யமாட்டான்கள். ஏதோ பௌத்தம் சிங்களம் அதில் தாங்கள் மட்டும்தான் என்று ஆசைப்படுகிறான்கள். எத்தனை வருஷம் வெள்ளைக்காரன் இருந்திட்டு இப்பதானே போயிருக்கிறான். ஏதோ அதெல்லாத்தையும் திரும்பவும் கொண்டு வரவேண்டுமென்று ஆசையைக் கிளப்பிவிட்டிருக்கினம். வச்சுச் செய்யட்டுமன். நாங்கள் ஏன் அதுக்குள்ள நின்று குழப்புவான். எங்கடை பொடியன்களும் பாருங்கோ இந்தப் பேச்சுவார்த்தையெல்லாம் போதுமெண்டு நிற்கிறான்கள்."

கொழும்பு வியாபாரிக்கு இவற்றைக் கேட்க ஒரே மனக்குழப்பமாக இருந்தது. அவருடைய வீடு வாசல்கள், கடைகள் உறவினர்கள் பலரும் கொழும்பிலேயே இருந்தனர். நாகலிங்கம் கூறுவது எதையும் காதில் போட்டுக்கொள்ள முடிந்ததாகத் தெரியவில்லை. இந்த நிலை போகப் போக மோசமாகிக் கொண்டு போனது.

பொடியன்கள்! பொடியன்களால் என்ன செய்ய ஏலும்? எல்லாருக்கும் "வேலை கொடுக்க எல்லாம் சரியாகப் போயிடும்" என்றார்.




நாகலிங்கம் கதையை வளர்க்க விரும்பவில்லை, என்றாலும் தொடர்ந்தார். "பொடியன்களின்ரை வேலையாலதானே கப்பல்ல வாறியள். உங்களுக்கு நிலைமைகள் அவ்வளவு சரியா விளங்குதில்லைப் பாருங்கோ. நீங்கள் நினைச்சுக்கொண்டு இருங்கோ நான் அப்படி நினைக்கயில்லை. எனி அந்தப் பக்கம் போகமாட்டன். நீங்கள் வேணுமெண்டால் இருந்து பாருங்கோ, பொடியன்கள் விடமாட்டான்கள்.

இதுவரைக்கும் மௌனமாக இருந்த சரவணனால் மேலும் பொறுக்க முடியவில்லை. நாகலிங்கத்தைப் பார்த்துக் கேட்டான்.

"நீங்கள் இந்தத் தளத்தில் தானே இருக்கிறியள்." பின் தளத்து யன்னல் வழியாகக் கைகளைக் காட்டினான்.

"ஓம் ஏன் தம்பி?"

"அங்கை தேத்தண்ணி கொடுக்கிறான்கள். போய்க் குடியுங்கோ" சரவணன் இப்படிக் கேட்டது நாகலிங்கத்தைத் தேநீர் குடிக்க அனுப்புவதற்கு மாத்திரமல்ல, கொழும்பு வியாபாரி முன்தளத்தில் இருக்கிறார் என்பது சரவணனுக்குத் தெரிந்திருந்தது. நாகலிங்கத்தை தேநீர் குடிக்க அனுப்பினால் கொழும்பு வியாபாரி தனித்து இருப்பார் என்றும் அவன் எண்ணினான். ஆனால் நடந்தது முற்றிலும் எதிர்பாராதது. கொழும்பு வியாபாரி உடனே எழுந்தார். நாகலிங்கத்தாரின் பேச்சு அவரைக் குழப்பியிருந்தது. உடனே சரவணன் "முன் தளத்திற்கு நேரம் எடுக்கும்" என்றான்.

"அதுக்கென்ன நான் இங்கை போய்க்குடிப்பன். இந்த மழைக்கு ஒரு தேத்தண்ணி குடிச்சா நல்லதுதானே" என்று கூறியவாறு அங்கிருந்து வெளியேறினார். சரவணன் சிரித்தான். நாகலிங்கத்தைப் பார்த்தான். அவர் இன்னுமொரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டே,

"என்ன தேத்தண்ணி நான் இந்தச் சுருட்டைக் குடிச்சுக் கொண்டு எத்தனை நாளைக்கும் கிடப்பன்." சரவணனும் குமாரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறித் தளத்திற்கு வந்தனர்.

கப்பல் போய்கொண்டிருந்தது. கடலலைகள், மழைக் காற்று;

பிரயாணம் தொடர்ந்தது. ராணியைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று சரவணன் கூறிக்கொண்டு கீழ்த்தளத்திற்கு இறங்கினான். குமார் சமையல் அறைக்குப் போனான். கீழ்த்தளத்தில் உள்ளவர்கள் சற்று மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். மாணவர்கள் தேநீர் கொடுத்து மகிழ்வித்திருந்தனர். லங்கா ராணியில் உள்ள தமிழர்களில் அனேகமானவர்கள் கொழும்பில் வாழ்ந்தவர்கள். கலவரம் மலை நாட்டில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. 2500 ஆண்டுகள் இலங்கை சரித்திரத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக இருந்திருக்கிறார்கள். சிங்கள அரசர்களின்கீழ் தமிழர்கள் மந்திரிகளாகவும் பிரதம மந்திரிகளாகவும் இருந்திருக்கிறார்கள். இதேபோல் தமிழ்மன்னர்களின்கீழ் சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாக இருந்திருக்கிறார்கள். ஆயினும் என்றும் அவர்கள் ஒன்றாக இலங்கையர் என்ற உணர்வில் கட்டுண்டிருக்கவில்லை. தமிழர் தமிழர்களாகவும் சிங்களவர் சிங்களவர்களாகவுமே இருந்திருக்கிறார்கள். இதைச் சரித்திர ஏடுகள் புலப்படுத்துகின்றன.




யாழ்ப்பாணத்திலிருந்து தமிழர்கள், ஆங்கிலேயர் காலத்தில்தான் கொழும்பு மற்றப்பகுதிகளுக்குச் சென்றார்கள். அந்த நாட்களில் இலங்கை ஒற்றையாட்சியின் கீழ் வந்துவிட்டது.

யாழ்ப்பாணத்து தமிழர்கள் இலங்கையின் மற்றப்பகுதிகளுக்கு மாத்திரமல்ல சிங்கப்பூர் மலேசியா போன்ற இடங்களுக்கும் சென்றனர். ஆங்கிலேயர் ஆட்சியில் சிறந்த நிர்வாகிகளாகப் பல நாடுகளிலும் கடமை புரிந்தனர். இதேபோல் பொறியியல்துறை, பொதுநிர்வாகம், முப்படைகள் யாவற்றிலும் தமிழர்கள் அதிகமாகவே இருந்தனர்.

சிங்களவர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்தர்கள் அவர்களுடைய கிராமியவாழ்க்கை பௌத்த கோயிலைச் சுற்றியதாக அமைந்திருக்கும். பௌத்த விகாரைகளில் பல பௌத்தபிக்குகள் இருப்பார்கள். பின்பு பண்ணைக்காரர், முதலாளிகள்,

அவர்களின்கீழ் வேலை பார்க்கும் கிராமிய மக்கள். அனேகமான வீடுகள் இன்னும் குடிசைகள்தான். எங்கும் வறுமைதான். ஆங்கிலேயர் காலத்தில் பள்ளிகளைத்திறந்த கிறிஸ்தவசமயபோதகர்களால் இந்தப் பௌத்த கிராமங்களை ஊடுருவ முடியவில்லை. ஆனால் தமிழர்களின் பகுதிகளில் அந்த நிலையிருக்கவில்லை. முதலில கல்லூரிகள் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டன. பலர் படித்துப்பட்டம் பெற்றனர். இவ்வாறு தமிழர்கள் கல்வியில் முன்னேறுவதற்கு காரணம் நேர்மை, கட்டுப்பாடு, முன்னேற்றம் என்ற கோட்பாடுகளுடன் புதிய சூழ்நிலைகளை உணர்ந்து உழைத்ததுதான்.

தமிழர்கள் பிச்சா பாத்திரம் ஏந்தி புத்த பிக்குகள் வேடம் பூண்டு படிப்பது பாவம் என்று கூறிக்கொண்டு உண்டியல் பணத்தில் இந்த நிலைக்கு கொண்டு வந்தவர்களல்ல. யாரையும் காட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் வெள்ளைக்காரனுடன் சேர்ந்தவனுமல்ல.

இலங்கையர் சுதந்திரம் அடைந்தது ஆங்கிலேயர் தமிழர்களின் உரிமைகள் புதிய சூழ்நிலைகளில் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை ஓரளவு ஏற்றுக்கொண்டு இதற்காக அரசியல் சட்டத்தில் இதற்காக சல பிரிவுகளை ஏற்படுத்திவிட்டுச் சென்றனர். அவர்கள் இலங்கையை விட்டுப் பிரிந்தவுடன் இலங்கை அரசியல் இந்த பௌத்த சிங்கள சுழியில் அகப்பட்டுக் கொண்டது. சிங்கள மக்களின் வறுமைக்கு காரணமாகிய சமய பிரபுத்துவம், நிலபிரபுத்துவம், முதலாளித்துவம் மறைக்கப்பட்டு தமிழர்கள் பலிக்கடாவாகினர். இதற்காக தாங்கள் சமஷ்டிமுறையில் ஆட்சியை அமைத்து தங்கள் தங்கள்பாரம்பரிய பிரதேசங்களுக்குச் சென்று உழைக்கவேண்டும் என்று தமிழ்த்தலைவர்கள் போராடினார்கள். இதற்குப்பிறகும் சிங்களத் தலைவர்கள் முழு இலங்கைத்தீவும் ஒருபௌத்த சிங்கள நாடு. தமிழர்களுக்கு இங்கே இடமில்லை. என்ற போக்கை வலுப்படுத்தினர். இவ்வாறான பிரச்சினைகளுடன் தமிழர்கள் தொடர்ந்து சிங்களப்பகுதிகளில் வாழ்வதற்கு முக்கிய காரணம் அவர்களுடைய வாழ்க்கைப்பிரச்சினைதான்.


> ஆங்கிலேயர் இலங்கையை விட்டுப் பிரிந்தவுடன் இலங்கை அரசியல் இந்த பௌத்த சிங்கள சுழியில் அகப்பட்டுக் கொண்டது. சிங்கள மக்களின் வறுமைக்கு காரணமாகிய சமய பிரபுத்துவம், நிலபிரபுத்துவம், முதலாளித்துவம் மறைக்கப்பட்டு தமிழர்கள் பலிக்கடாவாகினர். இதற்காக தாங்கள் சமஷ்டிமுறையில் ஆட்சியை அமைத்து தங்கள் தங்கள்பாரம்பரிய பிரதேசங்களுக்குச் சென்று உழைக்க வேண்டும் என்று தமிழ்த்தலைவர்கள் போராடினார்கள். இதற்குப்பிறகும் சிங்களத் தலைவர்கள் முழு இலங்கைத்தீவும் ஒருபௌத்த சிங்கள நாடு. தமிழர்களுக்கு இங்கே இடமில்லை. என்ற போக்கை வலுப்படுத்தினர்.

கலவரம் தொடங்கியதும் கொழும்பு அகதிகள் முகாம்களில் சுமார் பத்தாயிரம் பேர் இருந்தனர். அகதிகள் முகாமைச்சூழவுள்ள கொழும்புப் பகுதிகளான கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கல்கிசை போன்ற இடங்களில் தமிழர்கள் ஏராளமானவர்கள் இருந்தார்கள். அவர்கள் கொழும்பு வாழ்க்கைக்கு நன்றாக பழகிவிட்டார்கள். அகதிகளாக முகாம்களில் தஞ்சம் புகுவதைப் பார்க்கிலும் அடி விழுந்தால் விழட்டும் ஏற்றுக்கொள்கிறோம் என்று இருந்தவர்கள் ஏராளம்பேர் இருந்தனர். அரசாங்கம் அகதிகள் யாழ்ப்பாணம் போவதற்கு போக்குவரத்து செய்வதில் இழுபறி பண்ணிக்கொண்டிருந்தது. பின்பு விமானங்களிலும் கப்பல்களிலும் அனுப்புகின்ற செய்திவந்தது. இந்தச் செய்தி பரவியதும் அந்தப் பகுதிகளில் இருந்த தமிழர்களில் சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் ஒரு சில மணித்தியாலங்களில் மூன்று புதிய அகதிகள் முகாம்களை திறக்கவைத்து அவற்றைத் தங்களால் நிரப்பிக் கொண்டனர். அரசாங்கம் மாத்திரம் அந்த பிரயாண வசதிகளை பலவந்தமாக நிறுத்திக்கொள்ளாமல் தொடர்ந்திருந்தால் கொழும்பில் ஒரு தமிழர்களும் மிச்சமிருந் திருக்கமாட்டார்கள்.

(தொடர்ச்சி 19 இல்......)

# வில்பத்துவில் நடப்பது என்ன? நிசாத் – ஆனந்ததேரர் விவாதம்

எம்.எஸ். முஸப்பிர்



*(கடந்த வாரத்தொடர்ச்சி...)*

**ஹிரு தொலைக்காட்சி**–நல்லது. நாங்கள் கேட்கும் கேள்வி இதுதான். அந்தப் பிரதே சங்கள் வில்பத்துவுக்குரிய ஊட்டமளிக்கும் பிரதேசங்கள் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா இல்லையா?

**அமைச்சர் றிசாத் பதியுதீன்**–அந்தப் பிரதேசங்கள் வில்பத்து வனாந்தரத்திற்கு ஊட்டமளிக்கும் பிரதேசங்கள் இல்லை என்பதைக் கூறவே நான் இங்கு வந்திருக்கின்றேன்.

**ஹிரு தொலைக்காட்சி**–நல்லது... நல்லது. மதிப்புக்குரிய தேரர் அவர்களே அந்தப் பிரதேசங்களில் ஆரம்பத்தில் வசித்தவர்களையே தற்போது குடியேற்றுவதாக இங்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார். தற்போது குடியேற்றப்படுபவர்கள் குடியேறுவது அவர்கள் ஆரம்பத்தில் வசித்த இடத்தில்தானா என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

**பாகியங்களை ஆனந்த சாகர தேரர்**– ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அமைச்சர் அவர்கள் காட்டும் முள்ளிக்குளம் எனும் கிராமம் சரியானது. நான் அதனை ஏற்றுக் கொள்கிறேன் அவ்வளவுதான். மற்ற அனைத்தும் அவர் பொய்யாகவே குறிப்பிடுகின்றார். முள்ளிக்குளம் என்று இருந்த அந்தக் கிராமத்தில்தான் இந்த கடற்படை முகாம் அமைக்கப்பட்டது.

**ஹிரு தொலைக்காட்சி** – அதாவது 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர்தானே?

**பகியங்களை ஆனந்த சாகர தேரர்** –ஆம். யுத்தம் முடிவடைந்ததன் பின்னர். (அவர் அங்குல வரைபடம் ஒன்றைக் காட்டி அதில் இதுதான் மரிச்சிக்கட்டி என்றும், இந்த மிகச் சிறிய பகுதியில்தான் மக்கள் வாழ்ந்தார்கள். அதுவும் கடற்றொழிலாளர்கள். அவர்களும் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருக்கவில்லை.

(மன்னார் மாவட்டச் செயலாளரின் கடிதம் ஒன்றை தேரர் காட்டுகின்றார்) வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணியை விடுவித்தல் என்றே இந்தக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தலைப்பு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முஸ்லிம் மக்கள் என்பது மிகவும் தவறான ஒரு வசனம். விஷேடமாக அந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்தது முஸ்லிம் மக்கள் மாத்திரமல்ல. இங்குள்ள கிராமங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்கள். அவை முஸ்லிம் கிராமங்களல்ல. அவ்வாறானால் குவேனி வந்தது இந்தக் கிராமத்திற்குத்தான். விஜயன் வந்ததும் அங்குதான்.

எனவே சிங்கள கிராமங்களே இருக்க வேண்டும். இது பச்சையான இனவாதமாகும். இந்த விடயத்தைத்தான் பேச வேண்டும். இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் என்றில்லாமல் இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றுவது என்று எழுதியிருந்தால் சரியாக இருந்திருக்கும். (இவ்வாறு அந்தக் கடிதத்தை அவர் வாசித்துக் காட்டுகிறார்) இதன் பிரகாரம் மன்னாரில் 1080, முல்லைத்தீவில் 983, வவுனியாவில் 352 என்று 2388 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனது வாதம் என்னவெனில், இந்தக் காணிகள் அனைத்தும் முன்னர் மக்கள் வசித்த இடங்கள்தான், அவை அந்த மக்களின் சொந்தக் காணிகள்தான், இங்குதான் அவர்களது வீடுகள் இருந்தது என்று அமைச்சர் அவர்கள் கூறுவாராக இருந்தால் அவருக்கு வனப்பாதுகாப்பு திணைக்களத்திடம் அனுமதி கோரத் தேவையுமில்லை, ஜனாதிபதி செயலணி ஊடாக எந்த நடவடிக்கையும் தேவையில்லை அந்த மக்கள் குடியேறுவதற்கு யாரின் அனுமதியும் தேவையில்லை.

இந்த வனாந்தரத்தைத் தொடர்ந்து இவ்ரகள் வெட்டிக் கொண்டு போனார்கள். இவ்வாறு செல்லும் போது சுற்றாடலியலாளர்கள், இந்நாட்டின் மக்கள் இதனை இழுத்தார்கள். இவ்வாறு அவர்கள் இந்த விடயத்தை இழுத்த போது காணி ஆணையாளர் நாயகம் பிரதேச செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதுகிறார். வடகிழக்கு மாகாணங்களில் காணி பகிரும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருக்கின்ற நிலையில் மேற்குறித்த குடும்பங்களுக்காக புதிய காணிகளை வழங்குவதற்கு... புதிய காணிகளை வழங்குவதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்வது பிரச்சினைக்கு உரியது ஆகையால் அரச காணிகளை அகற்றுவது தொடர்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்களைப் பின்பற்றுவது மிக அவசியமான விடயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கின்றார்.

எனவே இங்கு தெளிவான விடயம் என்னவெனில் இங்கு தனியாரின் எந்தக் காணியும் இல்லை, இவை வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்குரிய காணிகள், இந்தக் காணிகளில்தான் ஜனாதிபதி செயலணியைப் பாவித்தும், அமைச்சு அதிகாரங்களைப் பாவித்தும் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே! வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்த காணியைத்தான் உங்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போ்து இவ்வாறு மீள்குடியேற்றத்திற்கு உபயோகப்படுத்துகின்றீர்கள் என்ற குற்றச்சாட்டை மதிப்புக்குரிய தேரர் முன்வைக்கின்றார்?

**அமைச்சர் றிசாத் பதியுதீன்** – மதிப்பிற்குரிய தேரருக்கு நான் கூற வேண்டும், முள்ளிக்குளம் என்றொரு கிராம் அங்கிருந்ததாக அவர் கூறுகின்றார். ஏன் அவ்வாறு கூறுகின்றார் என்றால் அது சுமார் ஆயிரம் ஏக்கர் கொண்ட இடம். அங்கு இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனால்தான் அந்தக் கிராமம் மாத்திரம்தான் இருந்ததாக அவர் கூறியிருக்கலாம். மரிச்சிக்கட்டி எனும் பாரம்பரிய கிராமம் ஒன்று இருந்தது. அதனை நான் இப்போது காட்டுகின்றேன். பாலக்குழி எனும் பாரம்பரிய முஸ்லிம் கிராமம் ஒன்று இருந்ததையும் நான் காட்டுகிறேன். இவ்விடத்தில் கரடிக்குளி என்றொரு முஸ்லிம் கிராமம் இருந்தது. கொண்டச்சி என்ற முஸ்லிம் பாரம்பரிய கிராமமும் இருந்தது. கொண்டச்சி கிராமத்தில் முஸ்லிம் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதன் விபரங்களை இங்கு நான் கொண்டு வந்திருக்கின்றேன். உங்களால் அதனை கல்வி அமைச்சிலும் தேடிப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம். கொண்டச்சி முஸ்லிம் பாடசாலையானது 1956ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதே போல கரடிக்குளியிலும் 1957ஆம் ஆண்டில் அரச முஸ்லிம் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று மரிச்சிக்கட்டியிலும் ஐம்பதாம் ஆண்டு காலப்பகுதிகளில் முஸ்லிம் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. பாலக்குளியிலும் ஐம்பதாம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்தக் கிராமங்களில் மக்கள் இல்லாவிட்டால் ஏன் அரசாங்கம் பாடசாலைகள் ஆரம்பிக்கபடணும்? மக்கள் இல்லாமல் பாடசாலை அமைக்க மடையர்களா அந்தக் காலத்தில் இருந்தார்கள்? இந்தப் பாடசாலை விபரங்களை கல்வி அமைச்சில் சென்று பார்த்துக் கொள்ள முடியும்.

மேலும் இவை இந்தப் பிரதேசத்தில் இருந்த பாராம்பரிய முஸ்லிம் கிராமங்கள் என்பதைக் காட்ட என்னால் சில படங்களைக் காட்ட முடியும். இது பாலக்குளி கிராமம். இது கரடிக்குளி கிராமம். இது கரடிக்குளி வாசிகசாலை. இது கரடிக்குளியில் இருந்த பழைய வீடு. இது இன்னமும் உள்ளது. சென்று பார்த்துக் கொள்ள முடியும். இது பாரம்பரிய முஸ்லிம் பள்ளிவாசல். இந்தப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் வசிக்கவில்லை, தமிழ் மக்களே வசித்தார்கள் என்றார். முஸ்லிம் மக்கள் வசிக்காவிட்டால் ஏன் இங்கு பள்ளிவாசல் இருக்க வேண்டும்? அது மட்டுமல்ல ஆர். பிரேமதாச அவர்கள் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது மரிச்சிக்கட்டுவில் சூசைதாசன் என்ற பாராளுமன்ற உறுப்பினருடன் எண்பதாம் ஆண்டு காலப்பகுதியில் சென்று வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார். இந்த நினைவுக் கற்கள் நான் இன்று நேற்று நாட்டியவையல்ல. (அமைச்சர் சில புகைப்படங்களைக் காட்டுகிறார்) தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சென்று இவை உண்மையா அல்லது பொய்யா என்பதை சரிபார்த்துக் கொள்ளலாம். எனவே மரிச்சிக்கட்டு என்ற முஸ்லிம் கிராமம் அங்கு இருந்தது. இங்கு அப்பட்டமான பொய் கூறப்படுகின்றது!. அதே போல பாருங்கள் அந்த பிரதேசங்களில் இருந்த உடைந்து போன பாடசாலைக் கட்டடங்கள் இவை. இவை தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இது காடு வளர்ந்து காணப்படும் பழைய பள்ளிவாசல். 1970.08.09ஆம் திகதி இது கட்டப்பட்டிருக்கின்றது என்ற தகவல் இதில் உள்ளது பாருங்கள். இது இன்று நேற்று கட்டிய பள்ளிவாசலல்ல. தேவையெனில் சென்று பார்த்துக் கொள்ள முடியும். இது மரிச்சிக்கட்டி பள்ளிவாசல். தற்போது இங்கு மரிச்சிக்கட்டுவில் முள்ளிக்குளம் என்ற சிறிய தமிழ் கிராமம் மட்டுமே இருந்ததாக சொல்லப்பட்டது. முஸ்லிம் மக்கள் வசிக்காவிட்டால் எதற்கு முஸ்லிம் பள்ளிவாசல் அங்கு இருந்திருக்க வேண்டும்? இது 1986ஆம் ஆண்டு கட்டப்பட்ட நீர்த் தாங்கி ஒன்று. இதுதான் மரிச்சிக்கட்டு எல்லை. இது மட்டும்தான் நாம் புதிதாக அங்கு கட்டிய கட்டடம். இது நான் கூறிய 1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் பாடசாலை. முஸ்லிம் மாணவர்கள் இல்லாவிட்டால் ஏன் முஸ்லிம் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்?

இந்தப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் மாத்திரம்தான் இருந்திருந்தால் ஏன் அங்கு பள்ளிவாசல்கள் அமைக்கப்பட வேண்டும்? எனவே இந்த நான்கு கிராமங்களிலும் பள்ளிவாசல்கள் இருந்தன. நான்கு கிராமங்களிலும் முஸ்லிம் பாடசாலைகள் இருந்தன. முள்ளிக்குளத்திலும், மரிச்சிக்கட்டியிலும் தபால் அலுவலகங்கள் இருந்தன. கொண்டச்சியில் அரச நூலகம் இருந்தது. இவை அனைத்தினதும் வரலாறுகளை நான் இங்கு கொண்டு வந்திருக்கின்றேன். எனவே இங்கு கூறப்படுவது அப்பட்டமான பொய். தவறான விடயங்களை இவ்வாறு நாட்டு மக்களுக்கு கூறுவது நல்லதல்ல.

மதிப்புக்குரிய தேரர்கள் அங்கு சென்று வந்த பின்னர் அறிக்கை ஒன்றைத் தயாரித்து வழங்கியிருக்கின்றார்கள். இது தாங்கள் தயாரித்து வழங்கியதுதானே? (அறிக்கை புத்தகம் ஒன்றை தேரரிடம் காட்டுகிறார்)

**பகியங்கள ஆனந்த சாகர தேர்ர** – ஆம். அனைத்து விடயங்களும் அதில் பெறுப்புடன் கூறப்பட்டுள்ளது.

**அமைச்சர் றிசாத் பதியுதீன்**–இதில் கூறப்பட்டுள்ள விடயத்தைப் பாருங்கள். தற்போது இங்கு தெரிவிக்கப்பட்டதுதானே இங்கு கிராமங்கள் இல்லை, இது வனாந்தரம்,

*(தொடர்ச்சி 14 இல்......)*

# பரமேஸ்வராக் கல்லூரியும் சேர். பொன் இராமநாதனும்





கே.ரி.இராஜசிங்கம்

1920 ஆம் ஆண்டு கீரிமலையில் இந்து வாலிபர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்.

வருடாந்த இந்து வாலிபர் சங்கத்தில் பங்குபற்றிய இளைஞர்கள், இந்து இளைஞர்களுக்கு என்று தனியான கல்விக்கு கல்லூரி ஒன்று கட்டித்தருமாறு கேட்டுக் கொண்டார்கள்.

ஏற்கனவே 20 யூன் 1913 ஆம் ஆண்டில் சுன்னாகத்தில் இந்து மகளிர்களுக்கு என்று ஒரு கல்லூரி பொன்னம்பலம் இராமநாதனால் கட்டப்பட்டது தெரிந்ததே. இதன் அடிப்படையிலேயே இளைஞர்களுக்கு என்று ஒரு கல்லூரியைக் கட்டித் தருமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.

இளைஞர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து, திருநெல்வேலியில் 25 ஏக்கர் நிலத்தை இராமநாதன் கொள்வனவு செய்து, இந்து இளைஞர்களுக்கான கல்லூரியாக பரமேஸ்வராக் கல்லூரியை நிர்மாணித்தார்.

இந்தக் கல்லூரியில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தங்கியிருந்து படிக்க விடுதி ஒன்றையும் கட்டினார். இந்த மாணவர்களின் விடுதிக்கான உணவுச் செலவுக்காக கிளிநொச்சியில் 400 ஏக்கர் நிலத்தினை வாங்கி கல்லூரியின் பெயரில் எழுதி வைத்தார்.

22 ஒகஸ்ட் 1921 ஆம் ஆண்டு கல்லூரியை பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தக் கல்லூரியின் பாலர் பாடசாலைக்கு அதிபராக அக்காலத்தில் சைவ சித்தாந்தத்தில் அதிகாரம் பெற்றவர் என்றும், தத்துவமேதை என்று கருதப்பட்டவரும், கல்வியில் நீண்ட காலம் அனுபவம் பெற்றவருமான எஸ்.சிவபாலசுந்தரம் அவர்கள் நியமனம் பெற்றார். அதேபோல உயர் வகுப்புக்கான அதிபராக கல்விமானும், சட்டத்தரணியுமான பிற்காலத்தில் சேர் பட்டம் பெற்ற சேர். ஏ. மகாதேவா அதிபராக நியமிக்கப்பட்டார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் தான் முதன்முதலில் தமிழ்நாட்டில் இருந்து வந்த எஸ். நடேசன் அவர்கள் ஆசிரியராகவும், பிற்காலத்தில் கல்லூரியின் தலைவராகவும் கடமையாற்றினார்.

1962 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு அரசாங்கப் பாடசாலையாக விளங்கிற்று.

ஆரம்பத்தில் இருந்தே இந்தப் பரமேஸ்வராக் கல்லூரி வடமாகாணத்தின் கல்வியில் முக்கிய கேந்திர நிலையமாக அமையும் என்று கல்லூரியைக் கட்டிய பொன்னம்பலம் இராமநாதன் எதிர்பார்த்தார் என்று கூறப்படுகின்றது.

1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கல்வி அமைச்சர் பரமேஸ்வராக் கல்லூரியை ஆரம்பத்தில் உயர்கல்வி நிலையமாக யாழ்ப்பாண கம்பஸ் என்ற அந்தஸ்துடன் உருவாக்கினார்.



யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக பின்னர் அது உருவாகிற்று. இதனை அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி திறந்து வைத்தார்.

அன்று இந்து இளைஞர்களுடைய கல்விக்கு வித்திட்ட பொன்னம்பலம் இராமநாதனின் பரமேஸ்வராக் கல்லூரி, இன்று தமிழ் இளைஞர்களின் உயர்கல்விப் பீடமாக மாறியுள்ளது.

அதையடுத்து, 1921 ஆம் ஆண்டு இலங்கைக்கு அன்றைய முடிக்குரிய இளவரசர் விஜயம் செய்தார். அவரை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்துவதற்கு பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை பிரித்தானிய அரசாங்கம் கேட்டுக்கொண்டது.

அன்று மதியம் 12 மணிக்கு, பிரித்தானிய இளவரசர் கொழும்புத் துறைமுகத்தில் வந்து இறங்குவார் என அறிவிக்கப்பட்டது. அதையடுத்து, காலை 10 மணி தொடக்கம் துறைமுகத்தை நோக்கிச் செல்லும் எல்லா வீதிகளும் மூடப்பட்டன. வீதிகள் எங்கும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அப்பொழுது 11.45 மணிக்கு ஒரு மோட்டார் வாகனம் துறைமுகத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது. வாகனங்கள் எல்லாம் தடைசெய்யப்பட்ட பின்னர் எவ்வாறு இந்த வாகனம் மட்டும் வந்து கொண்டிருக்கின்றது என விசனமடைந்த பொலிஸ் அத்தியட்சகர் நிறுத்தினரர்.

வயதில் முதிர்ந்தவரான பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் வாகனத்தினுள் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த பொலிஸ் அத்தியட்சகர் அவர்களுக்கு ‘சலூட்’ அடித்து மேற்செல்லுமாறு அனுமதியளித்தார்.

அதேபோல தடைசெய்யப்பட்ட, வீதியில் வந்து கொண்டிருந்த இராமநாதன் வாகனத்தைப் பார்த்த வேறு ஒரு பொலிஸ் அத்தியட்சகர் வாகனத்தை மறித்தார். இராமநாதன் அமர்ந்திருந்ததைக் கண்ட அந்த பொலிஸ் அத்தியட்சகரும் இராமநாதனுக்கு ‘சலூட்’ அடித்து அவரை மேலும் செல்ல வழிவிட்டார்.

இவ்வாறு இரண்டு பொலிஸ் அத்தியட்சகர்களும் தடைசெய்யப்பட்ட வீதியில் வந்த இராமநாதன் அமர்ந்திருந்த வாகனத்தை செல்வதற்கு அனுமதித்தை அவதானித்த பொலிஸ்மா அதிபர் தடைசெய்யப்பட்ட வீதியில் மோட்டார் வாகனத்தை செல்ல எவ்வாறு அனுமதிப்பார்கள் என விசனமடைந்து தனது குதிரையை அந்த வாகனத்தை நோக்கி முடுக்கிவிட்டார்.


குதிரையில் வாகனத்தை வந்தடைந்த பொலிஸ்மா அதிபர் வாகனத்தினுள் பொன்னம்பலம் இராமநாதனைப் பார்த்தவுடன் குதிரையிலிருந்து இறங்கி, பொன்னம்பலம் இராமநாதனுக்கு ‘சலூட்’ அடித்து துறைமுகம் செல்ல அனுமதித்தார்.

பொன்னம்பலம் இராமநாதனும் குறித்த நேரத்திற்கு துறைமுகத்தை அடைந்து, முடிக்குரிய இளவரசரை வரவேற்றார்.

1911 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்தை தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருந்த பொன்னம்பலம் இராமநாதனுக்கு, 1921 ஆம் ஆண்டு ஐந்தாம் ஜோர்ச் மன்னரால் சேர் பட்டம் வழங்கப்பட்டது. அதையடுத்து அவரை சேர். பொன்னம்பலம் இராமநாதன் என்று அழைத்தார்கள்.

(தொடரும்)

## ரஜினி சொல்லைத் தட்டாத பச்சன்



ரஜினிகாந்த், அமிதாப்பச்சன் நல்ல நண்பர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் 2.0 படத்தில் முதலில் வில்லனாக நடிக்க ஷங்கர், அமிதாப்பச்சனைத்தான் அணுகினராம். அமிதாப் உடனே ரஜினியை தொலைபேசியில் அழைத்து நான் நடிக்கலாமா என்று கேட்டாராம். அதற்கு ரஜினி, 'வேண்டாம், நீங்கள் வில்லனாக நடித்தால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்' எனக் கூறினாராம். அதனால் தான் அந்தப் படத்தில் நான் நடிக்க சம்மதிக்கவில்லை என அமிதாப்பச்சன் கூறியுள்ளார்.

## ஐஸ் இன் மாற்றம்

ஐஸ்வர்யாராய் குழந்தை ஆரத்யா பிறந்த பிறகு சிறிது காலம் நடிப்புக்கு ஓய்வு கொடுத்தார். 'ஜஸ்பா' படம் மூலம் மீண்டும் 'பாலிவுட்' பட உலகுக்கு திரும்பினார். ஆனால் இந்தப் படம் எதிர்பார்த்தபடி ஓடவில்லை.



தற்போது, கரண் ஜோகிதர் இயக்கத்தில், 'ஏக் தில் ஹை முஷ்கில்' என்ற படத்தில் ஐஸ்வர்யாராய் நடித்து வருகிறார். ரன்பிர் கபூர் ஹீரோவாக நடிக்கும் இந்தப் படத்தில் கிரிக்கெட் வீரர் கோலியின் காதலி அனுஷ்கா சர்மாவும் நடிக்கிறார். இந்தப் படத்தில் ஐஸ்வர்யாராயும், நாயகன் ரன்பிர் கபூரும் உதட்டு முத்தம் கொடுக்கும் காட்சி ஒன்று படமாக இருந்தது. ஆனால் அந்தக் காட்சியில் நடிக்க ஐஸ்வர்யா


மறுத்துவிட்டார். இதனால் இந்தக் காட்சியை மாற்றி வேறு விதமாக படமாக்க இயக்குனர் திட்டமிட்டுள்ளார். ஆடை குறைப்பு, படுக்கை அறை மற்றும் கவர்ச்சியான காட்சிகளிலும் நடிப்பதில்லை என்று ஐஸ்வர்யாராய் முடிவு செய்துள்ளார். இதுகுறித்து ஐஸ்வர்யாராய் கூறும்போது, நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் மட்டுமே நடிக்க முடிவு செய்திருக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.




இ
படம்
இ



## கரையோரம்



## தமிழ் ரசிகர்கள் அன்புடன் உ

தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் 'பிசி' யாக நடித்
கொண்டார். தங்கமகன் படத்தில் தனுசுடன் ந
எந்த மொழி படமாக இருந்தாலும் சமாளித்துக்
என்னை நடிகை ஆக்கியது தமிழ் படம்தான்
படத்தின் மூலம் நடிகை ஆனேன். இதுதவிர தமிழில்
தயாராக இருக்கிறது. விஜய்யுடன் 'தெறி', ரஜினிய
கடந்த அன்பு வைத்திருக்கிறேன். அவர்களுடைய ஆ
பார்க்கிறேன். சென்னையில் எனக்கு பிடித்த இடம் மெரி
படங்களில் சமந்தாவுடன் இணைந்து நடித்தேன். அவர்
இயக்குனர் திருக்குமரன் எனது நடை, உடை பா
ஜோடியாக இருப்பேன் என்று ந



# ...பயங்கள் ...ாக்கிரதை

# ஸ்ரேயாவின் புதுமுயற்சி



நடிகை ஸ்ரேயாவுக்கு மார்க்கெட் இல்லாத நிலையில் ரசிகர்களின் கவனத்தை ஈர்க்க ஜிம்மில் பயிற்சி செய்கையில் புகைப்படம் எடுத்து ட்விட்டரில் வெளியிட்டுள்ளார்.

தமிழ், தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகையாக சுமார் பத்து ஆண்டுகளாக இருந்தவர் ஸ்ரேயா. அவ்வப்போது மலையாளம், இந்தி படங்களிலும் நடித்துள்ளார். 2015 ஆம் ஆண்டில் அவர் தெலுங்கில் ஒரு படமும், த்ரிஷயம் படத்தின் இந்தி ரீமேக்கிலும் தான் நடித்துள்ளார். மார்க்கெட் இல்லாத அவர் விருது விழாக்கள், பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நானும் இன்னும் இருக்கிறேன் என்று சொல்லாமல் சொல்லி வருகிறார். நடிக்க வாய்ப்புகள் வராவிட்டாலும் ஜிம்முக்கு சென்று உடம்பை ஸ்லிம்மாக வைத்துக்கொள்ள தவறாதவர் ஸ்ரேயா.

இந்நிலையில் அவர் ஜிம்மில் பயிற்சி செய்து சிக்கென்று இருக்கும் தனது இடுப்பை புகைப்படம் எடுத்து ட்விட்டரில் வெளியிட்டுள்ளார். பயிற்சி செய்ய மிகவும் பிடிக்கும் என்று கூறி அந்த புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

# கெத்துவாக மாறிய தெறி

இளைய தளபதி விஜய் நடிப்பில் தற்போது பிரமாண்டமாக உருவாகிவரும் படம் தெறி. இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் தலைப்பை முதன் முதலில் கெத்து படத்திற்காக உதயநிதிதான் வைத்தாராம். பிறகு சத்யராஜ் இப்படத்திற்கு கெத்து என்று இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் எனக் கூறியதால் அந்த தலைப்பையே வைத்து விட்டார்களாம்.

...ப்பு.

...பாது.



# ...கள் மீது ...உள்ள எமி



# கதகளி

...'பிசி' யாக நடித்துக் கொண்டிருப்பவர் எமிஜாக்சன். அவர் தனது நடிப்பு அனுபவத்தை பகிர்ந்து ...ல் தனுசுடன் நடித்தது ஜாலியான அனுபவம். நான் நன்றாக நடிப்பதற்கு அவர் உதவினார். ... சமாளித்துக் கொள்வேன். வசனங்களை புரியும்படி எழுதி வைத்துக்கொண்டு படிக்கிறேன். ...மிழ் படம்தான். முதலில் மொடலிங் விளம்பர படங்களில் நடித்தேன். 'மதராசபட்டினம்' ...தவிர தமிழில் தாண்டவம், ஐ, தங்கமகன் படங்கள் திரைக்கு வந்துள்ளன. 'கெத்து' ரிலீஸ் ஆக ... 'தெறி', ரஜினியுடன் '2.0' படங்களில் நடித்து வருகிறேன். தமிழ் ரசிகர்கள் மீது நான் அளவு ...ர்களுடைய ஆதரவுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். என்னை இந்திய பெண்ணாகவே நான் ...த்த இடம் மெரீனா கடற்கரை. புதுச்சேரியும் எனக்கு மிகவும் பிடித்தமான இடம். தங்கமகன், தெறி ...த்தேன். அவர் பழகுவதற்கு இனிமையானவர். 'கெத்து' படத்தில் எனக்கு ஐயங்கார் பெண் வேடம். ...டை, உடை பாவனை அனைத்தையும் மாற்றிவிட்டார். இதில் நான் உதயநிதிக்கு சரியான ...பேன் என்று நம்புகிறேன். இந்த படத்தில் அனுபவித்து நடித்திருக்கிறேன்.

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# வில்பத்துவில் ...

வனப்பாதுகாப்புக்குரிய காணிகள் என்றும் அரச அதிபரின் கடிதமும் காட்டப்பட்டதுதானே. அரசாங்க அதிபரின் கடிதத்திற்கு நான் பின்னர் வருகிறேன்.

இந்த அறிக்கையில் உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பாலைக்குளி என்பது மரங்கள் அல்ல. இது வனப்பாதுகாப்பு பிரதேசமல்ல. பாலைக்குளி என்பது மக்கள் வாழ்ந்த கிராமம். அந்த மக்கள் விவசாயம் செய்தார்கள். சேனைப் பயிர்ச் செய்கை செய்தார்கள். அதே போல இந்தப் பிரதேசத்தில் மிருக வளர்ப்பில் ஈடுபட்டார்கள் என்று நான் கூறினேன். எதுவரைக்கும் செய்தார்கள்? 2009ஆம் ஆண்டு வரையிலும் இதன் உரிமை அந்த மக்களுக்கு இருந்தது. 1990ஆம் ஆண்டு இரண்டு மணி நேர அவகாசத்தில் முஸ்லிம் மக்களை அவர்களின் வசிப்பிடங்களிலிருந்து வெளியேறுமாறு பிரபாகரன் உத்தரவிட்டார். ஏன் அவர் உத்தரவிட்டார் என்று எனக்குத் தெரியாது. நாம் அவருடன் அவரது போராட்டத்தில் இணைந்து கொள்ளாத காரணத்தினாலேயே சுமார் ஒரு இலட்சம் முஸ்லிம் மக்களை அவர் விரட்டினார். அதனால்தான் இந்த மக்கள் இவ்வாறான துயரத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள். இந்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை பிரபாகரன் விரட்டிய பின்னர் அவர்கள் அகதி முகாம்களில் வசித்துக் கொண்டிருந்த போது இந்த மக்களுக்குச் செய்த துரோகம், பெரும் சதிதான் இந்த மக்களின் காணிகளை.... மதிப்பிற்குரிய தேரர் இங்கு குறிப்பிட்டார்தானே வேப்பல் என்ற ஒன்றும், மாபிள் என்ற ஒன்றையும் காட்டினார்தானே. இது தேரர் அவர்கள் கையளித்த அறிக்கை. இது நான் கொண்டு வந்த ஒன்றல்ல. இது நான் கொடுத்த ஒன்றுமல்ல. இதனை அவர் பொறுப்புடன் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார். கரடிக்குளி, மரிச்சிக்கட்டி, பாலைக்குளி போன்ற கிராமங்கள் இதில் உள்ளன. அந்தக் காலத்தில் இவை வனப்பாதுகாப்புக்கு உரிய பகுதிகளல்ல. எப்போது இவை வனப்பாதுகாப்புக்கு உரித்துடையானது? இந்த மக்கள் அகதி முகாம்களில் உண்ண உணவின்றி சிரமப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் யுத்தம் நிறைவடைந்த நேரத்தில் இந்தப் பிரதேசங்கள், இந்த வேப்பம்வில்லு வனப்பாதுகாப்பு பிரதேசம் என்று வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்றது. அதேபோல மாவில்லு வனப்பாதுகாப்பு பிரதேசம் என்று வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்றது. எங்கிருந்து கொண்டு இவ்வாறு அறிவிக்கப்பட்டது? ஜீ. பி. எஸ் மூலம் இவை அறிவிக்கப்படுகின்றது. இவை ஒரு பக்கம்.

மதிப்புக்குரிய தேரர்கள் சுட்டிக்காட்டிய இன்னொரு இடம் ஒன்றுள்ளதுதானே எங்களது முஸ்லிம் சமூகம் குடியேறியிருப்பதாக. எல்லா ஊடகங்களிலும் வான் படங்களை எடுத்து இந்தப் பகுதியைத்தான் காட்டப்பட்டது. இதுதான் வில்பத்து என்றும், இங்குதான் முஸ்லிம் மக்கள் குடியேறுகின்றார்கள் என்றும் காட்டப்படுகின்றது. இதுதான் வில்பத்து என்று முழு இலங்கையிலும் இருக்கும் என மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்றுதான் இது பொய் என்று தெளிவாகியிருக்கின்றது. இது வில்பத்து வனாந்தரமல்ல என்று. இங்குதான் ஆயிரக்கணக்கான ஏக்கர் கணக்கிடப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. இது ஆயிரம் ஏக்கரல்ல. இவை அனைத்துப் பிரதேசங்களும் எமது முஸ்லிம் மக்களும் ஒரு கிராமத்தில் கத்தோலிக்க மக்களும் இணைந்து ஒன்றாக வாழ்ந்த இடங்கள். இவை அனைத்தும் எங்கள் ஊர். இந்த மக்களை விடுதலைப் புலிகள் விரட்டி அவர்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருந்த போது 2009ஆம் ஆண்டில்தான் இந்தப் பிரதேசங்கள் வனப் பாதுகாப்புக்கு உரிமையானது.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – 2012ஆம் ஆண்டில்தான் இந்தப் பிரதேசம் நாம் தற்போது குடியேறியிருக்கும் பிரதேசம். எமது கிராமத்துடன், எமது பள்ளி வாசலுடன், எமது பாடசாலையுடன், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கட்டிடங்களுடன் வசிக்கின்ற பிரதேசம். இவைகளுக்குரிய காணி உறுதிகளையும் நான் இங்கு கொண்டு வந்திருக்கின்றேன். ஏராளமான காணி உறுதிகள் என்னிடமிருக்கின்றன. 1906ஆம் ஆண்டிலிருந்து 1980, 1990, 1970ஆம் ஆண்டுகளில் வெள்ளையர்கள் காலத்திலிருந்த காணி உறுதிகளையும் நான் கொண்டு வந்திருக்கின்றேன். இவை முஸ்லிம் சமூகம் வாழ்ந்த பிரதேசம். அம்மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அகதி முகாம்களில் இருந்த காலப் பகுதியில் இந்நாட்டில் அமைதி ஏற்பட்டதுடன் இதன் ஒரு பகுதி வனப் பாதுகாப்புக்கு உரியது என வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்றது. வேப்பம் வனம், மாவில்லு வனம், மக்கள் வாழ்ந்த சில கிராமங்களைக் கொண்ட பிரதேசங்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வனப்பாதுகாப்புக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. இப்போது நான் காட்டுகின்றேன். இதுதான் அந்த வர்த்தமானி அறிவித்தல். இது கல்லாறு. இதில் 12 ஆயிரத்து 165 ஏக்கர். இப்போது பாருங்கள் இதிலேயே இது பொய் என்று புரிகிறது. இந்த மக்கள் அகதி முகாம்களில் இருந்த போது சாதாரணமாக வனப்பாதுகாப்புக்கு அரச காணி ஒன்றை எடுப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றது. அந்த அமைச்சர் அவ்வாறு செய்கின்ற போது அது பற்றி அந்த மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். நாம் இந்தப் பகுதிகளை வனப்பாதுகாப் புக்கு எடுக்கின்றோம். வனப்பாதுகாப்புக்கு எடுக்க முன்னர், வர்த்தமானியில் அறிவிக்க முன்னர் மக்களுக்கு உரிமையுள்ளது இது எங்களது காணி, எங்களுக்கு அனுமதிப்பத்திரம் உள்ள காணி, உறுதிப்பத்திரம் உள்ள காணி, நாங்கள் விவசாயம் செய்த காணி என்று அச்செயலை நிறுத்துவதற்கு



அல்லது தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு காலம் வழங்கப்பட வேண்டும். இந்த மக்கள் முகாம்களில் இருக்கும் போது 2009ஆம் ஆண்டில் முப்பதாயிரம் ஏக்கர்களை வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்றது. 2012ஆம் ஆண்டில் பன்னிரெண்டாயிரத்து நூற்றிசொச்சம் ஏக்கர் வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்றது. தற்போது அவை அனைத்தும் வனப்பாதுகாப்புக்குரியவை என்று கூறுகின்றார்கள். அவ்வாறான பின்னர் இந்த மக்கள் குடியேறச்சென்றார்கள். எனவே இந்தக் காணிகள் கொழும்பிலிருந்து கொண்டு வனப்பாதுகாப்புக்குரியவை என வர்த்தமானியில் அறிவித்தமை பொய்யென்றே நான் இவ்விடத்தில் கூறுகின்றேன். எமது மக்களின் மீள்குடியேற்றத்தை தடுப்பதற்காக தவறான முறையில் இந்த வர்த்தமானி அறிவித்தலைச் செய்திருக்கின்றார்கள். ஒரு சதி வேலையே இங்கு செய்யப்பட்டிருக்கின்றது. பிரபாகரன் விரட்டினார். யார் இந்த வர்த்தமானி அறிவித்தலைச் செய்வதற்கு பின்னாலிருந்து செயற்பட்டார்கள் என எனக்குத் தெரியாது. 2009ஆம் ஆண்டில் மக்களின் பூர்வீகக் காணிகளையே வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. முஸ்லிம் சமூகம் என்பது வேறு நாட்டினைச் சேர்ந்தவர்கள் அல்ல. இந்நாட்டில் பிறந்து வாழ்பவர்கள். புலிகள் அவர்களது போராட்டத்திற்கு உதவி செய்யவில்லை என்பதற்காக எம்மை இரண்டு மணி நேரத்தினுள் விரட்டினார்கள். அவ்வாறு வந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் போது அவர்களது காணிகளை வனப்பாதுகாப்புக்குரியது என வர்த்தமானியில் அறிவித்து அம்மக்களுக்கு இருப்பதற்கு ஒரு இடமில்லாவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் பிரதேச செயலாளரிடம் சென்று கூறினார்கள். அரச அதிபரிடம் சென்று முறையிட்டார்கள். பின்னர் எல்.எல்.ஆர்.சி என்ற குழு ஒன்று நியமிக்கப்பட்டதுதானே. அந்தக் குழுவிடம் சென்று தமது காணிகள் இவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றது எனக் கூறினார்கள். அதே போலதான் முல்லைத்தீவிலும். முல்லைத்தீவு பற்றி நான் பேச வரவில்லை. இந்த எல்.எல்.ஆர்.சியின் அறிக்கையில் இந்த மக்களின் காணிகளை உடனடியாக வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மக்களை குடியேற்ற வேண்டும். இதற்காக குழு ஒன்று நியமிக்க வேண்டும். இது ஒரு விஷேட வேலைத்திட்டம். இது செய்யப்படவே வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதனடிப்படையில்தான் ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த எல்.எல்.ஆர்.சி அறிக்கை நான் தயாரித்தது அல்ல. அது அந்தக் குழுவால் தயாரிக்கப்பட்டு அது ஜெனீவாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது ஆறு மாதங்களினுள் சகல முஸ்லிம்களும் குடியேற்றப்படுவார்கள், அவர்களின் காணிப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று. இவ்வாறு நாங்கள் வருடக்கணக்கில் வாழ்ந்து வந்த எங்களது காணிகளை கள்ளத்தனமாக கொழும்பிலிருந்து கொண்டு வனப்பாதுகாப்புக்குரியது என்று கூறிய பின்னர் எமது மக்களால் பலவந்தமாகச் சென்று குடியேற முடியாதே. அதனால்தான் மாவட்ட அரசாங்க அதிபர் வனப்பாதுகாப்பு காணியை இந்த மக்களுக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். எமது மக்களின் பூர்வீக காணிகளையே மீண்டும் கேட்டு அது விடுவிக்கப்பட்டு ஆயிரம் அல்லது ஆயிரத்து ஐநூறு ஏக்கர் காணி இவ்விடத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது. சுமார் ஒரு இலட்சம் ஏக்கருக்கான சொந்த உரிமையுள்ள காணிகளுக்காக ஆயிரத்து ஐநூறு ஏக்கர் காணிகளே தற்போது வழங்கப்பட்டிருக்கின்றது. எனது கோரிக்கை என்னவெனில் அந்த மக்களுக்கு விவசாயம் செய்வதற்கும் வாழ்க்கை நடாத்துவதற்கும் அந்த மக்களின் சகல காணிகளும் அந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்களது வாழ்வாதாரத்திற்கு வேறு வழிகள் இல்லை.

சில சதிகாரக் குழுக்கள் சுற்றாடலியலாளர்கள் எனப் பெயரைப் போட்டுக் கொண்டு தீவிரவாதிகளைப் போன்ற வேலைகளையே இங்கு செய்கிறார்கள். இது பெரியதொரு பிரச்சினை. இதனை எமது நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**ஹிரு தொலைக்காட்சி** – நல்லது. மதிப்புக்குரிய தேரர் அவர்களே அமைச்சர் கூறுவதைப் போல இந்த மக்களின் மீள்குடியேற்றத்தை நீங்கள் கண்டிக்கின்றீர்களே?

**பகியங்களை ஆனந்த சாகர தேரர்**–சுதேவ, அமைச்சர் அவர்கள் எப்போதும் செய்து கொண்டது இந்த வரைபடங்களுக்கு அப்பால் சென்று குழப்பிக் கொண்டதையே. தெளிவாகச் சொல்ல வேண்டும். இவர் பேசுவது பிரதான வனப்பாதுகாப்புக்குரிய காணிகளைப் பற்றியல்ல. கருவாங்காளி என்று சிங்கள மக்கள் வசித்த பிரதேசம் ஒன்றிருந்தது. அதில் ஐயாயிரம் பேர் குடியேற்றப்பட்டிருந்தார்கள். இதில் இன்னும் ஐயாயிரம் பேர் குடியேற்றப்படும் போது பிரச்சினை ஒன்று ஏற்பட்டது. புருசாலிக்குளம் என்று ஒன்று இருந்தது. மராமலிக்குளம் என்று ஒன்றிருந்தது. நாகச் சோலி என்றும் ஒன்றிருந்தது. இவை வனப்பாதுகாப்பு பகுதிகள். விஷேடமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த அமைச்சர் அவ்ரகள் இன்று மிகவும் சிரமத்தோடு, பாரிய அனுதாபத்தோடு கூறுவது என்னவெனில் அவருக்குத் தெரியும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 17838 முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள். அதேபோலத்தான் வட்டுக்காடு வனாந்தரம், பெரியமடு வனாந்தரம், கல்லாறு வனாந்தரம், ஒட்டிசுட்டான் வனாந்தரம், கரைதுரைப்பற்று வனாந்தரம், மடியோஜித வனாந்தரம், கடையக்குள பாதுகாப்பு வனாந்தரம் போன்றவற்றை இவர்கள் ஒன்று சேர்ந்து வெட்டினார்கள். இவ்வாறு குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது.

**ஹிரு தொலைக்காட்சி**–மதிப்புக்குரிய தேரர் அவர்களே இங்கு அமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்பினார் எப்போது இவை வனப்பாதுகாப்புக்கு உரித்தானது என்ற விடயம்.

**பகியங்கள ஆனந்த சாகர தேர்ர** – ஆம். அதைத்தான் நான் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய

(தொடரும்)

# கவிமேகம் காளமேகப் புலவர்

**வை**ணவ குலத்தில் பிறந்து சைவ பரத குலப் பெண்ணான மோகனாங்கினியின் காதலில் விழுந்து அவரது வேண்டுதலுக்காய் சுயம்புகேஸ்வரர் ஆலயத்தில் பரிசாரகராகச் சேர்ந்து ஆலய மண்டபத்தில் காளிதேவியின் அருள் வேண்டி வரகவியாய், காளமேக கவியாய் மிளிர அருள் வேண்டி காளிதாசர் ஜெபித்த தேவிநாமத்தை தானும் ஜெபித்து பணிச் சோர்வில் கோயில் மண்டபத்திலே உறங்கிய வேளையிலே அன்றைய தினம் காளிதாசருக்கு அருள்புரிய நினைத்த காளிதேவி மோகனாங்கினி உருவத்திலே வாயில் தாம்பூலத்தோடு வந்து அதனை காளிதாசர் வாயிலில் பதிக்கச் சென்றவேளை தாசியர் குலத்தின் மோகனாங்கினியோ என ஐயுற்று உண்மையான காளிதேவியே ஆனாலும் எனக்கு இவ்வடிவத்தில் வந்து தருகின்ற எந்த வரமாய் இருந்தாலும் அது எனக்கு வேண்டாம் என காளிதாசர் மறுத்து நின்றபோது காளிதேவி அதே மோகனாங்கினி வடிவத்திலே சென்று மோகனாங்கினி மீது காதல் மயக்கத்தில் இருந்த வரதனின் வாயில் பதிந்துவிட காதல் மயக்கத்திலும் நித்திரை மயக்கத்திலும் இருந்த வரதர் அதனை அப்படியே மென்று விழுங்க காளிதேவியான அகிலாண்டேஸ்வரி இன்று முதல் காளமேகம் என்ற பெயரோடு கவிமழையில் பொழிந்து புகழ் பெறுவாயாக என்று அருள் வழங்கினார்.

கவிக்கான மேகம் காளமேகம் சிலேடைப் பாடல் பாடுவதிலும், வசைப் பாடல் பாடுவதிலும் நிந்தாதுதிப் பாடல்கள் பாடுவதிலும் சிறந்த புலவர். அவருடைய பெருமையைச் சோதிக்க விரும்பிய திருவாரூர் இறைவனின் பக்தர்கள் திருவாரூர் பெருமானின் வைரமாலை அறுந்து விழவும் பின் பொருந்தவும் பாடுமாறு கூறினார்கள். காளமேக புலவரும் உடன்பட்டு

**"அன்னவயல் சூழும்**
**ஆரூரான்நெஞ்சத்தில்**
**இன்னம் வயிரம் இருக்குமோ–**
**முன்னம் ஒரு தொண்டன்**
**மகனைக்கொன்றும் சோழ**
**மகனைக் கொன்றும்**
**சண்டன் மகனைக் கொன்றும் தான்"**

என்ற பாடலைப் பாடி சிவன் நெஞ்சில் இருந்த வைரம் அறுந்துபோக பாடல் பாடினார். சிவனைத் தரிசித்து பாடல் பாடலாம் என்று சென்ற வேளை வைரத்தை அணிவித்து சிவனை குருக்கள் மறைத்துக் கொண்டிருந்தார். கோபம் கொண்ட காளமேகப் புலவர் சிவனை நிந்தித்து முன்னம் ஒருநாள் சிறுதொண்டன் மகனான சீராளனைக் கொன்றும் மனுநீதிகொண்ட சோழனின் மகனாகிய வீதி விடங்கனைக் கொன்றும் சூரியன் மகனாகிய சண்டனை (யமனை) கொன்றும் அவன் வைரமனம் நீங்கவில்லையா? இன்னுமா அவன் நெஞ்சில் வைரம் இருக்கிறது என நிந்தித்து பாட வைரமாலை அறுந்தது.

இதைக்கண்ட பூசகர் வேண்டிக்கொள்ள சிவனை மனமுருகி அவரே தன் இறைவன் எனக்கூறி பின்வரும் பாடலைப் பாடினார்.

**கூற்றுவனை வில்மதனை**
**அரக்கர் கோவை**
**கூனிலவைக் குஞ்சரத்தை**
**இஞ்சி மூன்றை**
**ஏற்றுலகின் புற உருவம்**
**ஆளத் தோள்கள்**
**இறவெறிப்ப இமையப்பெண்**
**விருவ வேவக்**
**காற்றொழிலால் நயத்தால்**
**விரலால் கற்றைக்**
**கதிர்முடியால் கரதலத்தால்**
**கணையால் பின்னும்**
**ஊற்றழிய உதைத்தெரித்து**
**நெரித்துச்சூடி**
**உரித்தெரித்தான் அவனென்னை**
**உடையகோவே**
**என்னை அடிமை கொண்ட**
**இறைவனே**

மார்க்கண்டேயனுக்காக இயமனை உதைத்து மன்மதனை நெற்றிக்கண் திறந்து எரித்து அழித்து இராவணன் கர்வத்தோடு இமயமலையைப் பெயர்க்க முனைந்தபோது அவனை விரலால் நசுக்கி பல அற்புதங்களைச் செய்தவரே. சடா மகுடத்தில் சந்திரனைப் பிறையாகச்சூடி கயவாசூரனை கைத்தலத்தால் உரித்து திரிபுரத்தைக் கணையால் எரித்த சிறப்புக்குரியவனே அருள் புரிவாய் என வேண்ட அறுந்த வைரமாலை மீளவும் ஒன்று சேர்ந்து சிவனின் கழுத்தில் சேர்ந்தது.

இப்படியே காளமேகப்புலவர் ஊர் ஊராய் சென்று பாடி வரும்போது தமக்கு ஆதரவு காட்டியவர்களை இசை பாடிப் புகழ்ந்தும் அவமதித்தவர்களை வசைபாடி இகழ்ந்தும் அவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். இவ்வாறு ஊர் ஊராய் பாடிக் கொண்டு தனக்கு திருமலைராயன் பட்டினத்தில் முத்து ஆபரணம் வேண்டித் தருமாறு கேட்ட கோரிக்கை ஞாபகத்திற்கு வர அவரும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருமலைராயன் பட்டினத்திற்குச் சென்றார். அங்கே திருமலைராயன் சபையில் தண்டிகைப் புலவர்கள் எனப்படும் உயர்ரகப் புலவர்கள் இருந்தார்கள். இந்தச் சபையை அலங்கரிக்க அறுபத்துநான்கு புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் பயணம் செய்ய ஒவ்வொருவருக்கும் தண்டிகை எனப்படும் பல்லக்கினை வழங்கி கௌரவித்ததால் அவர்கள் ஊரில் உள்ளவர்கள் தண்டிகைப் புலவர்கள் என்று அழைத்தார்கள்.

இந்த தண்டிகைப் புலவர்களுக்குத் தலைவராக அதிமதுரகவிராயர் என்பவர் இருந்தார்.



அவர் அரசனிடம் செல்வாக்குப் பெற்றவராகவும் அகந்தை நிறைந்தவராகவும் காணப்பட்டார். அரச சபையில் ஏனைய புலவர்களின் மதிப்பு உயரா வண்ணமும் வேறு புலவர்கள் அங்கு வராமல் தடுக்கும் செயல்களிலும் ஈடுபட்டு வந்தார். தண்டிகைப் புலவர்கள் தமக்குரிய பண்டிகைகளில் ஏறி அமர்ந்து இராஜவீதியில் அரண்மனையை நோக்கிவந்து கொண்டிருக்கும் போது அதிமதுர கவிராயர் வாழ்க என புலவர்களும் மக்களும் கோசமிட்டு வாழ்த்தியவண்ணம் அரசசபைக்குச் செல்வார்கள்.

அப்படிச் செல்லும்போது இராஜவீதியின் இருமருங்கிலும் நின்று வணக்கம் சொல்லி துதிக்கும் மக்களை பெருமிதத்தோடு பார்த்தபடி செல்வது கவிராயரின் வழக்கமாகும். அன்றும் கவிராயர் தெருவீதி வழியே செல்லும்போது காளமேகப்புலவர் கடை அருகில் இருந்த திண்ணையில் அமர்ந்திருந்தார். அவர் கவிராயர் செல்லும்போது எழுந்து நில்லாமல் அலட்சியமாக அமர்ந்திருந்தார். இதனைக் கண்ணுற்ற கவிராயருக்கு முன்சென்ற கட்டியக்காரன் காளமேகப்புலவரைப் பார்த்து கவிராயரைப் புகழ்ந்து பாடு என அதட்டியவேளை காளமேகப் புலவர் நகைத்து விட்டு இருப்பதையும் கவிராயர் கவனிக்கத் தவறவில்லை. வாழ்த்துவதற்குப் பதிலாக காளமேகப்புலவர்

**அதிமதுரம் என்றே அகிலம்**
**அறியத்துதிமதுரமாய் எடுத்துச்**
**சொல்லும் புதுமையென்ன**
**காட்டுச் சரக்கு உலகில் காரமில்லாச்**
**சரக்கு கூட்டுச் சரக்கதனைக்கூறு.**

என்று தன்னை இகழ்ந்து பாடுவதனை அதிமதுரகவிராயர் கூர்ந்து கவனித்தார்.

அதாவது அதிமதுரம் என்ற கவியை உயர்வாக புகழச் சொல்கிறாயே என்ன காரணம்? அதிமதுரம் என்ற சரக்கின் புதுமைதான் என்ன? காரமில்லாத சரக்கு அது. தனியே பயன்படுத்தாமல் பிறபொருளோடு பயன்படுத்தினால்தான் பயன்தரும். மலைக்குன்றி மணிவேரை அதிமதுரம் என்று உலகத்தார் ஆதி நாளில் இருந்தே வழங்குகிறார்கள். அதைப்பற்றி நீ உனக்குத் தெரிந்தால் சொல் என்று காளமேகப்புலவர் இகழ்ந்து கூறியதைக் கேட்டுக்கொண்ட கவிராயர் கடும் கோபத்துடன் பல்லக்கை நிறுத்தச் சொல்லி அந்தக் கடை முன்னே அவரை அவமானப்படுத்த விரும்பி சேவகன் ஒருவனிடம் நீர் யார் எங்கிருந்து வந்தீர் எனக் கேட்டுவா என அனுப்பினார்.

பாரதி மோகன்

அதற்கு காளமேகப்புலவர்

**கழியும்பிழை பொருட்டு அள்ளி**
**நன்நூலாம் கடல் உண்டு**
**வழியும் பொதிகை வரையினில்**
**கால்கொண்டு –வண்கவிதை**
**பொழியும் புலவர் மனத்தே யிடித்து**
**முழங்கி மின்னிப் பொழியும்**
**படிக்குக் கவிக்காளமேகம்**
**புறப்பட்டதே.**

எனும் பாடலைப் பாடினார்.

உடனே கவிராயரின் கோபம் அதிகரிக்கவே காளமேகப்புலவர் தங்கியிருந்த திண்ணைக்கு சொந்தக்காரனான கடைக்காரனிடம் 'கால்வராகனுக்கு மேகமும் பசுவும் இரத்தினமும் வாங்கிவா' என்று அரண்மனை சேவகன் ஒருவனை அனுப்பினார்.

அவனும் பயபக்தியோடு கவிராயரின் கருத்தை ஏற்றுச் சென்று கால்வராகனுக்கு மேகமும் பசுவும் இரத்தினமும் கொடு என்று அதிகாரத்தோடு கடைக்காரனைக் கேட்க கடைக்காரனும் ஒன்றும் புரியாமல் திருதிருவென விழித்தான். அதைக்கண்ட காளமேகப் புலவர் சிரித்தார். வெறுப்பும் எரிச்சலும் கடைக்காரன் முகத்தில் வெளிப்படஎன்ன கேட்கிறார் இவர், நீர் ஏன் சிரிக்கிறீர் என்று காளமேகத்தைப் பார்த்து கடைக்காரன் கேட்டான். உடனே காளமேகப்புலவர் 'ஐயா சேவகன் கேட்பது காராமணி' அதாவது மேகத்திற்கு வேறொரு பெயர் கார். அதுபோல் பசுவுக்கு ஆ என்ற அர்த்தமும் உண்டு. இரத்தினம் என்ற சொல் மணியைக் குறிப்பதால் நீர் கால் அணாவுக்கு காசு மணியைக் கொடுத்துவிடும் என்றார். உடனே சேவகனும் பெற்றுச் சென்று கொடுத்ததும் கவிராயர் அரண்மனைக்கு கோபத்தோடு பல்லக்கில் புறப்பட்டார்.

வந்திருந்தது அரண்மனை சேவகன் கவிராயர் விட்டனுப்பிய தூதன் அவர் கேட்ட பொருளை கொடுத்து அனுப்பாது போனால் அவரது கடும் கோபத்திற்கு ஆளாகி பொருள் பண்டங்களை இழக்க நேரிடும். நல்லவேளை என்னை நீர் காப்பாற்றினீர் என்று கடைக்காரன் காளமேகப் புலவருக்கு நன்றி கூறினான். மலைராஜனுடைய நாட்டில் நகைக்கடையில் தன் ஆசை நாயகியான மோகனாங்கிக்கு முத்துமணி மாலை வாங்க வந்தவருக்கு கவிராயரின் கொடுமை பற்றி மக்கள் கூறும் செய்தி கேட்டதும் இவருடைய கொட்டத்தை அடக்கிவிட்டு முத்துமணிமாலையை வாங்கிக்கொண்டு போவோம் என அரண்மனைக்கு விரைகிறார் காளமேகப் புலவர்.

(தொடரும்...)

## குட்டீஸ் பக்கம்



## முயன்றுடையோர்

எந்த ஒரு காரியத்திற்கும் ஏதோ ஒரு வகையிலான முயற்சி முக்கியம். அந்த முயற்சி எமக்கு சிறக்க மனப்பக்குவம் முக்கியம். ஒரு முயற்சி என்று இறங்கும் போது காரியம் நடைபெறுகிறது என்பது ஒரு விடயம். அதனூடே மற்றும் சிலவும் நிகழ்கின்றன. முயற்சி எம்மை சோதிக்கும். எமது திறனை நாம் பரீட்சித்துப் பார்க்க உதவும். எமக்கு பாடம் கற்பிக்கும். எனவே ஒரு முயற்சியில் இறங்கும்போது அதை அனுபவிக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் ஒரு முயற்சியில் இறங்கினால் அதில் மகிழ்விருக்காது தவிர அந்த முயற்சி ஏதேனும் காரணத்தால் கைகூடவில்லை. மனம் சேர்ந்து போய்விடும். ஒரு விற்பனையாளன் தனது தொழில் நிமித்தமாய் பலதரப்பட்டவற்றைச் சந்திக்க முடிகிறது. பேச முடிகிறது. பழக முடிகிறது. மக்களைச் சந்தித்து பழகுவதால் ஏற்படும் அனுபவத்தை உணர்ந்து அவன் மகிழ்வுடன் தனது பணியைப் புரியும்போது அவனது மனம் உற்சாகமடைகிறது. அதனால் ஒருநாள் குறிப்பிட்ட அளவிலான விற்பனை இல்லாது போனாலும் அவனது மனம் அதீதச் சோர்வடையாது, ஏமாற்றம் அடையாது ஈடுபடுவது எந்தக் காரியமாக இருந்தாலும் அதை அனுபவித்து உணர்ந்து மகிழ்வுடன் செய்யும்போது அந்த வேலையின் முடிவு இரண்டாம் பட்சமாகி, ஏற்படும் திருப்தியும் மகிழ்வும் இருக்கிறதே அது முக்கியமாகி விடுகிறது. மனத்திருப்தியுற்று ஒரு வேலையில் ஈடுபட்டால் அதில் லட்சம் லட்சமாய்ச் சம்பாதித்தாலும் சுறுசுறுப்புக்கு எப்பொழுதுமே எறும்பை உதாரணமாகச் சொல்வோம். எறும்பு படு சுறுசுறுப்புத்தான் எதில் சுறுசுறுப்பு? தனக்கெனச் செய்துகொள்ள வேண்டிய வேலைகளில். அதேபோல் புழு, பூச்சி, மிருகங்கள் என்று உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்துமே ஏதோ ஒரு வேலையில் சுறுசுறுப்போடு ஈடுபட்டவாறுதான் உள்ளன. சுறுசுறுப்போ மெத்தனமோ ஏதோ ஒரு வேலை அல்லது காரியம் அதாவது கூடு கட்டுதல், பசிக்கு இரை தேடுதல், தனது ஜோடியிடம் காதல் தேவைப்பட்டால் நீரில் சளக்கென்று ஒரு குளியல் போன்றவற்றை எவரும் சொல்லாமல், கட்டளையிடாமல், வற்புறுத்தாமல், தங்கள் வேலையைத் தாமே செய்து கொண்டே இருக்கின்றன. பிறகு நிம்மதியான உறக்கம் இதிலுள்ள அடிப்படைத் தத்துவம் எமக்கு முக்கியமானது.

அது மகிழ்வாய் இருக்க வேண்டுமெனில் முயற்சி எடுத்து காரியமாற்றும் மனப்பக்குவம் தேவை ஒரு காரியம் செய்ய வேண்டி இருக்கிறது. அதனைச் சிரமப்பட்டு செய்ய வேண்டுமே என்று தள்ளிப் போட்டால் செய்யத் தவறினால் என்னவாகும்? காரியம் ஆகாது தவிர அது நம்மைப் பாதிக்கும்.

ந.சுகிந்தன்
தரம் - 07
யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை

## வாரமொரு குறள்



விண்இன்று பொய்ப்பின் விரிநீர்
வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

பொருள் : கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும், மழைநீர் பொய்த்து விட்டால் பசியின் கொடுமை வாட்டி வதைக்கும்.



## தொகைப்பெயர்

01. இருதிணை : உயர்திணை, அஃறிணை
02. முத்தமிழ் : இயல், இசை, நாடகம்
03. முக்கனி : மா, பலா, வாழை
04. நாற்படை : யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாற்படை
05. நாற்றிசை : வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு
06. மூவிடங்கள் : தன்மை, முன்னிலை படர்க்கை
07. ஐங்குரவர் : அரசன், ஆசிரியை, தந்தை, தாய், தமையன்
08. இருபாலர் : ஆண், பெண்
09. இருவினை : நன்வினை, தீவினை
10. முக்குணம் : சத்துவம், இராசதம், தாமதம்
11. முச்சுடர் : சூரியன், சந்திரன், அக்கினி
12. முப்பகை : காமம், வெகுளி, மயக்கம்
13. மூவாசை : மண், பெண், பொன்
14. முச்சங்கம் : முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்
15. மும்மலம் : ஆணவம், கன்மம், மாயை

யோ.சதுர்ஷனா
தரம் - 07
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

## பொது அறிவு

01. மருத்துவத்தின் தந்தை - ஹிப்போகிரட்டீஸ்
02. உலகில் முதல் பிறந்த பரிசோதனைக் குழாய் குழந்தை - லூயிபிறவுன் - இங்கிலாந்து
03. விற்றமின் எனும் பெயரை அறிமுகம் செய்தவர் - பங்விற்றமின
04. ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை சாமுவேல் ஹனிமன்
05. நோபல் பரிசு முதலில் பெற்றவர் யார் - வில்கெம் ரொண்ட்ரஜன்
06. முப்பது செக்கன்களுக்குள் முடிவடையும் விளையாட்டு - சுமோ
07. பணக்கார விளையாட்டு எனச் சிறப்பிக்கப்படுவது - கோல்ஃப்
08. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - புருபேல்
09. செம்மதி தகவல் தொடர்பு நிலையம் எங்கே அமைந்துள்ளது - பாதுக்கை
10. அண்மையில் ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து கோள்களின் அந்தஸ்து அற்றதென நீக்கப்பட்ட கோள் - புளுட்டோ

க.கவி
தரம் -07
யா/உடுவில் மகளிர் கல்லூரி

## அம்மா

கல்யாணப் பந்தலிலே
கன்னியவள் கால் பதித்து
யாரென்று தெரியாத மண
வாளனை
கைகோர்த்து
தனக்கென
ஒரு
முத்து
பிள்ளைச்
செல்வத்தை
பெற்றெடுக்க
பத்து
மாதம் சுமந்து
தன் குழந்தையை
பெற்றெடுத்து
முத்தே கண்ணே என பெயர்
சொல்லி வளர்க்கிறாளே
அவளே தெய்வம்
தன்னுயிர் போனாலும்
பிள்ளைகளை
காப்பாளே அன்னை,
அவளை பார்போற்றும்
தெய்வமாய் வாழ வைப்போமே.



சி.லாதுசா
தரம் - 06




## மலர்

மலரே உன்றன் வாழ்க்கையினை
மறையா தெனக்கும்
உரைப்பாயே!
அலரே உன்னைச் செய்ததார்?

அரிய மணமும் அளித்தவரார்?
பற்பல வர்ணம் தீட்டியவரார்
பார்க்கப் பகட்டாய்ப் படைத்தவரார்?
கலகல வென்று சிரித்திடவே
கற்று நிதமும் கொடுத்தவரார்?

அரித்த நல்ல பூம்பொடியை
அழகாய் உடலில் பூசியதார்?
சிரிக்கும் உந்தன் செவ்வாய்க்கே
சீத அமுதம் வார்ப்பவரார்?



## பழமொழிகள்

01. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
02. அரசன் அவ்வழி குடிகள் எவ்வழி
03. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
04. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
05. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
06. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்
07. அரசனும் ஒருநாள் ஆண்டியாவான்
08. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
09. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
10. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

அலதாங்கினி
தரம் - 06
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# தமிழ் சினிமா பாடல்களில் கவிஞர் வாலி முதல் சிம்பு வரை

தமிழ் சினிமா பாடல்களில் பெண்களைப் போற்றி எழுதப்பட்ட பாடல்களாக இருந்தாலும், அவளை சிலாகித்து எழுதப்பட்ட பாடல்களாக இருந்தாலும் பெண் என்பவள் ஒரு பொருள் என்கிற கருத்தை அப்பாடல்கள் அழுத்தமாக பதிவு செய்திருக்கின்றன. பெண் அங்கங்களை வேறு சில உவமானங்களுடன் ஒப்பிட்டு ஆபாசமாக சித்தரித்த பாடல்கள் அனைத்தும் பெண்ணை பூமாதேவியாகவும், பூவாகவும், தெய்வமாகவும், சித்தரித்த ஆண் உளவியலின் தொடர்ச்சி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எப்போதும் பெண்ணை தன்னைப் போன்ற ஆசாபாசங்கள் நிறைந்த சராசரி உயிர் என்பதை ஏற்கமறுக்கும் ஆண் வக்கிரத்தையே நம் தமிழ் சினிமா பாடல்கள் உணர்த்துகின்றன.

### எம்.ஜி.ஆர் காலத்து பாடல்களில் பெண்கள்

பெண்களின் நன்மதிப்பைப் பெற்ற கதாநாயகர்களில் முதன்மையானவர் எம்.ஜி.ஆர். 70களுக்குப் பிறகு, எம்.ஜி.ஆர் நடித்த படங்களில் வரும் பாடல் காட்சிகளும் சரி, பாடல் வரிகளும் சரி, இன்றைய சிம்புவின் பாத்ரூம் கற்பனையை மிஞ்சும் அளவிற்கு இருக்கும். உரிமைக்குரல் படத்தில் வரும் "மாங்கா திருடி திங்கிற பெண்ணே மாசம் எத்தனையோ" என்கிற பாடலை குடும்பத்துடன் யாரும் பார்க்க முடியாது. அந்தப் பாடலில் எம் .ஜி.ஆர், "லதாவைப்பார்த்து, மாங்கா" என்று விழிப்பது எந்த அர்த்தத்தில் என்று அனைவருக்கும் தெரியும். இதயக்கனி படத்தில் வரும் "இதழே இதழே தேன் வேண்டும்" உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் வரும் "அவள் ஒரு நவரச நாடகம்" போன்ற பல சினிமாப் பாடல்களை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம்.

"சக்கரவல்லி கிழங்கு மாமா சமைஞ்சது எப்படி?" என்று கவிஞர் வாலி வெளிப்படையாக கேட்க ஆரம்பித்த பிறகுதான், பெண்ணிய அமைப்புகள் வெகுண்டெழுந்தன. 90களின் மத்தியில் வெளிவந்த இந்தப் பாடலுக்காக வாலிக்கு கடுமையான கண்டனங்கள் குவிந்தன. ஆனால், வாலி 70களின் தொடக்கத்திலேயே எம். ஜி. ஆர் பாடல்களில் தனது வக்கிரத்தை அழகியல் தன்மையுடன் வெளிப்படுத்தி இருப்பார்.

எம். ஜி. ஆர் பாடல்கள் மட்டுமல்ல, சிவாஜி, ரஜினி கமல் என அனைவரின் பாடல்களிலும் பெண்களை அநாகரிகமாக சித்தரித்து பல பாடல்கள் வெளிவந்துள்ளன. இதில் வாலி போன்ற கவிஞர்கள் முன்னோடி என்றாலும் மற்ற கவிஞர்களும் சளைத்தவர்கள் அல்ல. நாயகன் படத்தில் ஜனகராஜ் ஆடும் ஒரு பாடலில், "காட்டுல மேட்டுல உழைப்பவன் நான், ஆடிட பாடிட வேண்டாமா?" என்கிற வரிவரும். அதாவது பாட்டாளி வர்க்கம் தன் களைப்பைப் போக்கிக் கொள்ள பெண் இன்பம் தேவை என்கிற



ஜீவசகாப்தன்

அர்த்தத்தில் அந்தப் பாடல் வரும். இது போன்ற பாடல்களை அபிட்டம் டான்ஸ் என்கிற பதத்தில் கூறுவார்கள்.

ஆனால், குறைந்த பட்சம் அந்தக் கால பாடல்களில் ஏதோ ஒரு அழகியல்தன்மை ஒளிந்திருந்தது. அழகியல் என்கிற பெயரில்தான் உடைமை சமுகத்தின் அனைத்து கூறுகளையும் பல படைப்பாளிகள் நியாயப்படுத்தினர். இலை மறைகாயாக பெண் அந்தரங்கங்களைப் பற்றிப் பேசினர். ஆனால், சிம்பு போன்ற நடிகர்களுக்கோ அழகியல் தன்மையும் இல்லை. நாகரிகமும் தெரியவில்லை. அதனால்தான் பச்சையாக வார்த்தைகளை இடுகின்றார்கள். அதைத்தான் சிம்பு "வாலி போல பாட்டு எழுத எனக்குத் தெரியலையே" என்று வெளிப்படையாக ஒத்துக் கொள்கிறார்.

பெண் உடல் குறித்த ஆண் மொழி வாலியிலிருந்து சிம்பு வரை பொதுவாகவே இருந்திருக்கிறது. வெளிப்படுத்தும் விதத்தில் சிம்பு நான்காம் தரத்திலும் கேவலமாக அம்பலப்பட்டு நிற்கிறார்.

### சிம்பு – தனுஸ் – கார்ப்பரேட் ஆணாதிக்க கலாசாரம்

உடைமைச் சமூக மனநிலையிலிருந்து கார்ப்பரேட் கலாசாரத்திற்கு இன்றைய தலைமுறை வந்துவிட்டது. உடைமைச் சமூகத்தின் பல்வேறு ஆதிக்க கருத்தியல்கள் காலத்தின்போக்கில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால், பெண் தன்னுடைய உடைமை என்கிற ஆணாதிக்க உளவியல், இன்றைய கார்ப்பரேட் உலகத்திலும் தொடர்கிறது. இன்னும் சொல்லப்போனால், இன்றைய கார்ப்பரேட் நுகர்வு கலாசாரத்திற்கு பெண்ணுடல் மிகப்பெரிய சந்தை. ஏற்கனவே திணிக்கப்பட்டிருக்கிற உடைமைச் சமூக பழமைவாத சிந்தனையும், தற்போது இருக்கிற கார்ப்பரேட் ஆணாதிக்க வணிகமும் ஒன்றிணைந்த வடிவம்தான் தனுஸ், சிம்பு போன்ற நடிகர்கள். "ஒய் திஸ் கொலைவெறி" "அடிடா அவளை, கொல்றா அவளை," போன்ற பாடல்களின் தொடர்ச்சிதான் சிம்புவின் பீப் சாங். இந்த வக்கிரம் பிடித்த பாடல்களெல்லாம் அதிக லைக்ஸ் பெற்றதே! இந்த நாகரிக தமிழ்ச் சமூகம் கொண்டாடியதே! நமக்கு மட்டும் ஏன் இந்த அளவிற்கு கொந்தளிக்கிறார்கள் என்பதுதான் சிம்புவின் அப்பாவித்தனமான கேள்வி.

### பொதுபுத்தியின் கோபம் நியாயம்தானா?

இன்று சிம்புவை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யவேண்டும் கேட்பவர்கள் அனைவரும் மன்னன் படத்தில் ரஜினிகாந்த், விஜய சாந்தியை கன்னத்தில்," பளார், பளார்" என்று அறையும்போது கைதட்டி வரவேற்றவர்கள் தானே.

"இப்படித்தான் இருக்கவேண்டும் பொம்பள "பாடுற மாட்டை பாடிக் கறக்கணும்,ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும்." போன்ற பெண்களின் ஆளுமை வளர்ச்சிக்கு தடைபோட்ட பாடல்களை வரவேற்று கொண்டாடிய கூட்டம்தானே.

பெண்ணைப் பாதுகாக்க வேண்டிய கடமை ஆணிற்கு இருக்கிறது என்று இந்த சமூகம் நம்பும்போது, பெண்ணை ஒடுக்குகிற உரிமையும் ஆணிற்கு உண்டு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் பெண்ணை அடக்கும் கதாநாயகர்களை இவர்கள் கொண்டாடுகிறார்கள். உடல் ரீதியாக அநாகரிகமான பாடல் வரிகள் எழுதும் போது கொதித்து எழுகிறார்கள். பெண்ணை அடிமைப்படுத்துவதை ஏற்றுக் கொள்கிற பொதுபுத்தி, பெண்ணை அநாகரிகமாக சித்தரிக்கும்போது கோபப்படுவதன் பின்னனி என்ன?.

பெண் உடல் பாதுகாக்கப்படவேண்டியது, புனிதமானது என்கிற ஆணாதிக்க உளவியல்தான் காரணம். ஆகவே,பெண் விடுதலை என்பது பெண் உடலைப் பாதுகாப்பதோ, போற்றிப் பேணுவதோ அல்ல. அவள் உடல் என்னவாக இருக்க வேண்டும் என்கிற உரிமையை பெண் தீர்மானிப்பது.

ஆகவே, சிம்புவிற்கு எதிராக போராடுபவர்கள் பெண்ணிய அரசியலை கையில் எடுக்க வேண்டும். பெண்ணுடல் பாதுகாப்பு அரசியல் பேசுவது மீண்டும் ஆண் உலகத்திற்குள் தங்களை ஒப்படைப்பது போன்றது. இந்த அநாகரிக பாடல்களுக்கு காரணம் பழமைவாத ஆணாதிக்க கருத்தியலும், கார்ப்பரேட் நுகர்வு கலாசாரத்தின் எல்லையற்ற பெண்ணுடல் சந்தையும்தான் என்பதை உணர வேண்டும். இந்த அரசியலை கையிலெடுப்பது தான் இது போன்ற அநாகரிக பாடல்வரிகளுக்கு முற்றுபுள்ளி வைக்கும்.

சிம்பு அநாகரிகத்தின் தொடக்கமல்ல, இந்த சமூகமும், சினிமாவும், குடும்ப அமைப்பும் ஆண்டாண்டு காலமாக போதித்து வரும் ஆணாதிக்க அநாகரிகத்தின் தொடர்ச்சி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# உயிர்களைக் கொள்ளையிடும் புகையிலை

இன்று உலக அரங்கில் வருடாந்தம் 60 இலட்சம் மக்களின் உயிரைக் கொள்ளை கொண்டு பலகோடிக் கணக்கான மக்களை நோயாளிகள் ஆக்குகின்ற புகையிலையின் பிறப்பிடம் அமெரிக்கா. 15ஆம் நூற்றாண்டில் அங்கு வாழ்ந்த பழங்குடி மக்கள் குளிர் பனி போன்ற விசேட காலங்களில் பாவித்துவந்தனர்.

இதனை புதிய உலகைக் கண்டு பிடிக்கப்புறப்பட்ட கொலம்பஸ், மாலுமிகளும் வியப்புடனும் ஆச்சரியத்துடனும் அவதானித்ததாக வரலாறு கூறுகிறது. பின்பு அங்கிருந்து ஸ்பெயின் பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளுக்குப் பரவி 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகி, 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முகலாயப் பேரரசர் ஆட்சிக் காலத்தில் பயிரிடப்பட்டுப் பின் ஆசிய நாடுகளில் எல்லாம் மிக வேகமாகப் பரவியது. தற்போது இது இல்லாத நாடு எதுவும் இல்லை எனும் அளவுக்கு ஊடுருவி, மனித சமுதாயத்தில் பல்கிப் பெருகிச் சர்வசாதாரணமாக இருக்கும் புகைப்பிடிப் பழக்கம் எல்லோரையும் தன்வயமாக்கிப் பழக்கமானதொரு வழக்கமாகி விட்டது. வாழ்க்கையில் எதை இழந்தாலும் தன்மீது மட்டும் பற்று இருக்குமாறு இப் புகைக்குடி செய்துவிடுகிறது.

பலவிதமான நச்சுப்பொருட்களைக் கொண்ட புகையிலையில் உள்ள நிகோட்டின் எனும் நஞ்சானது மூளையையும் அதன் நரம்பு மண்டலங்களையும் தூண்டி விடுகிறது. இதனால் தற்காலிகப் புத்துணர்ச்சி பெறுவது போன்ற இன்பம் அடைகின்றான். இருதயத்தையும் அதிவேகமாகத் துடிக்க வைக்கிறது. குருதிக் குழாய்களையும் குறுக்கி விடுவதால் குருதி அமுக்கம் தற்காலிகமாக அதிகரிக்கிறது.

இப்புத்துணர்ச்சிக்குப் பின் மனிதன் மிகச் சோர்வுள்ளவனாக ஆகிவிடுகிறான். எனவே மீண்டும் புத்துணர்ச்சிபெற விரும்புகிறான். அதனால் மீண்டும் புகையை நாடுகிறான். இவ்வாறு புகைக்குடிக்கு அடிமை ஆகிறான். ஒருமுறைபுகை குடிக்கும்போது உடலில் சென்ற நிகோட்டின் ஆனது நான்கு மணித்தியாலயத்துக்கு உடலில் அதன் தாக்கம் இருக்கும். மக்கள் புகையி



லையைச் சுருட்டு பிடி வாய்ப் புகையிலை, சிகெரெட் முக்குத்துள் போன்ற வடிவங்களில் பயன்படுத்துகின்றனர்.

நடுத்தர வர்க்கத்தினரும் உயர் வர்க்கத்தினரும் கூடுதலாகச் சிகரெட் பாவிக்கிறார்கள். இதில் புகையை வடிகட்டும் பில்டர் உண்டு. ஏழைகளும் தொழிலாளர்களும் கூடுதலாகப் பீடி பாவிக்கிறார்கள். இது மலிவானது. எனினும் சிகரெட்டை விட ஆபத்தானது. பீடியில் உள் எடுக்கப்படும் புகையில் காபன் மொனக்சைட் நிகோடின், ஹைற்ரஜன் சயனைட்டு, பொன் சோபைரின் மற்றும் அமோனியா போன்றவை சிகரெட்டில் உள்ளதைவிடக் கூடுதலாக உள்ளெடுக்கப்படுவதால் அதிக ஆபத்தைக் கொடுக்கும். அத்துடன் இதில் வடிகட்டுவதற்கு பில்டர் இல்லை. வாய்மூலம் மெல்லப்படும் உமிழ்நீர் கலந்த புகையிலைச்சாறு ஆனது வாய்ப்பகுதி, சுவாசப்பை வயிற்றுப் பகுதிகளில் புற்றுநோயை ஏற்படுத்துகிறது என்பதை ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

ஒருவர் சிகரெட் குடிக்கும்போது அதில் 1/3 பகுதி நிகோடின் புகை மூலம் உடலினுள் உள்வாங்கப் படுகிறது. அத்துடன் விரைவாகக் குடிக்கும் போதும் சிகரெட் எரிந்து குறுகும்போதும் கூடுதல் அளவு நிகோடின் உள்வாங்கப்படுகிறது.

மீதி நிகோடின் ஆனது காற்றின் மூலம் வீட்டுச் சுவர்கள் கட்டில்கள் தரை தரைவிரிப்புகள், மேசை, நாற்காலிகள் போன்ற மரப்பொருள்களிலும் அவர் அணிந்திருக்கின்ற உடை அவரது தோல் பகுதிகளிலும் படிகின்றன. பின்பு இந்த நிகோடின் ஆனது காற்றில் உள்ள நைட்டஸ் அமிலத்துடன் (Nitrous acid) கலந்து புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய (TSNAS) Tobacco Specific Niro samines எனும் நச்சுப் பொருளை உண்டாக்குகின்றது. இது வீட்டில் தவழும் குழந்தைகள் ஓடி விளையாடும் பிள்ளைகளின் தோல், சுவாச மூலம் உடலினுள் சென்று ஏதும் அறியாதவர்களும், புகை பிடிக்காதவர்களும் இதனால் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகின்றது.

சாதாரண சிகரெட் புகையில் நிகோடின் பைரிடைன் அமோனியா மெதிலைமன் பிரஸ்ஸிக் அசிட் கார்பன் மொனசைட் சல்பரிட் 'ட்ரஜன் கார்பாலிக் அசிட் காவிடிக் இது போன்ற 19 வகையான உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய நச்சுத்தன்மையைக் கொண்டுள்ளது.

ஒருவருக்கு ஏற்படும் இந்தப் புகைத்தல் பழக்கத்தால் பணவிரயம், காலவிரயம் சக்தி விரயம், உதடைக் கருகச் செய்தல் பற்களின் நிறமாற்றம் பல்ஈறுகளில் காவி படிதல், வாய் துர்நாற்றம், இதய நோய்கள், சுவாசப்பை நோய்கள் இரத்த அழுத்தம், கண்பார்வை மங்குதல், உஷ்ண இருமல், சீரண சக்தி குறைவு, பசியின்மை, தூக்கமின்மை, மூச்சுத்திணறல், ஆஸ்துமா இரத்தக்குழாய்கள் சுருக்கம் இரத்த நாளங்களில் அழற்சி, கசரோகம், சீரர வளர்ச்சி குறைவு உடலின் மென்மையான உறுப்புகள் பாதிக்கப்படுதல், சிறு மரணம், குறைப் பிரசவம், பாரிசவாதம், மலட்டுத்தன்மை வாய், தொண்டை உணவுக் குழாய், சுவாசப்பை போன்ற பகுதிகளில் புற்றுநோய்கள் நாவு சுவை அற்று இருத்தல், இப்படியே தொடர்ந்து எழுதிக்கொண்டு இருக்கலாம். இப்படிப் புகையிலை பாவிக்கும் பழக்கத்தில் இருந்து ஒருவர் மீள்வதற்கு ஆரம்பம் ஆயின் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.

புகைத்தலை முற்றாகத் தவிர்த்தல், பல நாட்களாகவே இப்பழக்கம் இருப்பினும் நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும் கூடுமானவரை புகைப் பிடிப்பவர்களோடு இருத்தலைத் தவிர்த்தல், தண்ணீர் அல்லது சீனி சேர்க்காத பழரசங்களை அதிக அளவில் அருந்துதல், கிளர்ச்சியூட்டக்கூடிய எல்லாப் பானங்களையும், உணவுகளையும் தவிர்த்தல், சுத்தமான காற்றோட்டம் உள்ள இடத்தில் உடற்பயிற்சி செய்தல், உலாவுதல், உங்கள் புகைகுடியோடு சம்பந்தப்பட்ட இடங்களைத் தவிர்த்தல், செயல்களைத் தவிர்த்தல், அதிகம் புகை குடிக்கும் பழக்கம் முன்பு இருப்பின் படிப்படியாகக் குறைத்தல் மாற்றுப் பழக்கத்தை ஏற்படுத்தல் (ஸ்விங்கம்) வாயில் போட்டு நெடுநேரம் மெல்லுதல், மருத்துவம், மனோவசிய முறைகளை நாடுதல், தனிமையில் இருத்தலைத் தவிர்த்தல், தன்னடக்க முறை. சிகரெட் குடிப்பது தவறு. அது எமது உடலுக்கு நஞ்சு என்பதை அறிந்து புறமனதின் அறிவுறுத்தலினால் நாம் ஒவ்வொருவரும் இதில் இருந்து மீட்சி பெறுதல் வேண்டும். இன்று உலக அரங்கில் எந்த அரசின் பொருளாதாரத்திலும் புகையிலைப் பொருட்களும் மதுபானமும் அதிக வருமானத்தைக் கொடுப்பதால் அதனை முற்று முழுதாகத் தடை செய்யமுடியாத நிலையில் உள்ளது. எனினும் மக்கள் நலன் கருதி இதன் கவர்ச்சிகரமான விளம்பரங்களைத் தடை செய்வதன் மூலமும் இதன் பாதிப்புக்களை பகிரங்கமாக வெளியிடுவதன் மூலமும், மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு இது பற்றிய அறிவைப் புகட்டுவதன் மூலமும் பொது இடங்கள், மக்கள் போக்குவரத்துப் பாதைகள் போன்றவற்றில் இவை பாவிப்பதை தடைசெய்வதன் மூலமும் ஒவ்வொரு தனிமகனும் இதுபற்றி விழிப்புணர்வு பெற்று இதில் இருந்து மீள்வதன் மூலம் எம்மால் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

ச. சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

## கேள்விக்கு என்ன பதில்

எனக்கு ஒரேயொரு மகன். அவனுக்கு 14 வயது. தரம் 9இல் படிக்கிறான். கடந்த இரண்டு ஆண்டுகளாக வலிப்பு வருத்தம் இருக்கிறது. தினமும் மருந்து பாவிக்கிறவன். இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையேனும் வலிப்பு வருகின்றது. வீட்டில் நானும், மகனும் மட்டும் தான் இருக்கின்றோம். எனக்கு வலிப்பு வருத்தம் பற்றிய விளக்கம் இல்லை. எனது மகனை எப்படி பார்த்துக் கொள்ள வேண்டும்? எனக்கு இது பற்றிய விளக்கம் தாருங்கள்

நீங்கள் வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை. வலிப்பு என்பது மாத்திரைகளினாலும், சரியான பழக்க வழக்கங்களினாலும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். வைத்தியர்கள் ஏற்கனவே இது சம்பந்தமான பரிசோதனைகளைச் செய்து உறுதிப்படுத்திய பின்னரே வலிப்புக்கான மருந்துகளை ஆரம்பித்து இருப்பர். எனவே தினமும் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை உள்ளெடுக்க வேண்டும். அத்துடன் இவர் சரியான முறையில் மருந்துகளை பாவித்தாலும் சில காரணிகள் வலிப்பு வருகின்ற சந்தர்ப்பத்தினை அதிகரிக்கின்றதன. உதாரணமாக தொடர்ச்சியாக தொலைக்காட்சி பார்த்தல், சரியான நேரத்திற்கு உணவு உண்ணாது விடல், மன அழுத்தம், என்பனவற்றைக் கூறலாம். எனவே இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்ளல் அவசியம். அத்துடன் சில ஆபத்தினை ஏற்படுத்தக் கூடிய வாழ்க்கை நடைமுறைகளையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். அவையாவன

தனியாக நீண்ட தூரப் பயணம் செய்வதையோ (துவிச்சக்கர வண்டி ஓட்டுதல், நடத்தல்) அல்லது தனியாக இருக்கின்ற சூழ்நிலைமையையும் இயன்றவரையில் தவிர்த்துக் கெள்ளல் வேண்டும்.

நீந்துதல், உயரமான இடங்களில் ஏறுதல், கிணற்றில் இருந்து தண்ணீர் அள்ளுதல் என்பவற்றைத தவிர்த்தல் வேண்டும்.

நெருப்புக்கு அருகில் நிற்பதையும், கூரிய ஆயுதங்களை கையாள்வதையும் தவிர்க்க வேண்டும்.

நீண்ட நேரம் இரவில் நித்திரை கொள்ளாது விழித்திருத்தல், நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்த்தல், நேரத்திற்கு சாப்பிடாமையையும் தவிர்த்தல் வேண்டும்.

அத்துடன் வலிப்பு வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் நீங்கள் அறிந்திருத்தல் அவசியம்.

உடனடியாக அவரை இடது பக்கப்புறமாக படுக்க வைத்தல் வேண்டும்.

அவரைச்சுற்றியுள்ள ஆபத்தான பொருட்களை அகற்றல் வேண்டும்.

வாயினுள் திறப்பு போன்றவற்றை வைத்தலை தவிர்க்க வேண்டும். அத்துடன் நாக்கு கடிபடாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வலிப்பு முற்றாக நிற்கும் வரை ஒருவராவது பக்கத்தில் நிற்க வேண்டும்.

தொடர்ச்சியாக வலிப்பு இருக்குமாயின் (15 நிமிடங்களுக்கு அதிகமாக) உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு போக வேண்டும்.

இது பற்றி வகுப்பு ஆசிரியருக்கும் தெரியப்படுத்தல் நல்லது. மேலும் இவரின் படிப்பில் கூடிய அக்கறை எடுத்து முன்நோக்கி எடுத்துச் செல்ல வேண்டும். ஏனெனில் இவர்கள் கூலி வேலைகள் செய்வதற்கு பொருத்தமானவர் அல்ல. அத்துடன் தவறாது கிளினிக் செல்லுதல் வேண்டும். பாவிக்கும் மருந்துகளினால் ஏற்படுகின்ற பக்க விளைவுகள் பற்றியும் உங்கள் வைத்தியரிடம் இருந்து தெரிந்து கொள்ளல் அவசியம். நீங்களாக வைத்திய ஆலோசனை இன்றி மருந்தினை பாவிக்காது விடக் கூடாது. புதிதாக மருந்துகளையும் பாவிக்கக் கூடாது. அத்துடன் ஒவ்வொரு தடவை வலிப்பு ஏற்படும் போதும். ஏற்பட்ட திகதி, எவ்வளவு நேரம் நீடித்தது, எப்படிப்பட்ட அசைவுகள் உடலில் காணப்பட்டது. எப்படிப்பட்ட சூழ்நிலையில் உருவானது என்பவற்றை ஞாபகத்தில் வைத்து (எழுதி வைத்து) கிளினிக் செல்லும் போது வைத்தியரிடம் கூறி ஆலோசனை பெற்றுக் கொள்ளல் அவசியம்.

- நன்றி -
நீரிழிவு சிகிச்சை நிலையம்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

மழை சற்றே ஓய்ந்திருந்தது. படங்குகளை உயர்த்திக்கொண்டு மேல்தளத்திற்கு பலர் வந்தனர். ஆறுமணியாகியிருந்தது. குமாரும் சரவணனும் தளத்தில் அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தனர். கப்பலின் மேல்தளத்தில் வெளிச்சம் போடப்பட்டிருந்தது. மழையினால் தளம் தண்ணீர் நிரம்பியிருந்தது.

லங்காராணியில் இருந்தவர்களில் பலர் யாழ்ப்பாணத்தவராக இருந்தாலும் கொழும்பில் நெடுங்காலமாக வாழ்ந்தவர்கள் கலியாண வீடு, கோயில் திருவிழா, போன்றவற்றுக்கு மாத்திரம் யாழ்ப்பாணம் சென்றவர்கள். உறவினர் இருந்தாலும் கொழும்பில் நிரந்தரமாக இருப்பவர்கள் என்பதனாலும் உயர் பதவிகளில் இருப்பவர்கள் என்பதனாலும் இவர்களது யாழ்ப்பாண மண்ணுடனான உறவு "யாழ்ப்பாணத்தவன்" என்ற சொல்லுடன் மாத்திரம் நின்றுவிடும்.அங்குபோனால் நல்ல பனங்கள்ளுக் குடிக்கலாம் என்று கூறுவார்கள். கொழும்பு வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு மேலைய நாகரிகத்துடன் ஒன்றிப்போனார்கள். யாழ்ப்பாணம் சென்றால் இவர்களைக் குடிமக்கள் உறவினர் பயபக்தியுடன் வரவேற்று உபசரிப்பர். இவர்கள் யாழ்ப்பாணம் வருகின்றார்கள் என்ற செய்தி ஒரு மாதத்திற்கு முன்பு கிடைத்தாலும் அன்றிலிருந்தே ஆயத்தங்கள் தொடங்கிவிடும் வரும் நாளை எண்ணிக் கொண்டிருப்பார்கள்

கிராமங்களில் குடும்பங்களுக்கிடையில் சிறப்பு நிலைபற்றி பலத்த போட்டியிருக்கும். கொழும்பில் உறவினர் இருப்பவர் பலம் வாய்ந்தவராக இருப்பார்கள். தாங்கள் வறுமையில் வாடினாலும் கொழும்பில் இருக்கும் உறவினரின் செல்வநிலை பற்றி நினைத்து மகிழ்ச்சியடைவார்கள்.

இந்த உறவுகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆங்கிலேயரின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல கல்லூரிகளைத் தொடக்கினார்கள். இலங்கையின் முதல் மருத்துவக் கல்லூரிகூட யாழ்ப்பாணத்தில்தான் தொடங்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்தவர் கல்வியறிவில் இலங்கையில் முதலிடத்தைப் பல காலமாக வகித்து வந்தனர். ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் பல பகுதிகளிலும் சென்று யாழ்ப்பாணத்தவர் வேலை செய்தனர். இந்த அரசாங்க உத்தியோகங்களுக்கு பிள்ளைகளை சிரமப்பட்டு படிக்கவைத்தனர். யாழ்ப்பாண மக்களுக்கு இதுதான் இலட்சியமாக அமைந்துவிட்டது. இப்படி உயர் பதவிகளில் இருப்பவர்களை தாய்மார்கள் நல்ல சீதனம் கொடுத்து தங்கள் பெண்களுக்கு மணம் முடித்துவைப்பர். ஆண்களைப் படிப்பித்து அரசாங்கத்தில் வேலையொன்றில் பெரிய இடத்தில் நல்ல சீதனத்துடன் கட்டிவைப்பதில் தாய்தான் முன்னுக்கு நிற்பாள். இதில் ஒருபகுதி அவளுக்கும் கிடைக்கும். வீடுகள், தோட்டங்கள், நகைகள் எல்லாம் சீதனமாக எழுத்து மூலம் கொடுப்பார்கள். டாக்டர், என்சினியர் என்றால் பேச்சுவார்த்தைகள் இலகுவில் முடிந்து விடும். மற்ற வேலையென்றால் தரகர்கள் செயற்படுவார்கள். அரசாங்க உத்தியோகம் இல்லையென்றால் அதோகதிதான். தமிழர்களுக்கு உயர்கல்வி, தரப்படுத்தல் மூலம் குறைக்கப்பட்டபோது அந்தப் பிரச்சினை யாழ்ப்பாணத்தவரின் அடிப்படை வாழ்க்கை முறைக்கே சவாலாக அமைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தவரும் சொந்த முயற்சியில் தொழிற்சாலைகளைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தக் கூடிய நிலைமிருந்தும் அதை எவரும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

லங்கா ராணியில் இப்படி சீதனம் வாங்கி கலியாணம் செய்துகொண்டவர்கள் பலர் இருந்தனர். இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் அல்லது கொழும்பில் சிதனமாக வீடு கிடைத்திருக்கும். மாப்பிள்ளைகளின் இந்த அரசாங்க உத்தியோகம் என்றும் நிரந்தரமாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான் சீதனம் கொடுத்திருப்பார்கள்

இனக் கலவரங்களைப்பற்றி எண்ணிப் பார்க்கமாட்டார்கள்

இந்தப்பிரச்சினையை குமாரும் சரவணனும் பேசிக்கொண்டனர்.


"இவன்கள் எவ்வளவுதான் திரும்பிபோகமாட்டன் என்று சொன்னாலும் மாமி ஒரு கிழமைக்கு தேத்தண்ணி போட்டுக்கொண்டு வந்து எழுப்ப பேசாமல் பெண்டிலை விட்டுப்போட்டு பெட்டிகளைக்கட்டிக் கொண்டு கோச்சி ஏறுவான்கள். நீ வேண்டுமால் இருந்துபார்" என்றான் சரவணன்.

குமாருக்கு சிரிப்பு பொறுக்க முடியவில்லை. "அது மெய் அது கட்டாயம் நடக்கும்" என்று கூறினான்.

கடந்த இருவாரங்களாக நடந்த இனக்கலவரத்தினால் எவ்வித பாதுகாப்புமற்ற நிலையில் அல்லல்பட்டு உடுத்திய உடுப்புகளுடன் அகதிகள் முகாம்களில் தஞ்சம்புகுந்து தாய் மண்நோக்கி கப்பலில் புறப்பட்டு சீதனவாக்கும், குடும்பச்சிறப்பும், தற்பெருமையும் தவிடுபொடியாகி அனாதைகள்போல் ஆக்கப்பட்டுஅடுத்து என்ன நடக்கப்போகின்றது என்ற ஏக்கத்துடன் கப்பல் தளங்கவில் யோசனையில் ஆழ்ந்திருந்தனர் பலர். யாழ்ப்பாணம் நோக்கி கப்பல் புறப்பட்டதும் இந்தப்பிரச்சினை முடிவுக்கு வந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் தங்கள் உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி பரிதவித்துக்கொண்டிருப்பார்.

அவர்களை எப்போது அரவணைப்போம் என்று கப்பல் யாழ்ப்பாணத்தை சென்றடையும் நேரத்தை எதிர்பார்த்திருந்தனர்.கப்பலின் மேல்தளத்தில் உலாவுவதற்கு சிலர் வந்திருந்தனர்.

இளைஞர்கள் தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். நீர்கொழும்பு இளைஞன் இலங்கையில் இராணுவத்தினர்,பொலிசார் நவீன ஆயுதங்கள் வைத்திருக்கின்றனர். வாகனங்கள் வைத்திருக்கின்றனர். ரேடியோமூலம் எங்கு வேண்டுமானாலும் தொடர்புகொள்ளலாம். அப்படி இருக்கும்போது அவர்களுடன் எவ்வாறு போரிடுவது என்ற கேள்வியைக் கேட்டான். வேட்டியுடன் இருந்த இளைஞன் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலைச்சொல்லிக்கொண்டிருந்தான். அவனது முகம் கம்பிரமாக கண்கள் ஒளி வீசிய வண்ணம் இருந்தன. களைப்படைந்து இருக்கவில்லை. என்ன ஏதோ என்று திகிலடையவில்லை. திரும்பிபோகிறோம் ஊரார் தன்னை மதிக்கமாட்டார்கள் என்று பிரச்சினைப்படவில்லை. திருகோணமலையில் கமம் செய்கிறேனென்று சில நிமிடங்களுக்குப்பின் பதில் சொல்வான். எந்தப்பிரச்சினையையும் உடன் விளங்கிக் கொள்வான். அவனுக்கு தாய் இருந்தாள். ஊரார் தாயிடம் மகன் என்ன வேலையிலிருக்கிறார் என்று கேட்பார்கள். தாயும் பலவாறு சொல்லிவிட்டு மகனிடம் வந்து சொல்வாள். "நீயும் லண்டனுக்குப்போ" அவன் சிரித்துக்கொள்வான். நான் திருகோணமலையில் வயல் செய்கிறேன் என்று சொல்லு என்று அடித்துக்கூறுவான்.இவனுக்கு என்ன நடந்தது என்று தாய் ஏங்குவாள்.




> தமிழ்மக்களின்
> பொருளாதார வீழ்ச்சியும்
> வறுமையும் அரசின்மீது
> தமிழ் மக்களின்
> நம்பிக்கையை முற்றாக
> இழக்கச்செய்திருந்தது.

இலங்கையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் அழகாக உடையணிந்து பெரிய சப்பாத்துக்கள் போட்டிருப்பார்கள். 1971ஆம் ஆண்டு சிங்கள இளைஞரின் கிளர்ச்சியின் பின் அவசரகாலச்சட்டம் ஏழு ஆண்டுகளாக அமுலில் இருந்தது. பொலிசாருக்கு இயந்திரத் துப்பாக்கிகளை அரசு வழங்கியிருந்தது. இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களையும் அவர்களுக்கு ஆதரவளித்த கிராமங்களையும் இராணுவத்தினர் அழித்துவிட்டனர். இதைத்தொடர்ந்து பொலிசார் தமிழ் இளைஞர்களையும் கைதுசெய்து வைத்திருந்தனர். அடிக்கடி தமிழ்ப் பகுதிகளில் ஏதாவது மோதல் ஏற்படும். தப்பித்தவறி இந்தப்பொலிசாரை மக்கள் எதிர்த்தால் அதற்குப் பயங்கரமாக பதிலடி கொடுப்பார்கள். இவர்களுக்கு அரசு புதிய வாகனங்களையும் இறக்குமதி செய்து கொடுத்திருந்தது. 72ஆம், 73ஆம் ஆண்டுகளில் இலங்கையில் பஞ்சம் ஏற்பட்டது மக்கள் உணவில்லாமல் ஒட்டிப்போய் எலும்பும் தோலுமாக காட்சியளித்தார்கள்.உணவுப் பொருட்களை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டுபோகக் கூடாது என அரசு சட்டம்போட்டிருந்தது. இரண்டுகொத்து அரிசிக்குமேல் புகையிரதத்தில் கொண்டு சென்றால் அவனைப் பிடித்து விசாரணை செய்வார்கள். பட்டினியால் பாமர மக்கள் வாடினார்கள பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் நல்ல உணவை அரசு வழங்கியிருந்ததால் நன்றாக செழித்துப்போயிருப்பார்கள்.

தமிழ்மக்களின் பொருளாதார வீழ்ச்சியும் வறுமையும் அரசின்மீது தமிழ் மக்களின் நம்பிக்கையை முற்றாக இழக்கச்செய்திருந்தது. அரசைப் பாதுகாத்தல் என்ற புனித பணியில் ஈடுபட்டிருந்த பொலிசார் தங்களை எதிர்ப்பவர்களை அரசை எதிர்ப்பவர்களென்றுதான் கொள்வார்கள்.

ஆங்கிலேயர் பாணியில் ஏற்படுத்திக் கொண்ட சம்பிரதாயங்களும் ஒரு போலி சிறப்புணர்ச்சியும் பாதுகாக்கப்படவேண்டிய தென்றும் அப்படியான நிலைதான் தங்கள் பணியைச் செய்வதற்கு மிகவும் அவசியம் என்ற கருத்தும் பொலிஸார் மத்தியில் பரவலாக இருந்தன. ஆங்கிலேயர் காலத்தில் இந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் ஒரு காலனி ஏகாதிபத்தியத்தின் பாதுகாவலராக இயங்கினர். மக்களைச் சுரண்டும் நோக்கில் அங்கு வெள்ளைக்காரர் இருந்தனர். பொதுசனங்களை எப்போதும் பயப்படுத்தி வைத்திருக்கவேண்டிய நிலை. ஆங்கிலேயர் சென்றுவிட்டனர். அவர்களுக்குப் பதிலாக வேறொருவர் பொருளாதார ரீதியில் அதே பிரச்சினைகள். புதிதாக வந்தவர்கள் ஆங்கிலேயர் ஏற்படுத்திச் சென்ற அதிகார பீடங்களையும் அவற்றுடன் ஒன்றிப் போய்விட்ட ராஜரீகபோகங்களையும் துறந்து மக்களின் முன்னோடிகளாக விளங்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள இந்தப் பொலிசாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தினர். அதே நிலை தொடர்ந்து நீடித்தது.

அரசியல்வாதிகளின் இயலாமை அரசியல்வாதிகளின் பிற்போக்குத் தன்மை இவற்றையெல்லாம் மூடி மறைத்து பாதுகாக்கும் பொறுப்பை பொலிசார் பெருமிதத்துடனே ஏற்றுச் செயற்பட்டு வந்தனர். இதற்காக இவர்களுக்குப் பல சலுகைகள். அந்த அதிகார வெறிப்போக்கிலும் ராஜரீகசுகபோகங்களிலும் ஒரு பங்கு மக்களுக்கும் அரசுக்கும் ஏற்படும் முரண்பாட்டிற்கும் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் ஏற்றவாறு இவர்கள் பொறுப்பும் கூடிக் கொண்டுபோகும். இதனால்தான் புரட்சி என்று புறப்பட்ட சிங்கள இளைஞர்கள் முதலாவதாக பொலிசாரை இலக்காகத் தாக்கினார்கள்.

சிங்கள அரசின் தமிழினவிரோதப் போக்கு ஏற்படுத்திய அதிருப்தியும் அரசின் மீதான வெறுப்பும் இளைஞர்களின் துடிப்பும் தமிழ்ப்பகுதிகளில் பொலிசாரின் பொறுப்புகளுக்கு ஒரு புதிய திருப்பம் கொடுத்திருந்தது. பொலிசார் இயந்திரத்துப்பாக் கிகளை தோளில்போட்டுக்கொண்டு வீதிகளில் வலம் வருவர். இத்துப்பாக்கிகளை சாக்கில் சுற்றி இடுக்கில் வைத்துக்கொண்டு விற்பதற்கு ஆடு, மாடு ஏதாவது இருக்கிறதா என வினவிக்கொண்டு வீடுகளுக்கு வருவார்கள் இளைஞர்களைத்தேடி. இளைஞர்களின் அந்தப்போக்கு தமிழ் இனத்தின் மீது சிங்கள அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறையின் பிரதிபலிப்பே என்பதை இந்தப்பொலிசார் உணரத் தவறிவிட்டனர். ஏதோ இளைஞர் களைப் பிடித்து அடைத்தால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று கருதினர்.

இதோடு மாத்திரமல்லாமல் கடந்த பொதுத்தேர்தலில் பதவிக்கு வந்த அரசு ஏழு ஆண்டுகளாக அமுலில் இருந்த அவசர காலச்சட்டத்தை எடுத்து விடுவதாகக் கூறிக்கொண்டு பதவிக்கு வந்ததால் அவசர காலநிலை நீக்கப்பட்டது. ஏழுவருடங்களாக அவசரகாலச்சட்டத்தின் உதவியினால் இயங்கிவந்தவர்கள் சட்டம் அகற்றப்படவே திக்கற்றவர்களாகத் தத்தளித்தனர். பொதுசனங்கள் மீது அவர்களுக்கிருக்க வேண்டிய பிடியை நழுவவிட்டிருந்தனர். எவ்வித குற்றங்களுக்கும் துப்புத்துலக்க முடியாமல் சித்திரவதையே ஒரேமுறையென அதில் தஞ்சம் புகுந்தனர். பயம் அவர்களை ஆட்டிப்படைத்தது. இளைஞர்களை பிடிக்கமுடியாவிட்டால் அவர்களின் தாய்தந்தையரை பிடித்துக்கொண்டுபோய் சிறையிலடைத்து சித்திரவதை செய்தனர்.

(தொடரும் .....)

# பெண்கள் மீதான வன்முறை

## ஒரு நோக்கு

**பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்**

இலங்கையில் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தின் குற்றத்தினால் வரையறுக்கப்பட்டவாறானதும், ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ளவாறு பாலியல் வல்லுறவின் குற்றத்தினால் உள்ளடக்கப்படாததுமான சகல பாலியல் செயற்பாடுகளையும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் உள்ளடக்குகின்றது. பாலியலைத் திருப்திப்படுத்துவதற்காக பிறப்புறுப்புக்களின் அல்லது மனித உடலின் பாகங்களின் உபயோகத்தின் ஊடாக மட்டும் அன்றி, ஆனால் ஏதாவது கருவியின் ஊடாகவும் அத்துடன் இன்னொரு நபரின் உடலின் ஏதாவது துவாரத்தின் அல்லது உடலின் மீதும் இடம்பெறுகின்ற தருணங்களைப் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் உள்ளடக்குகின்றது.

**பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தை முறையிடல்**

அங்கீகாரம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து விரைவிலேயே மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். ஏதாவது தலைமயிர், உடல் திரவங்கள், தசைநார்கள் மற்றும் வேறு சான்று இருந்தால், அவற்றைச் சேகரிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார். ஏதாவது பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் இருந்தால் சட்ட மருத்துவ உத்தியோகத்தருக்கும், பொலிசுக்கும் அறிவிபதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார்.

அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்யுங்கள்.

பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்வதற்கு முன், பெண்கள், சிறுவர் பொலிஸ் பிரிவொன்றை (தொடர்பு) கொண்டுள்ளதா என விசாரியுங்கள். அல்லது ஆண் கான்ஸ்டபிள் ஒருவருக்குப் பதிலாக பெண் கான்ஸ்டபிள் ஒருவருடன் பேசுவதற்கு விரும்பினால் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கேளுங்கள். சம்பவத்தின் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

வாக்குமூலத்தில் கைச்சாத்திடுவதற்கு முன் அதை வாசிப்பதை உறுதிசெய்யுங்கள்.

வாக்குமூலமொன்றைப் பெறுவதற்கு மேலதிகமாக, உடல்ரீதியிலான சான்றினைப் பொலிசார் சேகரிப்பதுடன், யாரேனும் சாட்சிகள் இருந்தால் அவர்களுடனும் பேசுவார்கள்.

உங்கள் விடயத்தின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகளவு மணித்தியாலங்களை பொலிசாரின் விசாரணை எடுக்கும். சில கேள்விகள் எல்லை மீறுவதாக இருக்கும் என்பதுடன், உங்கள் மீதான தாக்குதல் பற்றிய விபரங்களை அந்த உத்தியோகத்தர்கள் பல தடவைகள் விசாரிப்பார்கள்.

குற்றமிழைத்தவருக்கு எதிரான மிகப் பலமான சாத்தியத்திலான வழக்கை தாக்கல் செய்வதற்காக துல்லியமாக ஒவ்வொரு விபரத்தையும் பெறுவதற்கான அவசியம் இருப்பதனால், விரிவான விதத்தில் விசாரணை இடம்பெற்றாலும், அது அனேகமாக நியாயப்படுத்தப்படுகின்றது.

உங்கள் விடயத்தின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகளவு மணித்தியாலங்களை பொலிசாரின் விசாரணை எடுக்கும். சில கேள்விகள் எல்லை மீறுவதாக இருக்கும் என்பதுடன், உங்கள் மீதான தாக்குதல் பற்றிய விபரங்களை அந்த உத்தியோகத்தர்கள் பல

**"வீட்டு வன்முறைக்கு எதிரான யுத்தத்தின் பாகமாக சட்டமும், சட்ட சீர்திருத்தமும் இருக்கப் போவதென்றால், நீதிபதிகளினதும், பொலிஸாரினதும், வழக்கு நடத்துவபவர்களினதும் கவனத்தைக் கவர்வது எமக்கு அவசியமாகும். சட்ட சீர்திருத்தம் தன்னளவில் ஒரு முடிவு அல்ல. ஆனால், பாரிய நடைமுறையின் அங்கம் மட்டுமேயாகும்.**



**மரியோ கோமஸ்**

தடவைகள் விசாரிப்பார்கள். குற்றமிழைத்தவருக்கு எதிரான மிகப் பலமான சாத்தியத்திலான வழக்கைத் தாக்கல் செய்வதற்காக துல்லியமாக ஒவ்வொரு விபரத்தையும் பெறுவதற்கான அவசியம் இருப்பதனால், விரிவான விதத்தில் விசாரணை இடம் பெற்றாலும், அது அனேகமாக நியாயப்படுத்தப் படுகின்றது.

இது சாத்தியமான விரைவில் உங்களால் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஒவ்வொரு விபரத்தையும் எழுதுவதற்கு உதவுகின்றது. இதனால் நீங்கள் விபரங்களைப் பொலிசாருக்கு பரிமாறிக் கொள்ளலாம்.

முறையிடும் நடைமுறையின் ஊடாக சில தாபனங்கள் ஆதரவை வழங்குகின்றன. உங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் அவை தெளிவுபடுத்தும். சேவை வழங்குநர்கள் சென்று. சட்டங்கள் சென்று.

**பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் மீதான சட்டம் வயது வந்தவர்கள்**

பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் என்பது 1985ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவையின் பிரிவு 365 'ஆ' இன் கீழ் ஒரு குற்றவியல் குற்றம் என்பதோடு, பாலியல் வல்லுறவு என்னும் வரைவிலக்கணத்தோடு வராத சம்மதம் இல்லாத அனைத்து பாலியல் நடவடிக்கைகளையும் உள்ளடக்குகிறது.

இது எங்கே ஒரு பாலியல் நடவடிக்கையானது பாலுறுப்புகள் அல்லது மனித உடம்பின் பாகங்கள் என்பவற்றின் ஊடானதாக மட்டுமன்றி ஏதேனும் கருவி மூலமும் மற்றும் மற்றொரு நபரின் ஏதேனும் வாய் அல்லது உடல்பாகம் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுவதையும் உள்ளடக்குகிறது.

இணக்கமில்லாத, ஒரு பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் உள்ளடக்கக் கூடியவற்றுக்கான உதாரணங்கள்

- வாய்மூலமான பாலுறவு
- உடல்ரீதியான தூண்டல்கள்
- கருவிகளைப் பாவித்து துன்புறுத்தும் பாலியல் நடவடிக்கை

**சிறுவர்கள்**

பாதிக்கப்பட்டவர் 16 வயதிற்கு கீழ்ப்பட்டவராயின் அது பாதிக்கப்பட்டவரின் சம்மதமின்றி மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

**ஆட்கடத்தல்**

ஆட்களைச் சுரண்டும் நோக்கத்திற்காக சக்தியையும், பலாத்காரத்தையும், மோசடியையும், வஞ்சகத்தையும் அல்லது வேறு வழிவகைகளையும் பயன்படுத்துவதன் மூலம், ஆள் ஒருவரை சேர்த்துக் கொள்கின்ற, ஏற்றி இறக்குகின்ற, இடமாற்றுகின்ற, அடைக்கலம் வழங்குகின்ற அல்லது வரவேற்கின்ற செயற்பாடொன்றை மனித ஆட்கடத்தல் சம்பந்தப்படுத்துகின்றது.

உள்நாட்டு சிறுவரை உட்படுத்துகின்ற பாலியல் உல்லாசப் பயணம் உட்பட முதனிலையாக உடலுழைப்புக்கும், வர்த்தகப் பாலியல் சுரண்டலுக்கும் இலங்கையின் ஆண்களும், பெண்களும் மற்றும் சிறுவர்களும் கடத்தப்படுகின்றார்கள் என போதைப் பொருள்களினதும், குற்றத்தினதும் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையொன்று குறிப்பிடுகின்றது. வீட்டு வேலைக்காகவும், நிருமாணத் தொழிலுக்காகவும் மற்றும் தொழிற்சாலைத் தொழிலுக்காகவும் மத்திய கிழக்குக்கும், சிங்கப்பூருக்கும் மற்றும் வேறு நாடுகளுக்கும் தொழிலுக்காக ஆட்கடத்தல் பற்றிய வளர்ச்சியுறும் கரிசனைகளும் உள்ளன. ஆங்கிலத்தில தொழில்கள் எனக் கூறப்படுகின்ற அழுக்கடைந்த, அபாயகரமான மற்றும் இழிவான தொழில்களுக்கான மலிவான உடலுழைப்புக்கான கிராக்கியினால் இலங்கை போன்ற நாடுகளில் ஆட்கடத்தல் நிலைமை மோசமடைந்துள்ளது.

**கடத்துவதைத் தடுப்பதற்கும், அடக்குவதற்கும் அத்துடன் தண்டிப்பதற்குமான ஐக்கிய நாடுகளின் மேலதிக விதிகளின் உறுப்புரை 3 (அ) ஆட்கடத்தலை பின்வருமாறு வரையறுக்கின்றது:**

பயமுறுத்தலின் வழிவகைகளினால் அல்லது பலாத்காரத்தின் உபயோகத்தினால் அல்லது பலாத்காரத்தின், ஆட்கடத்தலின், மோசடியின், வஞ்சித்தலின், அதிகார துஷ்பிரயோகத்தின் அல்லது ஊறுபடுந் தன்மையின் நிலையொன்றின் அல்லது சுரண்டல் நோக்கத்திற்கு இன்னொரு நபருக்கு மேலாக கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும் நபர் ஒருவரின் இணக்கத்தைச் சாதிப்பதற்கு கொடுப்பனவுகளை அல்லது நன்மைகளை வழங்குவதன் அல்லது பெறுதலின் வேறு வடிவங்களினால் ஆட்களைச் சேர்த்துக் கொள்ளுதல், ஏற்றி இறக்குதல், இடமாற்றுதல், தஞ்சமளித்தல் அல்லது பெறுதல். ஏனையோரின் சுரண்டல் அல்லது பாலியல் தொழில் அல்லது பாலியல் சுரண்டலின் வேறு வடிவங்கள், கட்டாயப்படுத்தப்பட்ட உடலுழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்திற்கு ஒத்த வழக்கங்கள், மட்டற்ற கீழ்ப்படிவு அல்லது பிறப்புறுப்புக்களை அகற்றுதல் ஆகியவற்றை குறைந்தபட்சமாக சுரண்டல் உள்ளடக்க வேண்டும்.

**"பாலியல் தொழில்" போன்று ஆட்கடத்தலும் ஒரே விடயமா?**

ஆட்கடத்தலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட பாலியல் தொழில் தொடர்பானதாகும். ஆனால், அது ஒரே மாதிரியான குற்றம் என்ற அவசியமில்லை.

ஆட்கடத்தப்படும் பாதிக்கப்பட்டவர்கள் அனேகமாக நிர்ப்பந்தம், பலாத்காரம், அல்லது மோசடி ஆகியன ஊடாக வர்த்தகப் பாலியல் தொழிலின் அங்கமாக விளங்குகின்றனர்.

பெண்களையும், சிறுவர்களையும் சுரண்டும் பெருமளவு வடிவங்களில் கட்டாயப்படுத்தப்பட்ட பாலியல் தொழிலும் ஒன்றாகும். பெண்களைக் கடத்துதல் அல்லது பாலியல் வர்த்தகத்தில் பெண்களின் அடிமைத்தனம் ஆகியன பற்றி நாம் பேசும்போது, தன்னிச்சை சாராத மட்டற்ற கீழ்ப்படிவு, கடன் சார்ந்த அடிமைத்தனம், பணியாட்களை வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனம் ஆகிய நோக்கங்களுக்காக கட்டாயப்படுத்தலின், பலாத்காரத்தின் அல்லது மோசடியின் உபயோகத்தின் ஊடாக "உடலுழைப்புக்காக அல்லது சேவைகளுக்காக' மனிதப் பிறவிகளின் விற்பனையை, மனிதர்களை ஏற்றி இறக்குவதை இதற்கு நாம் சேர்த்துக்கொள்கின்றோம்.

**ஆட்கடத்தல் என்பது "சட்ட விரோதமான புலம்பெயர்வு" அல்லது "கடத்துதல்" போன்ற விடயங்களுக்கு சமமானதா?**

அந்நிய நாட்டுக்கு கடத்துவதோ அல்லது சட்டவிரோதமான குடியகல்வோ மனித ஆட்கடத்தல் அல்ல. சர்வதேச எல்லையொன்றைக கடக்கும் நோக்கத்திற்காக கடத்தப்படுகின்ற நபருக்கும், ஓநாய்களுக்கும் அல்லது வேறு முகவர்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்திலான உறவொன்றுடன் கடத்தல் சம்பந்தப்படுகின்றது. பயண இலக்கிலான நாட்டில் இருக்கும் போது, முன்கூட்டியே கட்டணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதன் காரணத்தினால் தனிப்பட்டவர்களுக்கு இடையிலான உறவு முடிவுக்கு வருகின்றது.

மறுபுறத்தில் மனித ஆட்கடத்தலானது, நபர் ஒருவருக்கு எதிரான ஒரு குற்றமாகும். இதில் தன்னிச்சை சாராத மட்டற்ற கீழ்ப்படிவு, கடன்சார்ந்த அடிமைத்தனம், பணியாட்களை வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனம் ஆகிய நோக்கங்களுக்கு கட்டாயப்படுத்தலின், பலாத்காரத்தின் அல்லது மோசடியின் உபயோகத்தின் ஊடாக "உடலுழைப்புக்காக அல்லது சேவைகளுக்காக" நபர் விற்கப்படுகின்றார் அல்லது ஏற்றி இறக்கப்படுகின்றார்.

ஆட்கடத்தல் சுற்றில் சம்பந்தப்பட்டுள்ள மக்கள்

தனிப்பட்ட செயற்பாட்டாளர்களின் வலைப்பின்னல்கள் – ஆட்கடத்தலை வலைப்பின்னல்க்ள வசதிப்படுத்தி, பராமரிக்க முடியும். ஏற்றி இறக்கல், உல்லாசப் பயணம், ஊடகம்/தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கு ஆகியன உட்பட, பலதரப்பட்ட தனிப்பட்டவர்களையும், நிறுவனங்களையும் இத்தகைய வலைப்பின்னல்கள் சம்பந்தப்படுத்த முடியும். இவற்றில் சில வருமாறு: ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மக்களை நகர்த்தும் வாடகை வண்டிச் சாரதிகள், முச்சக்கர வண்டிச் சாரதிகள், 'ட்ரக்' சாரதிகள்.

வகைப்படுத்தப்பட்ட செய்திப் பத்திரிகை, வானொலி விளம்பரங்கள், இணையத்தளம் ஆகியன ஊடாக ஆட்சேர்ப்பின் முறையொன்றாகப் பயன்படுத்தப்படுகின்ற ஊடகம்.

பாதுகாப்பு இல்லங்களாகப் பயன்படுத்தப்படுகின்ற ஹொட்டேல்களும், சாலையோர உணவு விடுதிகளும்.

போலியான ஆவணங்களை வழங்கும் மோசடிக்காரர்கள்.

பொதுச் செயற்பாட்டாளர்களின் வலைப்பின்னல்கள்

போலியான ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமும், குடியகல்வுக் கட்டுப்பாடுகளை மீறி நாட்டிலிருந்து சட்டவிரோதமாக உள்வரவுக்காக/வெளியேற்றத்திற்காக ஒழுங்கு செய்வதன் மூலமும், விசாரணைகளிலிருந்து மதுபானசாலை, மற்றும் பாலியல் தொழில்விடுதி உரிமையாளர்களைப் பாதுகாப்பதன் மூலமும் ஆட்கடத்துவோருக்கு மோசடியிலான குடியகல்வு, பொலிஸ் மற்றும் வேறு அரசாங்க உத்தியோகத்தர்கள் உதவி செய்யலாம்.

**தொடரும்**

(தொடர்கதை - 9)

# தன்வினை

இறுதியில் தம்பி பொலிசைப் பற்றி நீ படங்களில பார்க்கேலப் போல உன்ர பொக்கற்றில கஞ்சாவையும் ஒரு குண்டையும் வைச்சிட்டு உன்ன போட்டுத்தள்ளிட்டுக் கதையை முடிச்சிடலாம். அதால அடக்க ஒடுக்கமாய் இரு இரண்டு வருசத்துக்குப் பிறகு அந்தப் பொட்டை விரும்பினா கூட்டிக்கொண்டு போய் வாழ். அதுக்கு முன்னம் அந்தப் பொட்டைக்கு பின்னால திரியிறது எண்டு கேள்விப்பட்டா ஏதாவது கேசில புக் பண்ணிலாடன் கட்ட வேண்டிவரும் என எச்சரித்து அனுப்பினாள்.

முருகேசு மாஸ்ரரும் வீட்டுக்கு புறப்படுவம் எண்டு வெளிக்கிட்டு வாசலுக்கு வர சேர் சேர் என பரிதாபமாய் ஓர் குரல் அவரை அழைக்கத் திரும்பிப் பார்க்கிறார். டொக்ரர் கையை கூப்பியபடி சேர் இவ்வளவு நேரமும் உங்களை பார்த்துக்கிட்டிருந்தன். பிளீஸ் சேர் எனக்கு ஒரு கெல்ப் செய்யுங்க. உங்களை எனது கண்கண்ட தெய்வமாகக் கருதி என்னோட மகன்ர வாழ்க்கையை காப்பாத்தச் சொல்லி கேக்கிறன். பிளீஸ் உதவுங்க சேர் என டொக்ரர் முருகேசு மாஸ்ரரிடம் கெஞ்சியபடி காலில் விழுவதற்கு செல்கிறார். ஐயோ என்ன இது. நீங்களே பல உயிர்களைக் காப்பாத்திற தெய்வம் நீங்க என்ன தெய்வம் என்கிறியளே என முருகேசு மாஸ்ரர் கூற, ஐயோ சேர் மாதா, பிதா, குரு, தெய்வம் அந்த இடத்தில் தெய்வத்துக்கு முதல்படியா இருப்பதே நீங்க தான். அதைவிட டொக்ரராய், இஞ்சினியராய் உருவாகுவதற்கு காரணமே நீங்கதான். உங்களப்போல நல்ல ஆசிரியர்களால்தான் எங்களைப் போன்ற டொக்ரர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்று தெரிந்தும் நான் அண்டைக்கு தப்பு



செஞ்சிட்டன். உப்பு திண்டவன் தண்ணி குடிச்சுத்தான் ஆகோணும். தப்பு செஞ்சவன் தண்டனையை அனுபவிக்கணும். செய்தவினை இண்டைக்கு என்னை உங்களிட்ட மன்னிப்பு கேட்க வைக்குது. தயவுசெய்து மன்னிச்சு எனக்கு உதவி புரியுங்க. என்ர மகன் செய்த தப்புக்குத் தண்டனை அனுபவிக்கத்தான் வேணும். ஆனா அவனோட சேர்ந்த புள்ளையள் தண்டனையை அனுபவிக்கப் போகுதுகள். அதுகளுக்கு இஞ்சினியர், டொக்ரர் என்று போஸ் வந்திருக்குதுகள். கோட் கேஸ் என்று போனா நாளைக்கு அது அரச வேலையளுக்கு பிரச்சனை ஆயிடும். சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக அரசாங்க வேலை கிடைக்காம போயிடும். செய்த தப்புக்குத் தண்டனை வேணும். ஆனா கோட்டுக்கு விடாம எத்தனை நாள் எண்டாலும் பொலிஸ்ரேசனில வைச்சு நல்ல சாத்து சாத்தி புத்தி புகட்டி அனுப்பச் சொல்லி இன்ஸ்பெக்ரரிட்ட சொல்லுங்கோ. உங்களுக்கு நல்ல செல்வாக்கு இருக்கு பிளீஸ் எனக்கு ஒரு உதவியாய் செய்யுங்கோ. காலகாலத்துக்கும் உங்களை மறக்கமாட்டன் என்று டொக்ரர் கெஞ்சிக் கொண்டிருக்கும்போது இன்ஸ்பெக்ரர் பொடியனும் அதைக்கேட்டுக் கொண்டிருந்தான். அவனும் அங்குவந்து டொக்ரர் ஐயா நீங்க சொல்றது சரி. நான் சேருக்காக என்ன உங்கட பிள்ளையளின்ர எதிர்காலத்துக்காக நான் விடத் தயார். ஆனா நீங்க பிள்ளைகளுக்கு புத்திமதி சொல்லி வளர்க்கத் தயாரா சட்டப்படி உங்க பையனை கைதுசெய்து Fiv போட்டாச்சு. ஆனா அதிலும் மாற்றம் செய்யலாம். ஆனா நீங்க சமூகத்தையும் உங்கட பிள்ளையையும் திருத்த வேணும். வெறும் ஆடம்பரம் வாழ்க்கை இல்லை. வெறுக்கும்படி போதை இன்பம் தராது என்பதை சமூகத்துக்குப் புரிய வைக்கணும்.

சேரை மாதிரி சமூகத்தை முன்னேற்ற விரும்பிறவர்களை ஊக்குவிச்சு சீரழிஞ்சு போய்க் கொண்டிருக்கும் சமுதாயத்தையும் எமது கல்வியையும் சீர்செய்ய வேணும். அதற்கு நீங்க சம்மதம் என்றா நான் இப்பவே உங்கட பிள்ளையை விடுதலை செய்கிறேன்.

ஊராருக்கு உபதேசம் செய்றதைவிட உங்கட பிள்ளைக்கு உபதேசம் சொல்லி வளவுங்க எனக் கூறியபடி தனது காவலாளியை அழைத்து டொக்டரின் மகனையும் விடுதலை செய்தான். மூன்று நாட்கள் ஜெயில் வாழ்க்கை. டொக்ரரின் மகனுக்குள் ஏதோ ஓர் மாற்றத்தை உண்டுபண்ணியது போலும் ஓடோடி வந்து தந்தையின் காலிலும் முருகேசு மாஸ்ரரின் காலிலும் விழுந்து எல்லாரும் என்னை மன்னிச்சிடுங்க, எனக்கு சமூகத்துக்கை தலைகாட்ட வெட்கமாய் இருக்கு. உங்க மானத்தை கப்பல் ஏத்தினதுக்கு மன்னிச்சிடுங்க. நான் திருந்திட்டன். எனி நான் தப்புச் செய்யமாட்டன் எனக் கூற,


சரி தம்பி உன் மனசில இருந்து இந்த வார்த்தை வந்ததே நீ திருந்தினதுக்கு சரி அதைவிட பெரியவங்க காலில வீழந்தபோதே நீ திருந்திட்டாய் என்பதன் அறிகுறி தென்படுகிறது. நானும் உன்னை மன்னிச்சிட்டன். வா வீட்டை போகலாம் எனக் கூறியபடி டொக்ரர் முருகேசு மாஸ்ரரின் பக்கம் திரும்பி நன்றி சேர் வாங்க சேர் எனது காரில உங்கட வீட்டை கொண்டு போய் விட்டிட்டு போறன் எனச் சொல்ல

சீ நான் பக்கத்திலதானே நடந்து போயிடுவன். இப்ப எத்தின நாளாய் தாய் பிள்ளையைத் தேடி சோர்ந்து போய் இருக்கும் நீங்க பிள்ளையை வீட்டை கூட்டிக் கொண்டு போங்கோ என முருகேசு மாஸ்ரர் கூறினார்.

இல்ல சேர் நீங்களும் எங்களோட வாங்க. பிளீஸ் சேர் நீங்களும் வாங்க என தந்தையும் மகனும் கெஞ்சிக் கேட்க முருகேசு மாஸ்ரர் அவர்களது வாகனத்தில் ஏறி வீட்டை நோக்கி புறப்பட்டுச் சென்றார்.

காந்தி

(முற்றும்.)






No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com



(07 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# திருமலையில் தமிழ்...

காலியாகிக் கொண்டிருந்த த.ப.க.இயக்கத்தின் கஜானாவை மீளநிரப்பிக்கொள்ள தமிழ் பல்கலைக்கழக கட்டட நிர்மாணத்துக்கென ஆகக்குறைந்த விலையில் வாங்கப்பட்ட நிலங்களை படிப்படியாக அவ்வப்போதைய சந்தை விலைக்கு விற்பனை செய்வது என்ற முடிவைத்த விரவேறுவழி முதிய தலைமைக்கு இருக்கவில்லை. இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் காணப்பட்டவர் கிறிஷ்ண தாசனாகும். இவரது செயற்பாடுகள் அனைத்தும் பொதுவாக திருகோணமலை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியையும், எதிர்ப்பையுமே சம்பாதித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

த.ப.க.இயக்கத்தின் நிலங்களை விற்பனை செய்வது என்ற முதியவர்களின் முடிவு, தீவிர சமூகப்பற்றுக் கொண்ட இளமட்ட உறுப்பினர்களான தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஜீரணிக்க முடியாததொன்றாகக் காணப்பட்டது. அவர்கள் இம் முடிவை தமிழ் சமூகத்துக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகக் கருதினர். எனவே முதியதலைமையின் தீர்மானத்தை எப்படியாவது முறியடிப்பது என கங்கணம் கட்டி தீவிரமாக செயலில் இறங்கினர். இதன் பிரதிபலனாக த.ப.க. இயக்கத்தின் நிர்வாகம் நேர்மையும், அர்ப்பணிப்பும். கொண்ட நல்லவர்களின் கைகளுக்கு மாறியது. இம்மாற்றத்துக்காக முன்நின்று உழைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் கொழும்பில் சட்டத்தரணிகளாக பணிபுரிந்தவர்களுமான திரு. ரவீந்திரா, திரு. பத்மநாதன் ஆகியோராகும்.

த.ப.க.இயக்கத்தின் நீண்ட கால வரலாற்றில் 1973இற்கும் 1980இற்கும் இடைப்பட்ட ஏழு வருடகால வரலாறே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பேறுகால வரலாறாகும்.

த.ப.க.இயக்கத்தின் புதிய தலைவராக நேர்மையும், தன்னலமற்ற சேவை மனப்பான்மை கொண்டவரும், அரசியல் பதவிகளில் நாட்டமற்றவரும், மூத்த சட்டத்தரணியுமான அமரத்துவமெய்திய திரு. மாணிக்கவாசகர் கனகரெத்தினம் (மாணிக்ஸ்) தெரிவுசெய்யப்பட்டார். பொதுச் செயலாளராக முன்னாள் கிரிக்கட் சபைத் தலைவரும், பிரபல வர்த்தகருமான திரு. சந்திரா ஷாப்ரரும், பொருளாளராக பட்டயக் கணக்காளரான திரு. சூசைதாசனும் தெரிவு செய்யப்பட்டனர் (இவர் 1977 பொதுத் தேர்தலில் த.வி.கூட்டணியின் மன்னார் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்) பட்டமரமாக சரிந்து விழும் நிலையில் காட்சியளித்த த.ப.க.இயக்கம் புதிய தலைமைத்துவத்தின் முயற்சியால் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது என துணிந்து சொல்லலாம். இலங்கை பூராவும் பரந்து வாழ்ந்த தமிழ் மக்கள் வாரிவழங்கிய பெரும்தொகைப் பணம் அம்மக்களுக்கு எதுவித பயனுமின்றி வீணேவிரயமாக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு வக்கற்ற வங்குரோத்து நிலையில் காலியான கஜானாவுடனான த.ப.க.இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை மா.கனகரெத்தினம் தலைமையிலான புதிய நிர்வாகம் பெறுப்பேற்றுக் கொண்டமையானது அவர்களது உறுதிக்கும், நேர்மைக்கும், சமூகப் பற்றிற்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

புதிய தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மா. கனகரெத்தினம் தலைமையிலான புதிய நிர்வாகம் த.ப.க. இயக்கத்தை புனருத்தாரணம் செய்யும் பணியை சவாலாக ஏற்று செயலில் இறங்கியது. நெடுங்கேணி "நாவலர் தோட்டம்" 500 ஏக்கர் பண்ணையை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை தனது சொந்தச் செலவில் அபிவிருத்திசெய்ய கட்டட படவரைஞராக நீண்ட காலம் வெளிநாடுகளில் பணியாற்றி விட்டு 1972இல் நாடு திரும்பிய சொலமன். அருளானந்தம் டேவிட் முன்வந்தார். நாவலர் தோட்டத்துக்குரித்தான உடமைகளுடன் உப்புவெளி பயிற்சி நிலையத்திற்குரியதான உழவு இயந்திரமும் எஸ்.ஏ. டேவிட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

அடுத்ததாக உப்புவெளி பயிற்சி நிலையத்தை புனரமைக்கத் திட் டமிடப்பட்டது அதற்கான நடவடிக்கைகளை திட்டமிடுவதற்காக மா.கனரத்தினம் தலைமையில் க.தங்கமயில், ரவீந்திரா, பத்மநாதன் ஆகியோர் உப்புவெளி பயிற்சி நிலையத்திற்கு விஜயம் செய்தனர். அங்கு பயிற்சி நிலைய பணிப்பாளராக பணியமர்த்தப்பட்டிருந்த கால்நடை வைத்தியருடன் கலந்துரையாடினர். அவரிடம் குறிப்பிட்ட ஒரு தொகையை மூலதனமாக கையளிப்பதாகவும் அந்த மூலதனத்தைக் கொண்டு அவர் கமத்தொழில் கால்நடை பண்ணையை அபிவிருத்தி செய்து, அவ்வருமானத்தில் இலவச பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும், என்ற எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் அடிப்படையில் பயிற்சி நிலையத்தை பொறுப்பேற்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். இச்செயற்திட்டத்தை நிராகரித்த பணிப்பாளர் உவர் நிலத்துக்குரிய புல்லைத்தவிர வேறெந்த பயிர்ச்செய்கையையும் அந்நிலத்தில் மேற்கொள்ள முடியாது எனக்கூறி பயிற்சி நிலைய பணிப்பாளர் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார்

மேற்படி நிலையத்தினை புனரமைக்கும் பொறுப்பை ஏற்க எவரும் முன்வரத் தயங்கினர். த.ப.க இயக்கத்தின் நிதி நிலைமையே உப்புவெளி பயிற்சி நிலைய விவகாரத்தில் எவரும் பொறுப்பேற்க தயங்கியமைக்கான பிரதான காரணியாகும். இவ்வாறான சூழலில் மேற்படி பணிக்கு பெருத்தமான ஒருவரை நியமிக்கும் பொறுப்பு தலைவர் என்ற வகையில் மா.கனகரெத்தினம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ் ஒப்புயர்வற்ற பணியை செவ்வனே செய்து முடிக்கக்கூடிய ஒருவராக த.ப.க. இயக்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான பிரபல சட்டத்தரணி எல்.ஏ.ரி.வில்லியம்சை மேற்படி பணிக்கு பொருத்தமானவராக மா.கனகரெத்தினம் அவர்களால் தெரிவு செய்யப்பட்டு பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்குத் துணையாக திருகோணமலை தொடர்பில் உண்மையான அக்கறை கொண்டவரும் த.ப.க.இயக்கத்தின் நீண்டகால உறுப்பினரும், நிறைவேற்றுக்குழு உறுப்பினருமாகிய க.தங்கமயில் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## தவத்தாய் மாதாஜீ (Inline image 2)

பாகம் – 2

எல்.ஏ.ரி.வில்லியம்ஸிடம் ஒப்படைக்கப்பட்ட பணி மிகப் பெரியதாகும். புனரமைக்கப்படும் பயிற்சி நிலையமானது, தமிழ் சமூகத்துக்கு நிரந்தரபயன் அளிக்கக்கூடியதாகவும் கமத்தொழில். கால்நடை வளர்ப்பு செயன்முறை பயிற்சியை மட்டும் மையமாகக் கொள்ளாது, சுயதொழில், தொழில் நுட்பபயிற்சி நெறிகளையும் உள்ளடக்கியதான இலவச பயிற்சி நிலையமாக மாற்றியமைக்க வேண்டும் என்பதாகும். கம்பனிகள் மற்றும் வருமானவரி சட்டத்துறையில் முன்னணி சட்டத்தரணிகள் வரிசையில் ஒருவராகவும் கொழும்பின் முன்னணி கம்பனிகள் பலவற்றின் சட்ட ஆலேசகராகவும், இலங்கை சட்டக்கல்லூரியில் கம்பனிகள் சட்ட பாடத்தின் பகுதி நேர விரிவுரையாளராகவும் பரீட்சார்த்தியாகவும் பணிபுரிந்து கொண்டிருந்தவரும், கரடுமுரடான பொதுப் பணிகளில் ஈடுபட்ட அனுபவம் அற்றவரும், பொது விவகாரங்களில் தலையிட்டு பிரபல்யம் தேடுவதும், அரசியல் பதவிகளுக்காக அலைந்து திரிபவர்களை வெறுப்பவருமான எல்.ஏ.ரி. வில்லியம்ஸ் அவர்களின் சமூக அந்தஸ்து தொழில் ரீதியாக அவர் பெற்றிருந்த பிரபலமும், கொழும்பு வாழ் உயர் மட்ட சமூகம் அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கை போன்றவற்றை மூலதனமாகக் கொண்டு மேற்படி பணியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையிலேயே மா.கனகரெத்தினம் எல்.ஏ.ரி. வில்லியம்சை இந்தப் பணிக்கு பொருத்தமானவராகத் தெரிவு செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

**Thinacheithi Weekly Newspaper Advertisement Rate Card**

| PagesSizes | (col /cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x40 | 40000 . 00 | 50000 . 00 |
| Half page | 08x20 | 20000 . 00 | 25000 . 00 |
| Qatar page | 04x20 | 10000 . 00 | 12500 . 00 |
| Per col /cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |

**Front Page**

| | | |
|---|---|---|
| Front strip ad | 10x5 | 10000 . 00 |
| Front height ad | 4x15 | 12000 . 00 |
| Per col /cm | 8x8 | 15000 . 00 |

**Ear space**

| | | |
|---|---|---|
| Front Page | 8x8 cm | 25000 . 00 |
| Back page | 8x8 cm | 20000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black & White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**

Per col/cm 1x1 Black & White 120.00 Color 200.00

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# மக்கள் விடுதலை...

வேண்டிய பாதை என்ன என்பதைப் பற்றி கலந்துரையாடுவதற்காக கட்சியின் முன்னிலை வகித்தகுழு 1970 ஆரம்பத்தில் தெவிநுவரவில் கூடிக் கலந்துரையாடியது. பொதுத்தேர்தல் 1970 மே 27ஆம் திகதியே நடைபெறவிருந்தது. 1970 முற்பகுதியில் தெவிநுவரவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேர்தலின்போது அமைப்பு பின்பற்ற வேண்டிய வழி முறைகள் பற்றிய கலந்துரையாடலாகவே அமைந்தது. அப்போது ஜே.வி.பி இளம்பருவ அமைப்பாகும். 1970 தேர்தலில் போட்டியிடும் தகைமை அதற்கு இருக்கவில்லை. அதனால் தேர்தலில் போட்டியிடும் யோசனையை முன்வைக்கவில்லை. ஆனால் தேர்தலின்போது மௌனமாக இருக்க முடியாது என்பதால் தேர்தல் பற்றி கட்சியின் நிலைப்பாட்டை தெரிவித்தாக வேண்டியிருந்தது. அப்போது ஐ.தே.க அமெரிக்க சார்பான பிற்போக்கு கட்சியாக இருந்தமையால் அது கட்சியை அடக்குமுறை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. மறுபுறத்தில் ஸ்ரீ.ல.சுக, ல.ச.ச.கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து ஐக்கிய முன்னணியை அமைத்திருந்ததுடன் ஸ்ரீ.ல.சு.க முற்போக்காக செயற்படுமென்ற எண்ணமும் இருந்து வந்தது. இந்த நிலைமைகளின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்க வேண்டியிருந்ததால், கட்சிக்கு ஜனநாயக சூழலில் செயற்பட வேண்டியிருந்ததாலும் ஐ.தே.கவைவிட ஸ்ரீ.ல.சு.கட்சி முற்போக்காக செயற்படும் என்ற எண்ணம் இருந்தமையாலும் இந்தத் தேர்தலில் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. (ஆனால் 1971 போராட்டத்தின் பின்னர் கட்சி எடுத்த முடிவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தி சுயவிமர்சனரீதியாக திரும்பி பார்த்தபோது இந்த முடிவு சரியானது அல்ல என்பதை இனங்கண்டது)

எவ்வாறாயினும் 70 தேர்தலில் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்து அதற்கான தெளிவுடனான துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஐக்கிய முன்னணிக் கூட்டிற்கு முதலாளித்துவ நெருக்கடிக்கு தீர்வில்லையெனவும் அதனால் சோஷலிசத்தை கட்டியெழுப்ப வேண்டுமெனவும் ஐக்கிய முன்னணிக்கு உதவிசெய்வது ஐ.தே.கவை தோற்கடிப்பதற்கும் ஜனநாயகத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. இந்த துண்டுப் பிரசுரத்தை வெளியிடுவதற்காக அமைப்பை குறிப்பிட்ட பெயரால் அறிமுகப் படுத்தவேண்டுமெனவும், அதற்காக பல பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ள போதிலும் இறுதியாக மக்கள் விடுதலை முன்னணி எனும் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கிணங்க கட்சிக்கு மக்கள் விடுதலை முன்னணி எனும் பெயர் வைக்கப்பட்டது. 1970இல் இடம் பெற்ற தெவிநுவர கலந்துரையாடலிலாகும்.

அமைப்பின் பெயர் மக்கள் விடுதலை முன்னணியென அழைக்கப்படுவதற்கு மிகத் தெளிவான அரசியல் காரணங்களுடனாகும். சரியென்றால் கட்சியின் பெயர் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ கிளை) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனகிளை) ஆக இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் இருந்தமையினால் கம்யூனிஸ்ட் எனும் பதத்தை இக்கட்சிகள் சீரழித்திருந்தன. அதன் காரணமாக இத்தருணத்தில் அமைப்பின் பெயர் கம்யூனிஸ்ட் கட்சியாக பெயரிடுவது பாதகமான நிலையைத் தோற்றுவித்திருக்கும். மறுபுறத்தில் அமைப்பு இன்னமும் யாப்பு ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சியாக மாறியோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருக்கவேண்டிய குணவியல்புகளையோ கொண்டிருக்கவில்லை. அதனால் எதிர்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாட்டின் இடைநிலைக் காலமாக அதற்கு மக்கள் விடுதலை முன்னணி என்று பெயர் சூட்டப்பட்டது.

### தோழர் விஜேவீர கைது!

மறுபுறத்தில் இது ஜே.வி.பி.யின் மூலோபாயத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது. ஜே.வி.பி. ஏகாதிபத்திய விரோத அமைப்பாக இருப்பதுடன் இதன் தந்திரோபாயம் தேசிய விடுதலைப் போராட்டமாகும். மக்களுக்கு விடுதலையை கொண்டு வருவதற்கான முன்னணியின் தேவையும் காணப்பட்டதுடன் மக் கள் விடுதலை முன்னணி எனும் பெயரை பயன்படுத்துவதற்கு அதுவும் ஒரு கார ணமாக அமைந்தது. இந்த சகல விடயங் களுக்கும் ஏற்றவாறு அமைப்பு மக்கள் விடுதலை முன்னணி என பெயர் வைக்கப் பட்டதுடன் அப்பெயரில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது அரசியல் செயற்பாடாக, ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்கும்படி கேட்டு துண்டுப் பிரசுரம் வெளியிட்டமையாகும்.

ஜே.வி.பி அண்மையில் வரும் தேர்தலுக்காக இவ்வாறு தயாரானபோது ஐ.தே.க அரசாங்கம் ஜே.வி.பியை அடக்குமுறை செய்வதற்காக ஒரு வருட நடவடிக்கைகளாக எடுத்து வந்தது. 1970களில் கட்சியைப் பற்றி தேடுவதற்காக சேகுவேரா பியூரோ எனும் உளவுப் பிரிவைத் தொடங்கியது. இரகசிய பொலிசாரின் விஷேட பிரிவாக உருவாக்கப்பட்ட பியூரோ ஜே.வி.பி.யின் தகவல்களை திரட்டுவதற்காகவே உருவாக்கப்பட்ட ஒன்றாகும். 1969இல் கம்யூனிஸ்ட் கட்சி ஜே.வி.பி மீது சீ.ஐ.ஏ லேபலை ஒட்டியது போன்று 1970களில் லேக்ஹவுஸ் பத்திரிகையும் ஜே.வி.பி.மீது சேகுவேரா நாமத்தைச் சூட்டியது. அரசாங்கத்தின் அடக்கு முறையானது இந்த பியூரோ (உளவுப்பிரிவு) அமைத்ததோடு நிற்க வில்லை. அதன் பின்னர் ஜே.வி.பி செயற்பாட்டாளர்களை வேட்டையாட ஆரம்பித்தது. அப்போது ஜே.வி.பி.யின் முக்கிய செயற்பாட்டாளராக இருந்த ஆசிரியர் தோழர் பேமசிறி சிறிவர்தன 1970 மே 01ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். (பொலிசாரால் கைது செய்யப்பட்ட முதலாவது ஜே.வி.பி அங்கத்தவர் சுமித் அத்துக்கோரல என்றழைக்கப்படும் (தியோனிஸ் நந்தசிங்க விஜேநாயக்க) தோழராவார். 1970 ஆரம்பத்தில் முத்தியங்கனை பன்சலையில் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் தோழர் ரோகண விஜேவீராவின் பின்னால் பின்தொடர ஆரம்பித்தனர்.

அரச அடக்குமுறையின் காரணமாக தோழர் ரோகண விஜேவீர பாதுகாப்பாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் அவர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஜூல்கமுவ பிரதேசத்தில் இரகசியமாக மறைந்திருந்தார். தோழர் ரோகண விஜேவீர தங்கியிருந்த வீட்டில் வீட்டுக்காரர் எவருக்கும் அவர் யாரென்பது தெரிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இறுதியில் 1970 மே 12ஆம் திகதி இரகசிய தகவலின்படி செயற்பட்ட பொலிசார் தோழர் ரோகண விஜேவீராவை கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட நபரொருவர் 24 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவரை அவ்வாறு செய்யாது தோழர் ரோகண விஜேவீராவை கொழும்பு இரகசிய பொலிஸ் தலைமையகத்துக்கு கொண்டு வந்து கையடையாளத்தையும் புகைப்படத்தையும் பெற்றுக்கொண்டு நுவரெலியா நீதிபதியிடம் ஆஜர்படுத்தி சிறையில் தடுத்து வைத்தனர். அப்போது பொலிசார் திட்டமிட்டு செயற்பட்டிருந்தனர். அதன்படி அவர்களின் அறிக்கை புத்தகத்தில் ஜூல்கமுவையில் கைது செய்யப்பட்ட தோழர் ரோகண விஜேவீர அங்கு விடுதலை செய்யப்பட்டதாகவும் பின்னர் ஒரு துப்பாக்கியுடன் நுவரெலியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிசார் குறிப்பிட்டிருந்தனர். துப்பாக்கியுடன் நுவரெலியாவில் கைதுசெய்யப்பட்டார் என்பது பொலிசாரால் சோடிக்கப்பட்ட கதையாகும். எவ்வாறாயினும் தோழர் ரோகண விஜேவீர கைது செய்யப்பட்டதுடன் கட்சியினுள் மீண்டும் நெருக்கடி நிலை தோன்றியது. கட்சியின் உள்ளக நெருக்கடி மீண்டும் தலைதூக்கியது.

### விடுதலையான விஜேவீர

1970 மே 27ஆம் திகதி பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டதுடன் அதன்போது ஐ.தே.க தோறகடிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஐக்கிய முன்னணி ஆட்சிபீடமேறியது. ஆனால் புதிய அரசாங்கத்தின் கீழும் ஜே.வி.பிக்கு எதிரான அடக்குமுறை எண்ணத்தில் மாற்றமடையவில்லை. இவ்விடத்திலிருந்து ஜே.வி.பிக்கு அரச அடக்குமுறையும் கட்சியின் உள்ளக நெருக்கடியின் மத்தியிலேயே செயற்படும் நிலைதோன்றியது. இதன் மூலமாகவே 1971 போராட்டம் தோன்றுவதற்கான காரணமாக அமைந்தது. அவைகளை அடுத்த இதழில் ஆழமாக ஆராய்வோம்.

(தொடரும்)

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# வில்பத்துவில் ...

பிரதான விடயம். இங்கு அமைச்சரினாலும் அமைச்சரின் மூலோபாய உத்திகளைப் பாவிப்பது அமைச்சர் அடிக்கும் இடத்தையல்ல பிடிப்பது. அமைச்சர் அவர்கள் எப்பவுமே இந்த எல்லையின் வெளியே பிடித்துக் கொண்டே சப்தமிடுகின்றார். இதனை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இவை வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய காணிகள். இது 1907இல் 1978ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் சட்டத்திற்கு ஏற்ப வனாந்தரத்திற்குரிய காணிகளாகவே வனப் பாதுகாப்புக்குரிய காணிகள் குறிக்கப்படுகின்றது.

### ஹிரு தொலைக்காட்சி – அது எந்தக் காணிப் பிரதேசம்?

பகியங்கள ஆனந்த சாகல தேரர் – இது கல்லாறு வனாந்தரம். மரிச்சிக்கட்டு கரக்குளி என்ற வனாந்தரம். நான் இவை பற்றிய தெளிவான விடயங்களுக்கு வருகின்றேன். இந்த வர்த்தமானி பற்றி குறிப்பிடும் போது இது கொழும்பிலிருந்து ஜீ. பி. எஸ் ஊடாகச் செய்தது எனக் கூறப்பட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் இதனைச் செய்தது சுற்றாடல் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா. அப்போது இவர் மீள்குடியேற்ற அமைச்சின் அமைச்சர். ஒரே அமைச்சரவையின் உறுப்பினர்கள். ஒன்றாக அமைச்சுக்களைச் செய்தவர்கள். இன்று காட்டை அழித்து விடயம் பெரிதாகியதால்தான் இவை ஜீ. பி. எஸ் ஊடாகச் செய்யப்பட்டிருக்கின்றது என்று கூறுகிறார்.

இப்போது பாருங்கள். இந்த வனாந்தரத்தை வர்த்தமானியில் அறிவித்தது நான் அந்த வர்த்தமானியைக் காட்டுகிறேன். இந்த வர்த்தமானி 2012ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பத்தாம் திகதி 1779இன் கீழ் 5 என்ற இலக்க வர்த்தமானியில் இதன் எல்லைகள் தெளிவாக உள்ளது. வடக்குக்கு, தெற்குக்கு, மேற்குக்கு, கிழக்கிற்கு என எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

(தொடரும்)

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பத்திரிகை நிறுவனமொன்றிற்கு பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01. கணக்காளர்**

இத்துறை சார்ந்து அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். அனுபவம், தகுதிக்கேற்ற வகையில் ஊதியம் வழங்கப்படும்.

**02. விநியோக முகாமையாளர்**

பத்திரிகை விநியோகத்தில் அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கலாம்

**03. பக்க வடிவமைப்பாளர்கள்**


(Corel Draw, Photoshop, Pagemaker, In Designing) அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**04. உதவி ஆசிரியர்கள் - ஒப்புநோக்குநர்**

**பத்திரிகைத்துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது**

**விண்ணப்பங்களை 31.01.2016 க்கு முன் அனுப்பி வைக்கலாம்.**

முகவரி : தில்லைகட்டி லேன் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.



வேப்பமரம் இருக்கும் இடத்தில் தொற்று நோய் பரவாது. வேப்பமரக் காற்றைச் சுவாசித்து வந்தால் மனம் சாந்தமடைவது டன், புத்தி சுவாதீனம் அற்றவர்களும் குணமடைவார்கள்.

ஆகவேதான் பல ஊர்களில் அம்மன் கோவில்களிலும், காளி கோவில்களிலும் புத்தி சுவாதீனமற்றவர்கள் அங்கு தங்கி யிருந்து குணம் அடைந்து வருவதை அவதானிக்க முடியும்.

உலகத்திலேயே நீண்டஆயுளைக் கொண்ட வெள்ளரசு மரம் அநுராதபுரத்தில் உள்ளது. இந்த மரத்தினை பௌத்தமதத்தினர் வணங்கி வருகின்றனர்.

இந்த வேப்பமரத்தின் Aiadtraehta Mica. தாவரவியற் பெயராகும். மார்கோசா (Margosa) என்று அழைக்கப்படும். வேப்பமரத்தை சிங்களத்தில் கொகம்பா (Kohomba) என்றும், இந்தியாவில் பொதுவாகவே நீம்மரம் (Neemtree) என்றும் அழைப்பார்கள்.

ஊரெழுவிலுள்ள கண்ணகி அம்மன் கோவிலின் வெளிப்பிரகாரத்தில் ஒரு பெரிய சடைத்து வளர்ந்த வேப்பமரம் ஒன்று உள்ளது. இந்தக் கண்ணகி அம்மன் கோவில் பலாலி யாழ்ப்பாணம் வீதியில் அமைந்துள்ளது. இது சுன்னாகத்தில் இருந்து 5 Km தூரத்தில் அமைந்துள்ளது.

இந்த இணைந்த வேப்பமரம் நான்கு அடிப் பாகங்களைக் கொண்டுள்ளது. இந்த இயற்கைக்கு மாறான

# ஊரெழுவில் இணைந்த வேப்பமரம்

இணைந்த வேப்பமரம் உலகத்திலேயே அரிய மர மாகும். இவ்வாறு இணைந்த வேப்பமரம் உலகத்தில் வேறெங்கும் இல்லை.

கோவிலின் தீர்த்தத் திருவிழாக் காலத்தில் இந்த நான்கு அடிப்பாகமும் இணைந்த இடைவெளியில் மூல மூர்த்தியை அங்கே வைத்து பூசை செய்வார்கள்.

ஸ்தல விருட்சங்களை வணங்குவது இந்து சமயத்தில் பேணப்பட்டுவரும் வணக்க முறைகளில் ஒன்றாகும். இவ்வாறு விருட்சங்களை வணங்குவது ஏனைய மதங்களிலும் கடைப்பிடித்துவரும் ஒரு வழிபாட்டு முறையாகும். லெபனான் நாட்டின் தேசியக் கொடியில் தேவதாரு போன்ற ஒரு மரம் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. மேலும் ஆலமரம், அரச மரங்களும் இந்துசமயத்தில் தலவிருட்சங்களாக வணங்கப்படுகின்றன.

சித்த மருத்துவத்தில் இலை, பூ, காய், கட்டை, பட்டை, வேப்பம் பசை முழுவதும் மருத்துவத்திற்குப் பயன்படுகின்றன.

இந்த வேப்பமரம் இலங்கை இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நிறையக் காணப்படுகின்றன. தெற்கு ஈரான் தேசத்தி லும், தாய்லாந்திலும் வேப்பமரங்கள் உள்ளன. சூடான் நாட்டிலும் வேப்ப மரம் வளர்க்கப்படுகின்றன. இலங்கை, சூடான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் வீதியோரங்களின் இருமருங்கிலும் வேப்ப மரத்தை நாட்டி வளர்த்து வருகின்றார்கள்.

வேப்பமரங்கள் 10மீற்றர் - 11மீற்றர் உயரத்திற்கு வளர்கின்றன. அதன் அடிப்பாகத்தின் சுற்றளவு ஒன்று தொடக்கம் இரண்டு மீற்றர் வரை உள்ளன.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜன. 10, 2016 அன்று வெளியிடப்பட்டது.